அவனருளாலே அவன்தாள் வணங்கும் உறைப்பும் மறந்தேயும் தன் கழல் மறவாத் திறமும்



பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு ஏழாவது ஆண்டு நிறைவு விழா மலர்

முருகன் புகழ்பாடும் சபை

ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக்குழு, பெங்களூர்.


"மேவினோம் அவனடியார் அடியாரோடும்"

அவனருளாலே அவன்தாள் வணங்கும்
உறைப்பும்
மறந்தேயும் தன் கழல் மறவாத்
திறமும்



பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு
ஏழாவது ஆண்டு நிறைவு விழா மலர்

முருகன் புகழ்பாடும் சபை
ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக்குழு
(பதிவு செய்யப்பெற்றது)
பெங்களூர்.

சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்

கறங்கோலை போல்வதோர் காயப்
    பிறப்போடு இறப்பென்னும்
அறம்பாவம் என்று இரண்டச்சம்
    தவிர்த்தென்னை ஆண்டு கொண்டான்
மறந்தேயும் தன்கழல் நான்
    மறவா வண்ணம் நல்கிய அத்
திறம் பாடல் பாடிநாம்
    தெள்ளேணம் கொட்டாமோ

முன்னுரை

மாணிக்கவாசகர் திருவாசகம் ஒன்றே நமக்கு இம்மை மறுமைப் பேறுகளை ஒருங்கே உதவும் என்ற நம்பிக்கை,

ஒரே கடவுள் சிவபெருமான்
ஒரே குரு மாணிக்கவாசகர்
ஒரே நூல் திருவாசகம்
ஒரே மந்திரம் சிவாயநம
ஒரே அடையாளம் திருநீறு என்ற நெறி,

''எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்பது எல்லா உலகங்களையும் சொல்வதுபோல் ''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்பது தெற்கே திருக்கோண மலை முதல் கயிலைமலைவரை தென்னாடாம் என்ற முழக்கம், திருவாசக அன்பர்கள் மூச்சும் பேச்சும் ஒழுக்கமுமாக இருந்து வருகிறது.

பெரியபுராண வகுப்பு உணர்ச்சியின் எல்லையில் திருவாசக வகுப்பாகவே மாறியதை வகுப்பில் எல்லா வகுப்புகளிலும் கலந்துகொண்டவர்கட்கும், ஒருவகுப்பிலாகிலும் கலந்து கொண்ட வர்கட்கும் உற்ற உணர்ச்சி ஆகும்.

மூவர் தேவாரத்தை எடுத்துச் சொன்ன சேக்கிழார் மொழியும், தேவாரம் போல் ஓதி ஓதி நான்கு மலர்களில் வெளிப் படுத்திய நமக்கு திருவாசகமும் அப்படிப் பட்டதாக வேண்டும் என்ற விருப்பம் வகுப்பு தொடங்கிய நாள்முதல் இருந்து வந்ததே. ஆறாவது ஆண்டுமலர் வெளி வந்த உடனே **''சேக்கிழார் அருளிச் செயலில் திருவாசகம்''** தேடும் தொண்டு தொடங்கிவிட்டது. பெரியபுராண ஆசிரியரே மார்கழிமுப்பது நாளும் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி விரிவுரை ஆற்ற வேண்டிய பணி இருந்து வருவதால் திருவாசகம் திருக்கோவையார் தொடர்ந்து விளக்கம் பெற்றன.

திருவாசகம் ஓதி நால்வர் திருவுருவப் படம் நிறுவும் தொண்டு, இரண்டாவது ஞாயிறு தோறும் கயிலை அம்மையப்பர், சமயசந்தான ஆசிரியருடன் சேக்கிழாரும் அமைந்த படம் நிறுவி, திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியாய் அமைந்தது, திருவாசகம் ஓதும் தொண்டாகியது.

இந்த அடிப்படையில் சேக்கிழார் அருளிச் செயலில் திருவாசகம் தேர்ந்து எடுப்பது தேவாரம் தொடர்ந்த திருவாசக முயற்சி என்று கருதுகிறோம்.

சேக்கிழார் அருளிச்செயலின் 4286 பாடல்களை ஆளுக்கு 200 என வகுத்துத் தந்தோம்.

திருவாசகத்தின் 51 தலைப்புகட்கும் சேக்கிழார் மொழிகாண முயன்றோம்.

சேக்கிழார் பாடல்களுக்கு அடிப்படையான திருவாசகம் முழுப்பாடல்கள் தொகுக்கத் தொடங்கினோம்.

திருவாசகத்துக்கென்றே அமையும் பல பொருள் பகுதிகளையும் சேர்க்க விரும்பினோம்.

திருக்கோவையார் நானூறு பாடல்களையும் இம்மலரில் தொடர்ச்சியாகத் தந்துள்ளோம். அடியார்கள் திருக்கோவையாரை ஒரே மூச்சாக ஓதவும், பாடல்தோறும் பயின்றாடி வரும் ஆடலரசை வணங்கவும் இது துணை செய்யும் என்று நம்புகிறோம்.

திருவாசக இசையில் திருக்கோவையார் முழுதும் பாடலாம். அஃது அகவல் ஓதுவதாகவும் இருக்கலாம். ஆனந்த மாலை இசையாகவும் இருக்கலாம். திருவாசகம் அனைத்திற்கும் முல்லைத் தீம்பாணி என்கின்ற மோகன இராகம் முதல் தேவாரத்தின் 24 பண்களில் எவையாயினும் உருக்கம் தருகின்ற இந்தி, தமிழ் பாடல்கள் எவையாயினும் அவற்றைப் பயன்படுத்திப் பாடுவது நம் வழக்கமாக இருந்து வருகிறது.

திருக்கோவையார் போன்றே திருவாசகத்தின் எந்த இசையும் சேக்கிழார் பெருமான் அருளிச் செயல்கட்குப் பொருந்துவதாக உணர்ந்து பாடி வருகின்றோம்.

சேக்கிழார் மூவர் பெருமக்களின் ஒவ்வொரு தேவாரத்தையும் அவர்கள் பாடிய பண்கள் திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருவிருத்தம், திருத்தாண்டகம் இசையிலேயே பாடியிருக்கின்றார் என்றுணர்ந்து அவ்வவ் விசையில் பாடுவதும் நம் வழக்கமாக இருந்து வருகின்றது.

உழவாரப் பணியில் ஆண்ட அரசு உழவாரப் பணிக்குழுவின் முயற்சிகள் குறித்த செய்திகள் மலரில் இடம் பெற வேண்டுமென்றும் ஆசைப் பட்டோம்.

சேக்கிழார் மலரில் திருவாசகத் தேன் நுகர வேண்டுகின்ற,

30.5.2010

பெரிய புராணவகுப்பு
மாணாக்கர்கள்

2/2

திருவாசகத்தேன் – தேனீ

மாணிக்கவாசகர் சிவபெருமான் திருவடிமலரில் மட்டும் நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்பொதும் தேன் உண்டு அதனை உலகுக்குத் தந்ததே திருவாசகம் ஆகும். சிவ பெருமான் நினைதொறும் காண் தொறும் பேசுந்தோறும் எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரிபவர் என்று திருவாசகம் தேன் கிடைக்குமிடத்தைக் காட்டுகிறது.

அடியார்கள் தேன்வண்டுகளே. கருணையின் சூரியன் எழ எழ நயனக் கடிமலர் மலர்கின்றன. கதிரவனொளியை நேராகக் காண இயலா நமக்குக் அக்கதிரவன் கருணைக் கதிரவனாக வேண்டும். தேன் வண்டுகள் கதிரவனொளியை நேரில் காணும் வல்லமை யுடையன.

இத்தேன் நுகரும் முயற்சிக்கு மனிதர்கள் ஊன நாடகத்திலிருந்து ஞான நாடகத்திற்கு உயர வேண்டும். தேனீக்களும் தாம் நுகர்ந்த தேனைப் பிறர் நுகர பல நடனங்கள் செய்கின்றன என்றும் அவை 2000 இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

அடியார்கள் கூட்டம் தேனீக்கள் கூட்டமே. 'திரள்நிரை அறுபதம்' என்று திரள்வதையும் 'முரல்வன' என்று அவர்கள் பாடுவதையும் குறிக்கின்றது.

தேனீக்களைப் பற்றிய ஆய்வு நிகழ்த்திய அமெரிக்கர் ஒருவருக்கு நோபல் பரிசு 1973-இல் கிடைத்துள்ளது.

தேன் உணவும் மருந்துமாகும். பிறவிப்பிணி தீர்க்கும் மருந்தாகவும் வானோர் அறியா வளந்தரும் துணையாகத் திருவாசகம் உதவி வருகிறது; வரும்.

திருவாசகத்தில் நாய்

'நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே' என்று தொடங்கித் திருவாசகத்தில் 'நாய்' 69 இடங்களில் குறிக்கப் பெற்றுள்ளது. திருவாசகத்தில் விலங்குகள் என்ற பகுதியில் இன்னின்ன இடங்களில் குறிக்கப் பெற்றதைக் காணலாம். இத்துணை முறை குறிக்கப் பெற்றாலும் ஒவ்வொன்றும் தனித்தனிக் கருத்தை உணர்த்துவன என்பதைக் கருத்திருத்தி அன்பர்கள் இத்தொகுப்பு முயற்சியைப் பயன்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

உள்ளுறை

திருவாசகத்தின் தனிச்சிறப்புகள்

1. திருப்பள்ளி எழுச்சி காலையிலும், திருப்பொன்னூசல் வழிபாடு முடிவிலும் பாடப்பெறுதல்.
2. திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி ஒருங்கிணைந்து மார்கழித்திங்கள் முழுதும் ஓதப்பெறுதல்.
3. சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரன் என்று நினைக்கத் தொடங்குதலும் இறுதியில் ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ என்றோதி அமைதல்.
4. நித்த மணாளர் நிரம்ப அழகியர் என்று அம்மையப்பரை வழிபடுதல்.
5. அம்மையே அப்பா என்று ஒல்வொருவரும் வாழ்க்கைத் தொடக்கத்தில் சொல்லத்தொடங்கியதை அம்மா அப்பா என்று ஆவிகழியும் தருணத்திலும் சொல்லுவதால் அம்மையப்பர் வழிபாடு ஆதல் இயல்பாக அமைதல்.
6. சூடுவேன் பூங்கொன்றை வாடுவேன் பெயர்த்தும் மலர்வேன். பெருமான் திருவடிக்கான மலர் வாடாமலர்.

   தில்லைச் சிவனடிக்குத் தாரணி கொன்றையன் என்று திருக்கோவையாரில் சொல்லியுள்ளதால் நாம் பெருமான் திருவடிக்குக் கொன்றை மலராக இருக்க முயலுதல்.
7. ஊடுவதும் உன்னோடு உவப்பதும் உன்னை உணர்த்துவது உனக்கெனக்கு உறுதி.
8. வாழ்க்கையாகிய சிறுகாலை நாம் உறும் வாணிபத்துக்கு முதல் பொருளாக இறைவனே அமைவதை, போற்றி என் வாழ்முதலாகிய பொருளே எனல்.
9. நமச்சிவாய வாஅழ்க எனத் திருவாசகம் தொடங்கியது ஊதியமே என்று திருக்கோவையார் முடிதல்.
10. நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள்வாழ்க என்று அப்பனை வாழ்த்திய வாழ்த்து அம்மையெனக் கருளிய வாறு ஆர்பெறுவார் அச்சோவே என்று முடிதல்.
11. சாத்திரம் தோத்திரம் ஐயப் பாட்டிற்கு அணுகக் கூடிய நூல்.
12. மாணிக்க வாசகரே மகளிருக்காக 13 பதிகங்கள் பாடியவர் திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயில்பத்து, திருத்தசாங்கம்.

திருவாசகத்துக்கு அடியார்கள் செய்ய வேண்டுவன :

அ) மாணிக்க வாசகர் சொல்ல பெருமான் எழுதியதை ஓவியத்தில் உலகமெங்கும் விளங்குமாறு செய்தல்.

ஆ) ஏற்றுயர் கொடி கோயில்கள் தோறும் மேல் விளங்கி ஏர் காட்டுதல் வேண்டும்.

இ) ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்ற முழக்கம் நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் ஒலி பெருக்கியில் ஒலி பரப்பப் பட வேண்டும்.

ஈ) திருவாசகத்திற்கு வெளிவந்த உரைகள், திருவாசகத்திற்கு உலக மொழிகளில் வந்த மொழிபெயர்ப்புகளைத் தொகுத்தல்.

உ) இதுகாறும் திருவாசகத்தை அடிப்படையாக வைத்து முனைவர் பட்டத்திற்கு வெளிவந்த ஆய்வுரைகளை உலக பல்கலைக் கழகங்கள் அனைத்தினின்றும் பெறுதல்.

ஊ) மாணிக்கவாசகப் பெருமானையே சிவபெருமானாக வைத்து வழிபட்டு வரும் திருப் பெருந்துறை திருக்கோயிலை அடியார்கள் தம் வாழ் நாளில் ஒரு முறையாவது சென்று வழிபட்டு வர வேண்டும் என்ற உறுதியை வளர்த்தல்.

சித்தம், சிந்தை, சித்தர்

''சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை'' என்ற மணிமொழிக்கு ஈடாக சித்தம், சிந்தை, சித்தர், பயின்று வரும் திருவாசகம், பெரியபுராணம் தொகுப்பு முயற்சி எடுத்தோம். சில வருமாறு.

''சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச் சிந்தை மகிழ''

''சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று''

''சித்த மலம் அறுவித்து, சிவம் ஆக்கி எனை ஆண்ட அத்தன்''

திருத்தொண்டர் புராணத்தில் :
''சித்த நிலை திரியாத செய்பணியில் தலை நின்றார்''

''சிந்தை மகிழுஞ் சேரனார் திருவாரூர்''

திருச்சிற்றம்பலம்



முருகன் புகழ் பாடும் சபை;
ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக் குழு, பெங்களூர்.
பதிவு எண் : SJN - S193 2007-08, 20.02.2008.

திருத்தொண்டத் தொகை :

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன் - சுந்தரர்

திருவாசகம்

பாருருவாய பிறப்பறவேண்டும் ;
பத்திமையும் பெற வேண்டும் ;
சீருருவாய சிவபெருமானே !
செங்கமல மலர்போல்
ஆருருவாய என் ஆரமுதே உன்
அடியவர் தொகை நடுவே
ஒருருவாய நின் திருவருள் காட்டி,
என்னையும் உய்யக்கொண்டருளே ! - எண்ணப் பதிகம் 44/1.
(ஒழியா இன்பத்து உவகை)

பெரிய புராணம் :

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருளுடையோம். - பெரியபுராணம் திருஞா. 658

திருவாசகம்

கால முண்டாகவே காதல் செய்து உய்மின் கருதறிய
ஞாலமுண்டா னொடு நான் முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டான் எங்கள் பாண்டிப்பிரான்றன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே - திருப்பாண்டிப் பதிகம் 36/5
(சிவானந்த விளைவு)

தெய்வச் சேக்கிழார் அருளிய பெரிய புராணத் தொடர் சொற்பொழிவு
ஏழாவது ஆண்டு நிறைவுவிழா - ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக்குழுவின்
அறுபத்து நான்காவது திருப்பணி விழாமலர்
''அவனருளாலே அவன்தாள் வணங்கும் உறைப்பும்
மறந்தேயும் தன் கழல் மறவா வண்ணம் நல்கிய திறமும்'' வெளியீடு -

நாள் : 30.05.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 வரை
இடம் : மகான் ஸ்ரீ ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்
அலசூர் ஏரிக்கரை, கங்காதர செட்டித்தெரு, பெங்களூர்-42.

www.shaivam.org

அன்புடையீர், வணக்கம்.

தெய்வச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத் தொடர் சொற்பொழிவு 25.05.2003 அன்று தொடங்கப்பெற்று, 30.05.2004, 28.5.2005, 28.5.2006, 10.6.2007, 15.6.2008, 31.5.2009 ஆகிய நாட்களில் ஒன்று முதல் ஆறு ஆண்டு விழாக்கள் கொண்டாடினோம்.

முதலிரண்டு ஆண்டுவிழாக்களில் தேவார-பெரிய புராணப் பாடல்கள் தொகுத்துத் தாள்களாக வெளியிட்டோம். மூன்றாவது ஆண்டில் மூவர் தேவாரமும் சேக்கிழார் எடுத்துத்தந்தவையும் தொகுத்து மூன்றாவது ஆண்டு விழா மலரும், மூன்றாவது ஆண்டு விழா முடிந்த பின் 31.7.2005 அன்று ஆண்ட அரசு உழவாரத்திருப்பணிக்குழுவாக பெரிய புராண வகுப்பே இயங்கத்தொடங்கி நான்காவது ஆண்டில் 20.4.2007முடிய 25 உழவாரத் திருப்பணிகள் செய்ததையும் கொண்டாட "திலகவதியார் திருத்தொண்டின் உறைப்பும் திருநாவுக்கரசர் உழவாரத் திருப்பணியின் திறமும்." என்ற தலைப்பில் மலர் வெளியிட்டோம். ஐந்தாவது ஆண்டுமலர், "தீதிலாத் திருத்தொண்டத் தொகையின் உறைப்பும் அன்பு நீங்கா, அச்சமுடன் அடுத்த திருத்தொழுமைத் திறமும்", ஆறாவது ஆண்டு மலர் திருஞானசம்பந்தப் பெருமான் திங்கள் புனை முடியார்தம் தானந்தோறுஞ் சென்று தமிழிசை பாடுஞ் செய்கையின் உறைப்பும் திருத் தொண்டென்னும் வான்பயிர்தான் ஓங்குதற்குப் பெருவேலியான திறமும்... வெளியிட்டோம். இந்த மலர்களில் சேக்கிழார் எடுத்துத்த தந்த தேவாரம் முழுதும் இடம்பெற்றுள்ளன. சேக்கிழார் எடுத்துத்தந்த அவரது பாடல்களையும் தேவார இசையிலேயே பாடி வருகிறோம்.

ஏழாவது ஆண்டில் பெரியபுராண வகுப்பில் திருஞானசம்பந்தர் வரலாறு தொடர்ந்து காஞ்சிமுதல் திருவாலங்காடு வரையும் திருத்தல வழிபாடு திருக்காளத்தியில் கயிலை, திருப்பருப்பதம், திருக்கேதாரம் இந்திர நீலப்பருப்பதம், கோகர்ணம், அநேக தங்காவதம் ஆகியதலப் பதிகங்கள், திருவிற்காடு – திருவேற்காடு பதிவழிபாட்டின் போது மூர்க்க நாயனார் வரலாறும் கண்டோம்.

இந்த ஏழாவது ஆண்டு விழா மலர் மாணிக்க வாசகப்பெருமான் பற்றிய சிறப்பு மலராக வெளிவர திருவருள் கூட்டியுள்ளது. பெரிய புராண வகுப்பில் திருவாசகம் இயல்பாக வெளிப்பட்ட இடங்கள் மிகப்பல. உணர்ச்சியில் பெரியபுராண வகுப்பு திருவாசக அரங்காக மாறியதை உணர்ந்து போற்ற இந்த மலர்க்குத் தலைப்பு "அவனருளாலே அவன் தாள் வணங்கும் உறைப்பும் மறந்தேயும் தன்கழல் மறவாத் திறமும்". என்பதும் அமைந்தது.

திருஞானசம்பந்தர் வரலாறு 'புனிதவாய் மலர்ந்தழுதார்' என்ற நாடகமாக வெளிப்பட்டதுபோல் மாணிக்கவாசகர் வாலாறு, 'ஞானநாடகம் ஆடுவித்தவன்' என்ற நாடகமாக வெளிப்படவுள்ளது.

'அன்னைப்பத்து'. 'திருவுந்தியார்' ஆகிய இரண்டு பதிகங்கள் முழுதும் கோலாட்டமாக வெளிப்பட்டதுபோல் திருச்சாழல் – வினாவிடைப் பகுதி நாட்டியமாக அமைக்க இருக்கிறோம்.

இந்த ஏழாவது ஆண்டு நிறைவுவிழா அழைப்பு நிகழ்ச்சிக் குறிப்பைக் கண்ணுற்று எல்லா நிகழ்ச்சிகளிலும் தெய்வச்சேக்கிழார் குருபூசையிலும், கலந்துதவுமாறு வேண்டுகிறோம்.

மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கருணை அடியார் குலாவு நீதி குணமாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறை எம் புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே! – திருவார்த்தை 43-1. (அறிவித்து அன்புறுதல்)

எண்ணிலேன் திருநாமம் அஞ்செழுத்தும் என் ஏழைமை யதனாலே
நண்ணிலேன் கலைஞானிகள் தம்மொடு நல்வினை நயவாதே
மண்ணிலே பிறந்து இறந்து மண்ணாவதற்கு ஒருப்படுகின்றேனை
அண்ணல் ஆண்டு தன் அடியரில் கூட்டிய அதிசயங் கண்டாமே! – அதிசயப்பத்து 26-6. (முத்தி இலக்கணம்)

மாயனே மறிகடல் விடம் உண்ட வானவா மணிகண்டத்தெம் அமுதே
நாயினேன் உனை நினையவும் மாட்டேன் நமச்சிவாயஎன்று உன் அடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய் பிறைகுலாஞ்சடை பிஞ்ஞகனேயோ
சேயன் ஆகி நின்றலறுவது அழகோ திருப்பெருந்துறை மேவியசிவனே – செத்திலாப்பத்து. 23.7
(சிவானந்தம் அளவறுக்கொணாமை)

இப்படிக்கு
முருகன் புகழ்பாடும் சபை;
ஆண்ட அரசு உழவாரத் திருப்பணிக் குழு அடியார்கள்.

www.shaivam.org

நிகழ்ச்சி நிரல்

நாள் : 30.05.2010 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை

இடம் : சோதி மன்றம், ஒடுக்கத்தூர் மடம்

இறைவணக்கம் : திருவாட்டி சந்திரா சிவகுமார்
திருவாட்டி விசயலட்சுமி

நிகழ்ச்சித் தொகுப்பாளர் : திரு. கோபால், வகுப்பு மாணவர்

காலை 07.30 - திருவமுது
08.45 - திருத்தொண்டத்தொகை
09.00 - இறைவணக்கம்
09.15 - வரவேற்புரை
09.30-12.30 - திருமுறை விண்ணப்பம்
(திருவாசகம் திருக்கோவையார் சிறப்பு நோக்குடன்)
திருமுறை இசை மாமணி பா. சற்குரு நாத தேசிகர் மயிலை.
இடையிடையே பெரியபுராண-
திருவாசக ஒப்பீட்டு விளக்கம் -
சிவத்திரு. சி. மதன்முரலீ, பெரியபுராண வகுப்பு ஆசிரியர்
12.30 திருவமுதம்
1.30 - சிறார்கள் நடனம்
பிற்பகல் 2.00 - நாடகம்
2.30 - சிறப்புச் சொற்பொழிவு "எது எமை பணிகொளும் ஆறு"
அப்பர் அடிப்பொடி புலவர் வீ. சொக்கலிங்கனார், M.A. B.Ed.,
தலைவர் கொங்கு மண்டலம் அப்பர் அடிகள் சிவநெறி
வழிப்பாட்டுத் திருக்கூட்டம், விசய மங்கலம்.
360 உழவாரத்திருப்பணி ஆற்றிய பெருந்தொண்டர்.
4.00 - நாட்டியம்,
4.30 - "ஆட்கொண்ட பிரான்"
செந்தமிழ் அரசு கி. சிவகுமார், M.E.
நிறுவனர் : முருகன் புகழ்பாடும் சபை, சென்னை
மாலை 6.00 - நாடகம்
6.00-7.30 - பெரிய புராண வகுப்பின் தொகுப்புரை
7.30 - நாடகம்
8.00 - நன்றியுரை
திருவமுது.

www.shaivam.org

தொடர் எண்	கோயில்	அம்மையப்பர்	திருப்பணி ஆற்றிய நாள்	தொலைவு
52.	குடியேற்றம், ஒடுக்கத்தூர்	நாகேசுவரர் - நாகம்மை	5,6,7.6.09	200
53.	கம்பைநல்லூர்	தேச நாதர்	28.6.09	120
54.	அஞ்சலா	ஈசுவரர்	26.7.09	100
55.	காஞ்சி முதல் காளத்தி வரை	தக்கோலம் : மால்வணங்கீசுவரர் கிரிராய கன்னிகாம்பிகை	14,15,16,17.8.09	250
56.	தேவன ல்லி	5 சிவாலயங்கள் - நஞ்சுண்டேசுவரர்	20-9-2009	35
57.	தாவரகரே, திப்பகுண்டனல்லி	சங்கமேசுவர சுவாமி	25-10-2009	40
58.	கும்பல்கோடு	மல்லிகார்ச்சுனேசுவரர்	29-11-2009	30
59.	அலசூர்	சோமேசுவரர் காமாட்சி அம்மை	27-12-2009	3
60.	திருப்பழனம் தஞ்சாவூர்	பெரியநாயகி - பழனப்பிரான் ஆப்த சகாயேசுவரர்	26-1-2010	350
61	குலக்கரை	வெள்ளானை விடங்கர்-ஐராவதேசுவரர் அகிலாண்டேசுவரி	28-2-2010	180
62	குலக்கரை		21-3-2010	180
63	திருப்பெருந்துறை, ஓரியூர்	அறந்தாங்கி, கோட்டை காசி விசுவநாதர் - விசாலாட்சி	10-4-2010	400
64	திருநாணா, அந்தியூர்	அந்தியூரர்	15-5–2010	300

BOOK-POST

To

Smt./Sri. ______________________

____

____

____

From : ______________________

AANDA ARASU SIVALAYA SEVA SANGHA

St. Manikkavasagar Aramanai

Ashok Nagar, Bangalore-560 025.

64 வது உழவாரப்பணி : 14.5.2010 வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு ஒடுக்கத்தூர் மடத்திலிருந்து புறப்பட்டு திருநணா - பவானியில் 15.5.2010 அந்தியூர் சிவாலயத்தில் உழவாரத்திருப்பணியும் "புனிதவாய் மலர்ந்தழுதார் " நாடகமும் 16.5.2010 அறுபத்து மூவர், தொகையடியார், சமய, சந்தான ஆசிரியர்கள், திருமுறை ஆசிரியர்கள், திருவள்ளுவர் ஆகிய நூறு திருப்படிம நன்னீராட்டு விழா சொற்பொழிவு, பெருஊர்வலத்தில் கலந்து பணிசெய்ய திருவருள் கூட்டியுள்ளது.

Contact : S. Ganesh 97415 94129

A.P. Saravanan 94490 48586

www.shaivam.org

சேக்கிழார் எடுத்துத் தந்த தேவாரம் என்று மூவர் முதலிகள் அருளிச் செயலை 3,4,5,6-ஆம் ஆண்டு விழாமலர்களில் குறித்தோம். இங்கு சேக்கிழார் அருளிச் செயலில் திருவாசகம், திருக்கோவையார் குறிக்கும் முயற்சி.

1. **உலகெலாம்** உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் -

பெரியபுராணம் - பாயிரம் 1

உலகெலாம் என்ற மெய்ம்மொழி அம்பலத்து ஆடுவான் எடுத்துத் தந்தது.

சேக்கிழார் பெருமான் இதை அடிப்படையாக வைத்து தம் திருத்தொண்டர் புராணத்தின் 4286 பாடல்களில் 13 இடங்களில் **உலகெலாம்** என்று பாடியுள்ளார்.

பதினான்கு இடங்கள் வருமாறு :

1. **உலகெலாம்** உணர்ந் தோதற் கரியவன் - 1
2. **உலகெலாம்** புகழ்ந்து போற்றும் மானமும் பொறையும் தாங்கி மனை அறம் புரிந்து வாழ்வார் - தில்லைவாழ்...7
3. உருகுகின்றது போன்றது**லகெலாம்** - இளையான்குடி 15
4. பெருவதுவை **உலகெலாந்** தலைசிறப்ப - மானக் கஞ்சாறர் 36
5. மெய்வளந்தரு சிறப்பினால் **உலகெலாம்** வியப்ப-திருக் குறிப்பு 48
6. வானதுந்துபியின் நாதம் **உலகெலாம்** நிறைந்து விம்ம - காரைக்கால் 51
7. அஞ்செழுத்தோதி ஏறினார் உய்ய **உலகெலாம்** - திரு ஞா 216
8. **உலகெலாம்** உய்யவந்த வளரொளி ஞானம் உண்டார் - திரு ஞா 643

9. ஊனமாஞ் சமணைநீக்கி **உலகெலாம்**
உய்யக் கொண்ட ஞானசம்பந்தர் - திரு ஞா 859

10. **உலகெலாம்** உய்ய உறுதியாம் பதிகம் உரைத்து - ஏயர்கோன் 88

11. ஓங்கு செஞ்சுடர் உதித்தென **உலகெலாம்** வியப்ப- அதிபத்தர் 16

12. உமையொரு பாகர் வண்மை **உலகெலாம்** அறிய ஏத்தி
- திரு நீலகண்டயாழ் - 7

13. மாசில் வெண்மைசேர் பேரொளி **உலகெலாம்** மலர்ந்திட
- வெள்ளானை 40

14. மன்றுளாரடியாரவர் வான் புகழ் நின்ற தெங்கும் நிலவி
உலகெலாம் - வெள்ளானை 53

''நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டலறி
உலகெலாம் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்,
அருத்தனே அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே'' - அருட்பத்து - 2

உலகெலாம் தேடியுங்காண முடியாத இறைவன் தானே வந்து நம்மை உருக்கிப் பணிகொள்வார் என்பதை

''அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் வந்து நம்மை
உருக்கும் பணி கொள்ளும் என்பது கேட்டு**லகம் எல்லாம்**
சிரிக்குந் திறம் பாடித் தெள்ளேணங் கொட்டாமோ''
- திருத்தெள்ளேணம் - 3

என்றும் மாணிக்கவாசகப் பெருமான் பாடியுள்ளார்.

2. **''ஆதி அந்தம் இலாமை** அடைந்தவன்'' - திருமலை 114

''ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத்து'' - திருநீல 1

''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி'' 7.1

3. **''முன்னவனே** முன்னின்றால் **முடியாத** பொருளுளதோ?நகர-47
''**முடியா முதலே** என் கருத்து **முடியும்** வண்ணம்
முன்னின்றே'' 21-1

4. பொன் தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் அமர்ந்த பிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள் கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன் அடியார்க்கு
என்றும் **எளிவரும்** பெருமை ஏழுலகும் எடுத்தேத்தும்.
திருநகர- 49

''அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு **எளியான்''** 5-35.

5. ''ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணி அல தொன்றிலார்
ஈர அன்பினர் **யாதும் குறைவிலார்**
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?''

''என்னகுறையும் இலோம்'' 7-9

6. ''நக்கான் முகம் நோக்கி... **உன்தந்தை தன்தந்தை''** தடுத்தாட்-39
''என்தாதை தாதைக்கும் எம் அனைக்கும் தம்பெருமான்''10-10

7. ''ஆவணம் பறிக்கச் சென்ற வளவினிலந்த ணாளன்
காவணத் திடையே யோடக் கடிதுபின் **றொடர்ந்து** நம்பி
பூவணத் தவரை யுற்றா ரவரலாற் புரங்கள் செற்ற
ஏவணச் சிலயினாரை யார் **தொடர்ந் தெட்டவல்லார்''**
- தடுத்தாட் 44

''யான் உனைத் **தொடர்ந்து** சிக்கெனப்பிடித்தேன்'' 37-9
''தொடர்வரியாய்'' 6-38

8. ''வலிய **ஆட்கொள்ளும் வள்ளல்''** - தடுத்தாட்-61
''என்போலும் பொய்யர் தம்மை **ஆட்கொள்ளும் வள்ளல்** -5 63

9. ''மற்று நீ வன்மைபேசி ... தூமறை பாடும் வாயார்''- தடுத்தாட்-70
''பேசுவதும் திருவாயால் மறை போலும்'' 12-1

10. ''அந்நிலை ஆரூரன்.... **உன்னடி என்**
சென்னியில் வைத்தனை'' - தடுத்தாட்-86

''என்னையும் ஒருவனாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி'' 4-129/130

11. ''அன்பு பெருக ..... **நன்புலன்** ஆகிய ஐந்தும் **ஒன்றி** நாயகன் சேவடி எய்தப் பெற்று'' தடுத்தாட் - 126

''நன்புலன் ஒன்றி நாத என்று அரற்றி உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்ப கரமலர் மொட்டித்து இருதயம் மலர.....
..... தாயே யாகி வளர்த்தனை போற்றி'' - 4 82/87

12. ''கண்ணுதலைத் தொழும் **அன்பு**'' தடுத்தாட் - 145
''கண்ணப்பன் ஒப்பதோர் **அன்பு**'' 10/4

13. ''**பந்தம் வீடு** தரும் பரமன் கழல்'' தடுத்தாட் - 154
''**பந்தமும் ஆய் வீடும்** ஆயினார்க்கு'' 9/20

14. ''ஞாலம் உய்ய நடம் மன்றுள் ஆடின
காலன் ஆருயிர் மாளக் கருத்தன '' தடுத்தாட் - 192

''**காலன், ஆருயிர்** கொண்ட பூங்கழலாய்'' 23/8

15. ''தன்னையாளுடைய நாதன் ...... பாடும்
பரிசெனக் கருள் செய்'' தடுத்தாட் - 198

''ஏதவனைப்பாடும் **பரிசு**'' 7/10

பூங்கழல்

16. கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின்மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற **பூங்கழல்** போற்றி போற்றி
தில்லைவாழ் -2

1. புறத்தார்க்குச் சேயோன்றன் **பூங்கழல்**கள் வெல்க 1-8

2. மெய்ச்சுடருக் கெல்லாம் ஒளிவந்த **பூங்கழல்** 6-15

3. போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் **பூங்கழல்கள்** 7-20

4. தன்தொழும்பில் கொண்டருளும் வானவன் **பூங்கழலே** 8.14

5. போற்றி என்வாழ் முதலாகிய பொருளே
புலர்ந்தது **பூங்கழற்கு** இணைதுணை மலர்கொண்டு 20-1

6. காலன் ஆருயிர் கொண்ட **பூங்கழலாய்** 23-9

7. பூசனை உகந்தென் சிந்தையுள் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே 37-7.

8. நின் **பூங்கழல்கள்** அவையல்லாது எனவுயாதும் புகழேனே 39-1

9. புயங்கப் பெருமான் **பூங்கழல்கள்** மிகவே நினைமின் 45-2

10. மின்னே ரனைய **பூங்கழல்கள்** அடைந்தார் கடந்தார் வியனுலகம் 50-1

17. ''வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின்மிக்கார்''

திருநீலகண்ட - 1

தில்லை மூதூர் ஆடிய திருவடி பல்லுயிர்
எல்லாம் பயின்றனன் ஆகி (2.1)

பத்தர் சூழப் பராபரன் பாரில்
வந்து பார்ப் பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லை
மூதூர் நடஞ்செய்வான் (42/4)

தில்லை மூதூர் என்று வாய் மணக்கப் பாடிய ஆசிரியர் மூதூர் என்று புராணம் முழுதும் பல இடங்களில் குறிப்பிட்டு மகிழ்ந்துள்ளார்.

18. ''அளவிலா மரபின் வாழ்க்கை மட்கலம் அமுதுக்காக்கி
வளரிளம் திங்கட் கண்ணி மன்றுளார் அடியார்க் கென்றும்
உளமகிழ் சிறப்பின் மல்க ஓடளித் தொழுகும் நாளில்
இளமைமீ தூர இன்பத் துறையினில் எளியரானார்'' திருநீல 3

''அடியார் உள்ளத்து அன்பு மீதூர குடியாக்கொண்ட கொள்கை''
2.7

19. ''அவர் தங்கண் மனைவியாரும் அருந்ததிக் கற்பின் மிக்கார்
புவனங்கள் உய்ய வையர் பொங்குநஞ் சுண்ண யாஞ்செய்
தவ நின்று தடுத்த தென்னத் தகைந்துதான் றரித்த தென்று
சிவனெந்தை கண்டந் தன்னைத் திருநீலகண்ட மென்பார்.''

- திருநீல 4

திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பொருமான் திரு நீலகண்டம் என்ற பெயர் சொல்லாலிடினும் பின் வரும் குறிப்புகளில் நீலகண்டத்தை குறித்துள்ளார் :

கறைக்கண்டன் 6.32
மழைதருகண்டன் 6.46
கண்டங்கரியன் 8.9
மணிகண்டன் 23.7
மையமர் கண்டன் 9.12
நஞ்சமர் கண்டத்தன் 16.4
விடமுண்மிடற்று மையவன் 6.7
கறைமிடற்றன் 10.9

திருக்கோவையாரில் ''மைத்தழையாநின்ற மாமிடற்றம் பலவன்'' என்றும் குறித்துள்ளார். 102

20. ''இளமையின் மிக்குளார்கள் இருவரு மறிய நின்ற
அளவில் சீரானை போற்றி ஆண்டுகள் பலவுஞ்செல்ல
வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்தும் அன்பு தம்பிரான் றிறத்துச் சாயார்''

திருநீல - 9.

''சாயா அன்பினை நாள்தொறும் தழைப்பவர்'' 4.86

21. ''கீளொடு கோவணஞ் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர்திரு **முண்ட** நெற்றியும்'' திருநீல -11

''**நீளொளியாகிய** நிருத்தாபோற்றி'' 4.202

''செஞ்சவே ஆண்டுகொண்டான்
திருமுண்டம் தீண்ட மாட்டாது
அஞ்சுவா ரவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே'' 35.9.

22. ''வைத்தபின் மறையவராகி வந்தருள்
நித்தனார் நீங்கிடநின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தம் அம்பலம் அணைய மேவினார்'' திருநீல - 18

"நித்தா போற்றி நிமலாபோற்றி" 4.175

"நித்தமணாளர் நிரம்ப அழகியர்" 17-3.

23. "வந்தபின் தொண்டனாரும் எதிர்வழி பாடுசெய்து
சிந்தைசெய் தருளிற் றெங்கள் செய்தவ மென்றுநிற்ப
முந்தைநா ளுன்பால்வைத்த மொய்யொளி விளங்கும் ஓடு
தந்துநில் லென்றான் எல்லாம் தான் **வைத்து வாங்க வல்லான்"**
திருநீல - 20

"விச்சதின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்...." 5.96

24. "என்றவர் விரைந்து
.............**நேடியுங்காணார்**......." திருநீ 21

"இழையணி...... தேடிக்காணேன்" திருநீ 23

"ஒருத்தனே உன்னை ஓலமிட்டலறி உலகெலாந்
தேடியுங்காணேன்" 29-2.

நேடியும் = தேடிப்பார்த்தும்
"நாடிய மாதவர் **நேடிய** பாதம்" அருட்பா.

25. இழையணி...
....
பிழையினைப் பொறுக்க வேண்டும்...... திருநீ 23

"பிழைத்தால் போறுக்க வேண்டாவோ" 33-1

"பொறுப்பரன்றோ பெரியர்." 6/6

26. "**சென்னியால் வணங்கி** நின்ற தொண்டரைச்
செயிர்த்து நோக்கி என்னிது மொழிந்தவா நீ யான் வைத்த
மண்ணோடன்றிப் பொன்னால் அமைத்துத் தந்தாயாயினும்
கொள்ளேன் போற்ற முன்னை நான் வைத்த ஓடே
கொண்டு வா என்றான் **முன்னோன்**" திருநீ - 24

"**சென்னியில் அஞ்சலி** கூப்பினர்" 22-4

"**கொள்ளேன்** புரந்தரன் மாலயன் வாழ்வு" 5.2

"**முன்னோன்** காண்க" 3.29

27. "தண்டு இரு தலையும் பற்றிப் புகுமவர் தம்மை நோக்கி
வெண்டிரு நீற்று முண்ட வேதியர் மாதைத்தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீ ரென்னக் கூடாமை பாரோர்கேட்கப்
பண்டுதஞ் செய்கை சொல்லி மூழ்கினார் **பழுதிலாதார்**"
- திருநீல 38.

''பழுதில் சொல் புகழாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்'' - 28.10

''பழுது செய்வேனை விடேல் உடையாய்
உன்னைப் பாடுவனே'' - 6.44

''பழுதே பிறந்தேன்'' - 5-88.

28. ''மன்றுளே திருக்கூத்தாடி அடியவர் மனைகள் தோறும்
சென்றவர்.....'' திருநீல 42
''இன்று நம் **இல்லங்கள்தோறும்** எழுந்தருளி'' 7-17

''அடியார் **பழங்குடில்தோறும்** எழுந்தருளி'' 20-8

29. ''சென்னிவெண்குடை நீடந பாயன்
திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல்வ ளந்தர இயல்பினி லளித்துப்
பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்த முன் னுடைய
நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம்'' இயற்பகை 1

அப்பாண்டி நாட்டை சிவலோகம் ஆக்குவித்த 8-11

காவிரி என்கின்ற புனித ஆறு கடலில் கலந்து கடலையும் புனிதமாக்கு கின்றது என்ற கருத்து திருவாசகத்தில் கங்கை தங்கு சடைஅப்பனார் அப்பாண்டி நாட்டை சிவலோகம் ஆக்கு வித்தார் என்று வருகிறது.

30. ''என்று கூறிய இயற்பகையார் முன்
எய்தி நின்றவக் கைதவ மறையோர்
கொன்றை வார்சடை யாரடி யார்கள்
குறித்து வேண்டின குணமெனக் கொண்டே
ஒன்று நீர் எதிர் மறாது உவந்தளிக்கும்
உண்மை கேட்டு நும் பாலொன்று வேண்டி
இன்று நான் இங்கு வந்தனன் அதனுக்கு
இசையலாம் எனில் இயம்பலாம் என்றார்''
இயற்பகை 6

''மின்னே ரனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர் கொண்டு
போற்றா நின்றார் அமரரெலாம்
கன்னே ரனைய மனக்கடையாய்
கழிப்புண்டவலக் கடல் வீழ்ந்த
என்னே ரனையேன் இனிஉன்னைக்
கூடும் வண்ணம் **இயம்பாயே**''. - 50/1.

சேக்கிழார் வழங்கும் காவிய இன்பம்....

பெரியபுராணம் கட்டுக்கதையன்று. அது ஒரு வரலாற்று நூல்; அருள்நூல். அறுபத்து மூன்று நாயன்மார் வரலாற்றை - சிறப்பை விரித்துரைக்கும் நூல். இந்நூலுக்குத் தொகை திருத்தொண்டத் தொகை. வகை திருத்தொண்டர் திருவந்தாதி. பெரியபுராணம் விரிவகையைச் சேர்ந்தது.

வாழ்வு சிறக்க குறிக்கோள் வேண்டும், குறிக்கோள் எந்த அடிப் படையில் அமையவேண்டும்? தொண்டு, பக்தி என்ற இரண்டில் அமைய வேண்டும். பெரிய புராணத்தில் எங்கு தொட்டாலும் குறிக்கோள், பக்தி, தொண்டு வெளிப்படுவதைக் காணலாம். குறிக்கோளை நழுவ விடாமல் விறலோடு வலிமையோடு ஒழுகுதல் பெரிய புராணம் புகட்டும் நெறி.

எந்தக் காலத்திலும் குறிக்கோளை நழுவ விடாதவர் பெருமை உலகறியச் செய்யவே தலைவன் அவர்களை நாடி வருகிறான். அவர்களைச் சோதனை செய்ய வருகிறான் என்று சொல்லுவது தவறு. தலைவன் ஆன்மாவோடு இருப்பவன்; முற்றும் அறிபவன்; அறிந்து கொண்டிருப்பவன்.

பெரியபுராணம் 'உலகெலாம்' எனத்தொடங்கி 'உலகெலாம்' எனமுடியும் தன் 4286 பாடல்களை இன்ப வடிவில் தருகிறது. இனிப்பின் எப்பகுதியிலும் இனிப்பு வெளிப்படுவது போல் எப்பாடலிலும் இன்பம் தோன்றுவதைக் காணலாம்.

இயற்பகை நாயனாரைத் திருத்தொண்டத்தொகை ''இல்லையே என்னாத இயற்பகை'' என்று குறளில் ஏழுகடலைப் புகுத்தியதுபோல் கூறுகிறது.

''ஆயும் நுண்பொருள் ஆகியும் வெளியே
அம்பலத்துள் நின்றாடுவார் உம்பர்
நாயகிக்கும் அஃதறியவோ பிறியா
நங்கை தானறி யாமையோ அறியோம்''.

பெருமான் அடியாரை நோக்கி வருவதைச் சேக்கிழார் சொல்லத் தொடங்குகிறார்.

''தூய நீறுபொன்மேனியில் விளங்கத்
தூர்த்த வேடமுந் தோன்றவே தியராய்
மாய வண்ணமே கொண்டு தந் தொண்டர்
மறாத வண்ணமும் காட்டுவான் வந்தார்''

என்று சேக்கிழார் வந்ததை நயமாகச் சொல்கிறார்.

வந்தவர், ''ஒன்றுநீரெதிர் மறாது உவந்தளிக்கும் உண்மைகேட்டு நும்பால் ஒன்று வேண்டி வந்தனன் அதனுக்கு இசையலாமெனில் இயம்பலாம்'' என்று சொல்கிறார்.

''இசையலாம் எனில் இயம்பலாம்'' என்ற நயவுரைக்கு இணையாக அடியார் சொல்ல வேண்டியதைச் சேக்கிழார் தம் அமைச்சு நுட்ப உணர்வோடு ''யாதும் ஒன்றும் என்பக்கல் உண்டாகில் அஃது எம்பிரான் அடியவர் உடைமை ஐயமில்லை, இயம்பும் என்றார்'' என்கிறார்.

''மன்னுகாதல் நும் மனைவியை வேண்டி வந்தது'' என்கிறார் அடியார்.

தம்மிடம் தம் ஆளுகையின் கீழ் உள்ளதை அடியார் கேட்டாரே என்று முன்னையின் மகிழ்ந்தார்.

உடனே ''விதிமணக்குல மடந்தை! இன்றுனை இம்மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்'' என்றார்.

கேட்ட மனைவியார் கலங்கி, பின் தெளிந்து ''உயிர்க்கொரு நாதரே! நீர் உரைத்தது ஒன்றை நான் செய்யும் அத்தனையல்லால் உரிமை வேறில்லை'' என்கிறார். தம் தலைவரை வணங்குகிறார். தலைவரும் எதிர் வணங்குகிறார். பின்பு அடியவர் திருவடியை வணங்குகிறார். திகைத்து நின்றவர் யார்? ''திருவினும் பெரியாள்''. ஏன் திருவினும் பெரியாள்?

திருவடியைக் காணா திருவின் நாயகனினும் பெரியவள். திருவடியைக் கண்டதால் திகைப்பு, சொல்லொணாத் திகைப்பு.

வந்தவர் சிவபெருமானே என்றுணர்ந்தார். இந்த இடம் மிக நுட்பமானது. எந்த உரையிலும் காணாதது. திகைப்பு என்று அருளிய சேக்கிழார்க்குக் கோடி வணக்கம் செலுத்திப் பார்த்தால் தான் இந்நுட்பம் விளங்கும். இந்த இடம் முள்மேல் நடக்குமிடம். பெரிய புராணத்தை பயபக்தியோடு அணுகவேண்டிய இடம். சிவபெருமானைக் கண்டாள் என்பதால் திருவினும் பெரியாள். திருமால் காணா திருவடியைக் கண்டு விட்டாள்.

வந்தவர் அஞ்சியவர்போல் அம்மையாரை நோக்க அவர் ''இறைவனே அஞ்ச வேண்டா இயற்பகை வெல்லும்'' என்றார்.

செயற்கருஞ் செயல் செய்தவர் ஆகிறார் இயற்பகையார். திகைத்து தெளிந்து தேறியவர், திருவடியைக் கண்ட போதும் திகைத்தார்.

முன்னைய திகைப்பு, தம் கடமையைச் செய்ய மேற்கொளும் உறுதிக்கு முன்னுற்றது. ''தேரான் தெளிவும் தெளிந் தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்'' என்ற நெறியுணர்வு காரணமாக வந்தது.

பின்னைய திகைப்பு, யாவார்க்கும் மேலாம் அளவிலாச் சீரடி யாவர்க்கும் கீழாம் அடியவட்குக் காண வந்ததால் உற்றது.

சேக்கிழார் வழங்கும் காவிய இன்பம் என்ற தலைப்பில் பெரியபுராண ஆசிரியர் ஆற்றிய இந்தச் சொற்பொழிவுக்குத் தலைமை தாங்கிய பெங்களூர்ப் பேராசிரியர் தம் தலைமையுரையில், ''வந்தவர் இறைவன் என்ற இடம் இல்லாமல் இலக்கிய உணர்வு பெறக்கூடுமா'' என்று கேட்டுக் கொண்டார்.

கிழவர் மறைந்து இறைவன் தோன்றினான் என்பதை நம்ப முடியாது என்று கூறும் பெரியவர்கள் இவ்வரலாறு முழுவதையும் நம்பவேண்டுவதில்லை. (குறள் கண்ட வாழ்வு பக்கம் 89)

புத்தர் துறவு பூண்டு செல்வதை முன்னமே யசோதை உணர்ந்துளார் என்ற வழக்குக்கு அம்மையார் நுண்ணுணர்வால் அடியாரை இறைவனென்றுணர்வது சிறப்பு.

இயம்பலாம் என்றமொழி இயற்பகையாரதாக வேண்டும்
இயம்பலாம் வந்தவர் இசைவைத் தெரிவிப்பது.
இசைந்து இயம்பு யாமும் இசைந்து இயம்புவோம்
என்றும் வருகிறது. இயம்புதலில் இசைவும் அமைந்து விடுகிறது.
அதனால்'' மின்னேரனைய பூங்கழல்கள் ... கூடும்வண்ணம்
இயம்பாயே - இசைந்து இயம்பாயே'' (50/1).
சேக்கிழார் மொழியாகிறது.

31. ''...... திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்''

இயற்பகை-9

வந்த சிவனடியார்க்கு உன்னைதந்தேன் என்று இயற்பகையார் சொன்னதும் அம்மையார் உலகியற்படி திகைத்தனர். தன் கணவராகிய சிவனடியார் கட்டளை, சிவபெருமான் கட்டளையன்றி வேறில்லை எனத் தேறினர் - உகந்து சொன்னபரிசு தொழும்பாய்ப் பணி செய்ய உறுதி பூண்டனர். புவனியில் சேவடி தீண்டியவர் திருவடியைக் கண்டும் **திகைத்தனர், தேறினர்.**

''புவனியில் சேவடி **தீண்டினன்** காண்க
சிவன் என யானும் **தேறினன்** காண்க'' 3.62.73

32. ''....**சுற்றமும்** பதியும் கடக்க நீதுணை போதுக'' இயற்பகை 10
''**சுற்றிய சுற்றத்** தொடர்வறுப்பான்'' 8-20

33. ''இயற்பகை முனிவா **ஓலம்**....'' இயற்பகை 29
''சிவனே சிவனே என்று **ஓலம்**'' 7/5

34. ''பொன்றிகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேல்''

இயற்பகை 31

''ஆடகச்சீர் மணிக் குன்றே'' 5/11.

35. ''சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு
கொண்டோய் போற்றி
எல்லையி லின்ப வெள்ளம் எனக்கருள் செய்தோய் போற்றி
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி'' இயற்பகை 32

''சொல்லுவ தறியேன் வாழி! முறையோ!
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன், ஆவா செத்தேன் அடியேற்கு
அருளியதறியேன், பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்லகில்லேன்
செழுந்தண் பாற்கடற்றிரைபுரைவித்து
உவாக் கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன்; கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடலகத்தே
குரம்பை கொண்டின்தேன் பாய்த்தி நிரம்பிய

அற்புதம் ஆன அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்; உருகுவது
உள்ளங்கொண்டோருருச் செய்தாங் கெனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்; ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப் பதாக்கினன்; என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளோடு பராவமு தாக்கினன்
பிரமன் மாலறியாப் பெற்றியோனே'' - 3.163-182

36. ''என்னுமிவ் உல கத்தவர் யாவருந்
துண்ணெனும்படி தோன்றிமுன்தோன்றிடில்
வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து.'' இளையான் 16

''சொல்லியலா தெழுதூமணியோசை சுவைதரும் ஆகாதே
துண்ணென என்னுளம் மன்னியசோதி தொடர்ந்தெழும் ஆகாதே''
49.7.

''ஏதிலார் **துண்ணென்ன** மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாங் கொடி'' 19.10

37. ''வழிவரு மிளைப்பினோடும் வருத்திய பசியினாலே
அழிவுறுமையனென்னு மன்பினில் பொலிந்து சென்று
குழிநிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழி முதல் பறிப்பார் போலப் பறித்து அவைகறிக்கு நல்க''
இளையான் 21

''காசணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்பணி மின்கள் கறை உரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந்தாடுங்கச்சி
திருவே கம்பன் செம்பொன் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே'' 9-4.

பாசவினையை, திருவருளை வழுத்துவதாலும்
தொண்டு செய்வதாலும் - உழவாரப்பணி செய்வதாலும்
அடியார் தாமே பறிக்கவல்லவராவர் என்பது மாணிக்க வாசகர்
சேக்கிழார் உறுதிமொழி. சம்பந்தப் பெருமானும்
''உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே'' என்றார்.

38\. ''கணவனார் தம்மை நோக்கிக் கறியமுதானகாட்டி
இணையிலாதாரை யின்னமுதுசெய்விப்போ மென்ன
உணர்வினா லுணரவொண்ணா ஒருவ**ரையுணர்த்த** வேண்டி
அணையுமுன் சென்று நின்றங்கவர் துயிலகற்றலுற்றார்.''

இளையான் 23

''**உரையுணர்**விறந்து நின்றுணர்வதோருணர்வே
யான் உன்னை உரைக்கு**மாறுணர்த்தே**'' 22.3

39\. ''மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதியாகச்
சாலவே மயங்குவார்க்குச் சங்கரன்றான் மகிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ டிடபவாகனனாய்த் தோன்றி
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மைநோக்கி''

இளையான் 25

''ஏலவார் குழலிமார் இருவர் தங்கள் நாயகனே'' 29.3

40\. ''மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்
எனத் தொழுது வென்றார்'' மெய்ப் 15

''மெய்ப் பொருட்கண் தோற்றமாய்
மெய்யே நிலைபேறாய்'' 8-12

41\. ''விரைசெய் நறும்பூந்தொடையிதழி வேணியார்தங்கழல்பரவிப்
பரசுபெறுமா தவமுனிவன் பரசுராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெரு**வளனும்** திருந்து நிலனின்
செழு**வளனும்**
வரையில் **வளனும்** உடன் பெருகி மல்குநாடு மலைநாடு''.

விறன் 1

''நானார் அடி அணைவான் ஒருநாய்க்குத் தவிசிட்டிங்கு
ஊனார் உடல் புகுந்தான் உயிர் கலந்தான்
தேனார் சடைமுடியான் மன்னுதிருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர் **வளம்** ஈந்தனன் எனக்கே'' 34.2

42\. ''வாரி சொரியுங் கதிர்முத்தும் வயன்மென்கரும்பிற் படுமுத்தும்
வேரல் விளையுங்குளிர்முத்தும் வேழமருப்பினொளிர் முத்தும்
மூரல் எனச்சொல் வெண்முத்த நகையார் தெரிந்து முறை
நோக்குஞ்
சேரர் திருநாட்டூர்களின்முன் சிறந்த மூதூர் செங்குன்றூர்''

விறன் 2

''முத்தன்ன வெண்ணகையாய் !'' 7-3

43. ''முஞ்சி நாணுற முடிந்தது சாத்திய அரையில்
தஞ்ச **மாமறைக் கோவண** ஆடையின்றசைவும்
வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்துடியார்கள்
நெஞ்சி னீங்கிடா அடிமலர் நீணிலம் பொலிய'' அமர் நீதி 8

''என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தானீசன் துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடி?, மன்னுகலை துன்னு பொருள் மறைநான்கே வான்சரடாத் தன்னயே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ'' என்பதை ''மறைக்கோவண ஆடை'' என்று சேக்கிழார் அருளிச் செய்தார்.

திருஞானசம்பந்தப் பெருமானும் ''துன்னம் பெய் கோவணமும் தோலும் உடை ஆடை பின்னம் சடைமேல் ஓர் பிள்ளை மதிசூடி அன்னம் சேர் தண்கானல் ஆமாத்தூர் அம்மான் தன் பொன்னம் கழல் பரவாப் பொக்கமும் பொக்கமே'' - திருவாமாத்தூர் திருஞா 1

அப்பர் பெருமான் ''சிவபிரானுக்கு அம்மைபுகுந்த அன்றும் கோவணமே ஆடையோ?'' என்று,

''கடும்பகல் நட்டமாடி கையிலோர் கபாலம் ஏந்தி
இடும்பலிக்கு இல்லந்தோறும் உழிதரும் இறைவனீரே
நெடும்பொறை மலையர்பாவை நேரிழை நெறிமென் கூந்தல்
கொடுங்குழை புகுந்த அன்றும் கோவணம் அரையதேயோ''
வினவுகிறார்.

44. ''மல்லல் நீர் ஞாலந்தன்னுள் **மழவிடையுடையான்** அன்பர்க்
கொல்லை வந்துற்ற செய்கை யுற்றிடத்துதுவுநீரார்
எல்லையில் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை எம்மாற்
சொல்லலாம் படித்தன்றேனும் ஆசையாற் சொல்லலுற்றாம்''
எறிபத்தர் 1

''**மழவிடையானே** வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே'' 28.10

''உற்றவர்க்கு ஊரன்'' திருக்கோவை 400

45. ''நெடியோனறியா நெடியா ரறியும்
படியால் அடிமைப் பணிசெய் தொழுகும்
அடியார் களில்யா னாரா வணைவாய்
முடியா முதலா எனவே மொழிய'' எறிபத்தர் 19.

''முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே'' 21/1

46. ''புண்டரிகம் பொன்வரைமேல் ஏற்றிப் புவியளிக்கும்
தண்தரள வெண் கவிகைத் தார் வளர் சோணாட்டில்
வண்டறை பூஞ்சோலை வயல் மருத்த**தண் பணை** சூழ்ந்
தெண் திசையும் ஏறியசீர் எயின் மூதூர் எயினனூர்''

ஏனாதி 1

''தேன் புக்க **தண்பணை** சூழ் தில்லைச் சிற்றம்பலவன்'' 12/14

47. ''**கண்ணப்பன்** ஒப்பதோர் அன்பு இன்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித் தென்னை வாவென்ற வான்கருணை
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.'' 10.4.

''பொருள் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்க
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று **வேடனார்** சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருட் பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ'' 15.3

கண்ணப்பருக்கு இவ்விருபாடல்கள் பெருமான் பாடியுள்ளார்.

சேக்கிழார் 186 பாடல்களில் அவர் வரலாற்றை எழுதியுள்ளார்.

அ. ''மேவலர் புரங்கள் செற்ற'' கண் 1
''மேவலர் புரங்கள் மூன்றெரித்து'' 29.7.

ஆ. **''திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங் கணர் கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்''**

கண் 104

''செங்கண் நெடுமாலும் சென்று இடந்தும், காண்புஅரிய
பொங்கு மலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி,
எங்கள் பிறப்பு அறுத்திட்டு, எம் தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள் சோலை, தென்னன் பெருந்துறையான்
அங்கணன், அந்தணனாய், அறைகூவி, வீடு அருளும்
அங்கருணை வார் கழலேபாடுதும் காண்; அம்மானாய்'' 8.1

இ. கன்றும் ஆவும் :

1. ''போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலி னோக்கி நிற்பர் **கன்றகல் புனிற்றாப் போல்வர்**
நாதனே யமுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே
கோதறக் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவே
னென்பார்''
கண் 112

''உற்றாரை யான் வேண்டேன்;
ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்;
கற்றாரை யான் வேண்டேன்;
கற்பனவும் இனி அமையும்;
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா!
உன் குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே'' 39.3

2. ''என்றெழுமோசை கேளா ஈன்றவான் கனைப்புக்கேட்ட
கன்றுபோல் கதறி.'' தடுத் 68

''**கற்றாமனமெனக்** கதறியும் பதறியும்'' 4.73

3. ''**கன்று** தடையுண்டெதிரழைக்க கதறிக்கனைக்கும்
புனிற்றா'' - சேரமான் 135

''**கன்றை** நினைந்தெழு **தாயென** வந்த கணக்கு'' 49.2

ஈ ''நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு **மயிர்க்கால்
தோறும்**
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கணீ ரருவி பாய
அடியனேற் கிவர் தாமிங்கே யகப்பட்டா ரச்சோ வென்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற''
கண் 106

''வாக்கிறந்து அமுதம் **மயிர்க்கால் தோறும்**
தேக்கிடச் செய்தனன்.'' 3.170

உ. ''இளைத்தனர் நாய னாரென்
நீண்டச்சென் றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு
முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொற் செருப்பால் மாற்றி
வாயின்மஞ் சன நீர் தன்னை
விளைத்தவன் புமிழ்வார் போல
விமலனார் முடிமேல் விட்டார்'' கண் 123

''பொருள் பற்றிச் செய்கின்ற.....'' (15.3)

48. ''வாய்ந்த நீர் வளத்தா லோங்கி மன்னிய பொன்னிநாட்டின்
ஏய்ந்த சீர் மறையோற் வாளுமெயிற்பதி யெறிநீர்க் கங்கை
தோய்ந்த நீர் சடையார் பண்டு தொண்டர் மேல் வந்த **கூற்றைக்**
காய்ந்தசே வடியார் நீடி யிருப்பது கடவூராகும்''
குங்குலி 1

''**காலாற் காலனைக் காய்ந்த**
கடுந்தழற் பிழம்பன்ன மேனி'' 29.7.

49. ''வந்தணைந்த மாவிரத முனிவரைக்கண் டெதிரழுந்து
சிந்தைகளி கூர்ந்து மகிழ் சிறந்த பெருந் தொண்டனார்
எந்தைபிரான் புரிதவத்தோ ரிவ்விடத்தே எழுந்தருள
உய்ந்தொழிந்தே னடியேனென் றுருகிய அன்பொடு பணிந்தார்''
- மானக்கஞ் 26

''உய்வார்கள் உய்யும் வகையெல்லாம்
உய்ந்தொழிந்தோம் எய்யாமற்காப்பாய்
எமை ஏலோர் எம்பாவாய்'' 7.11

50. ''மேவுசெல்வம் களிறுண் விளங்கனி
ஆவதாகி அழியவும் அன்பினால்
பாவை பாங்கர்க்கு முன்பு பயின்ற அத்
தாவில் செய்கை தவிர்ந்திலர்தாயனார்'' அரிவாட் 8

''**அல்லல் நல்குர வாயிடக்** கூலிக்கு
நெல்அறுத்துமெய்ந் நீடிய அன்பினால்
நல்ல செந்நெல்லிற் பெற்றன நாயனார்க்கு
ஒல்லை இன்னமுதாக்கொண் டொழுகுவார்'' அரிவாட் 9

''செல்வம் என்னும் **அல்லலிற்** பிழைத்தும்
நல்குரவென்னும் தொல்விடம் பிழைத்தும்'' 4.39, 40.

51. ''தாயனார் எனும் நாமம் தரித்துளார்
சேயகாலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாயனார் மண் கிளைத் தறியாத அத்
தூய **நாண்மலர்ப் பாதந்** தொடர்ந்துளார்'' அரிவாட் 5

''நாட்கொண்ட **நாண்மலர்ப் பாதங்** காட்டி'' 9-8

52. ''நலிவாரும் மெலிவாரு முணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய் வெள் ளெயிற்றரவம் மயில் மீது மருண்டுவிழும்
சலியாத நிலையரியுந் தடங் கரியு முடன் சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய **புல்வாயும்**'' - ஆனாயர் 34.

''புலிமுலை **புல்வாய்க்** கருளினை போற்றி'' 4.207

53. ''மும்மைப் புவனங்களின்
மிக்கதன்றே அம்**மூதூர்**'' - மூர்த்தி 7

''தில்லை **மூதூர்** ஆடிய திருவடி'' 2.1
''தில்லை **மூதூர்** நடம்செய்வான்'' 42.4

54. ''புலரும் பொழுதின் முன்னெழுந்து புனித நீரில் மூழ்கிப்போய்
மலருஞ் செவ்வித் தம்பெருமான் முடிமேல் வானீராறுமதி
உலவு மருங்கு முருகுயிர்க்க நகைக்கும் பதத்தினுடன் பறித்த
அலகில் மலர்கள் வெவ்வேறு திருப்பூங்கூடை க்ளிலமைப்பார்''
முருக 7.

''கோட்டு மலரு நிலமலருங்குளிர்நீர் மலருங் கொழுங்
கொடியின்
தோட்டு மலரு மாமல ருஞ் சுருதி மலருந் திருவாயிற்
காட்டு முறுவ னிலவலரக் கனக் வரையிற் பன்னகநாண்
பூட்டு மொருவர் திருமுடிமேற் புனையலாகு மலர்தெரிந்து''
முருக 8

''கொண்டு வந்து தனி யிடத்தினிருந்து கோக்குங் கோவை களும்
இண்டைச் சுருக்குந் தாமமுடன் இணைக்கும் வாச மாலைகளும்
தண்டிற் கட்டும் கண்ணிகளுந் தாளிற் பிணைக்கும்
பிணையல்களும்
நுண்டா திறைக்குந் தொடையல்களும் சமைத்து நுடங்கு நூன்
மார்பர்''
முருக 9

''துன்னிய **பிணைமலர்க்** கையினர் ஒருபால்'' 20.4

55. ''நிலத்தி னோங்கிய நிவந்தெழும் பெரும்புனனீத்தம்
மலர்ந்தடம்பணை வயல்புகு பொன்னிநன்னாட்டுக்
குலத்தி னோங்கிய **குறைவிலா நிறை** குடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத் தலையூர்''

உருத்திர 1

''**குறைவிலா நிறைவே**'' 22/5

56. ''பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப்
பெருந்தகைபால்
சிறந்த பெருங்காதலினாற் **செம்மைபுரி சிந்தையராய்**
மறந்தும் அயல் நினைவின்றி வருபிறப்பின் வழி வந்த
அறம்புரிகொள் கையராயே அடித்தொண்டின் நெறிநின்றார்''

திருநாளை 12

''தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்'' 4-24, 25

''தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி '' 4.4

''சிவனெனத் தேறி'' (3.62)

''**செம்மை** மனத்தால் திருப்பணிகள் செய்வார்'' (40.10)

''சிறுநெறிகள் சேராமே (51.2)

''என்கடைக் கண்ணினும் யான்பிற வேத்தா வகையிரங்கித்
தன்கடைக் கண்வைத்த தண்தில்லைச் சங்கரன் தாள்கயிலைக்
கொன்கடைக் கண்தரும் யானை கடிந்தார் கொணர்ந்திருத்தார்
முன்கடைக் கண்ணிது காண்வந்து தோன்றும் முழுநிதியே''

திருக்கோவை 298

''செம்மை நலத்தில்'' நின்றார். (51.9)

57. ''திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிக நினைந்து
விருப்பினொடுந் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினால் ஒடுப்பட்டங்கு ஆதனூர் தனினின்றும்
வருத்தமுறுங் காதலினால் வந்தவ்வூர் மருங்கணைந்தார்''

- திருநாளை 16

''உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து என் உளம் மன்னி
கருத்திருத்தி ஊன் புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாய் அடியேன் அணிகொள் தில்லை கண்டேனே
அருத்தி - விருப்பம் 31/3

58. ''இவ்வண்ணம் இரவுபகல் வலஞ்செய்தங்கெய்தரிய
அவ்வண்ண நினைந்தழிந்த அடித்தொண்டர் அயர்வெய்தி
மைவண்ணத் திருமிடற்றார் மன்றினடங் கும்பிடுவது
எவ்வண்ண மென நினைந்தே **யேசறவி**னொடுந் துயில்வார்''
திருநாளை 26.

''மருவினிய மலர்ப் பாதம் மனத்தில் வளர்ந்துள்ளுருக
தெருவு தொறும் மிக அலறி சிவபொருமான் என்றேத்தி
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலில் படிவு ஆம் ஆறு
அருள் எனக்கிங்கு இடைமருதே இடங்கொண்ட அம்மானே

''நானேயோ தவம் செய்தேன்? சிவாய நம எனப்பெற்றேன்!
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே''
திருவேசறவு - 9.10

59. ''ஐயரே அம்பலவர் **அருளால்** இப்பொழுதணைந்தோம்
வெய்யவழல் அமைத்துமக்குத் தரவேண்டி என விளம்ப
நையு மனத் திருத்தொண்டர் **நானுய்ந்தே னெனத்**தொழுதார்
தெய்வமறை முனிவர்களுந் தீயமைத்தபடி மொழிந்தார்''
திருநாளை 30

''பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன் உன் **அருள்** பெற்றேன்
உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருக என்று
அஞ்சேல் என்றருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே'' 51.5

''பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின் **அருளால்**
உய்ஞ்சேன் எம்பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேல் என்று ஆண்டவாறு அன்றே அம்பலத்தமுதே'' 38.6

60. ''**தொல்லை நான்மறை**'' திருக்குறிப் 29

''பண்டாய **நான்மறை**'' 48-1

61. ''**வடுவகிற்கண்மங்கையர்** - 35

''மாவின் **வடுவகிர்** அன்ன **கண்ணீர்**'' - 9

62. ''ஆனதொல்நகர் அம்பிகை தம்பெருமானை
மான **அர்ச்சனை**.... திருக்குறிப் 49
மற்று நீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற்பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலான் மண்மேல்நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றான் தூமறைபாடும் வாயார்'' தடுத்தாட் 70

''**அருச்சனை** வயலுள் அன்புவித்திட்டு'' 3.93.

63. ''மலைக்குலக் கொடி பரிவுறு பயத்தால்
மாவின் மேவிய தேவ நாயகரை
முலைக் குவட்டொடு **வளைக்கை**யால் நெருக்கி
முறுகு காதலால் இறுகிடத் தழுவச்
சிலைத் தனித் திரு நுதல்திரு முலைக்கும்
செந்தளிர் கரங்களுக்கும் மெத்தெனவே
கொலைக் களிற்றுரி புனைந்த தம்மேனி
குழைந்துக் காட்டினார் விழைந்த கொள்கையினார்''
- திருக்குறிப்பு 64

''**வளைத்தழு**ம்புடன் **முலைச்** சுவடணிந்தார்'' - 66

''**குழைத்த** சொல்மாலை கொண்டருள் போற்றி'' 4.220

''பொடி கொள்வான் தழலில்
புள்ளி போலிரண்டு
பொங்கொளி தங்குமார்பினனே'' - 29.5

64. ''கம்பர் காதலிதழுவமெய் குழையக்
கண்டு நிற்பவுஞ் சரிப்பவுமான
உம்பரே முதல் யோனிகள் எல்லாம்
உயிரும் யாக்கையும் உருகி யொன்றாகி
எம் பிராட்டிக்கு மெல்லிய ரானார்
என்றும் ஏகம்பர்'' என்றெடுத் தேத்த.
வம்புலா மலர் நிறையவிண் பொழியக்
கம்பை யாறு முன் வணங்கிய தன்றே'' – திருக்குறிப்பு - 65

''அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரமல்லா இன்னருள் தந்தாய்
யானிதற்கிலனோர் கைம்மாறு'' 22.2

65. ''**கோதிலா வமுதனையவள்....** '' - திருக்குறிப்பு - 67.

''**கோதிலா அமுதே**'' 22.5

66. ''நின் **பூசனை** என்றும்
முடிவதில்லை நம்பால்''....

''மாறிலாத இப் **பூசனை** என்றும் மன்னர்
எம்பிரான் மகிழ்ந்து கொண்டருளி ஈறிலாத...''
- திருக்குறிப்பு 68, 69

''மாறினிறென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலா பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே'' 22-1

''மாறிலாத மாக் கருணைவெள்ளமே'' 5-91

67. ''விடையின் மேலவர் மலைமகள் வேண்ட
விரும்பு பூசனை மேவிவீற்றிருந்தே
இடையறா அறம் வளர்க்கும் வித்தாக ....''
- திருக்குறிப்பு 70

''நாடகத்தால் உன்னடியார்
போல்நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்புனக்கு....'' 5-11

''**இடைவிடா** துன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்'' 37.2

68. ''அஞ்சு வான் கரத் தாறிழிமதத்தோர்
ஆனை நிற்கவும் அரையிருட்டிரியும்
மஞ்சு நீள்வது போலும் மேனி
மலர்ப் பதங்களில் **வண்சிலம் பொலிப்ப**'' - திருக்குறிப்பு 81

''சங்கம் அரற்றச்
சிலம் பொலிப்ப'' - திருப்பொற்சுண்ணம் 9-14

69. ''**தூண்டு சோதி**யொன் றெழுந்திருள் துரக்கும்'' - திருக்குறிப்பு 84

''**தூண்டுசோதி** தோற்றிய தொன்மையும்'' 2-41
''**தூண்டா விளக்கன்ன** சோதி'' திருநா 223
''**தூண்டா விளக்கின்** சுடரனையாய்'' 32.4
''**தூண்டா விளக்கனையாய்**'' திருக்கோவை 244

70. ''வேம்புசினக் களிற்றதிர்வும் மாவின் ஆர்ப்பும்
வியன்நெடுந்தேர்க் காலிசைப்பும் விழவறாத
அம்பொன் மணி வீதிகளில் அரங்கிலாடும்
அரிவையர் நூபுரவொலியோடமையும் **இம்பர்
உம்பரின்...**'' - திருக்குறிப்பு 98

''தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதில் பிள்ளைபாடி
மால்விடை பாடிவலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாக நஞ் சுண்டல்பாடிப்'' 9-17

71. ''தேரொலிக்க..... நீரொலிக்க **அரா இரைக்க**.''
திருகுறிப்பு தொண்டர் - 113

''கங்கை இரைக்க **அராஇரைக்கும்**'' திருவாசகம் - 9-14

72. ''அருமறையந் தணர்மன்னும் இருக்கையான
ஆகுதியின் புகை அடுத்த அம்பொன் மாடப்
பெருமறுகுதொறும் வேள்விச்சாலை எங்கும் பெறும்
அவிப்பா கங்கொடுக்கும் பெற்றி'' திருகுறிப்பு 99

''ஆவா திருமால் **அவிப்பாகங்**கொண்டன்று
சாவா திருந்தானென்றுந்தீபற'' 14.6

73. நடமே புரியும் **சேவடியார்** நம்மை உடையார் -சண்டே 16
சிவன் சேவடி போற்றி 1-12
புவனியில் **சேவடி** தீண்டினன்காண்க 3.61
சேவேறு **சேவடிக்கே** சென்றூதாய் கோத்தும்பி 10.1
சிந்துரச் **சேவடியானைச்** சேவகனை வரக்கூவாய் 18.3
செழுக்கமலத் திரளனனின் **சேவடி** 24.1
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி சேர்மின்களே 36.7
தேற்றமிலாதவர் **சேவடி** சிக்கெனச் சேர்மின்களே 36.10
தூயமாமலர்ச் **சேவடிக்கண்** நம்சென்னி மன்னிச்சுடருமே 42.10
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் **நடம்** நவில் 2.141
தேர் ஆர்ந்த வீதிப் பெருந்துறையான் **திருநடம்** செய் 13.19
தீர்த்தாய் திகழ் தில்லை அம்பலத்தே **திருநடம்** செய் 15.1

74. ''முந்தை மருங்கு கிடந்தகோல்
எடுத்தார்க் கதுவே முறைமையினால் வந்து
மழுவாயிட எறிந்தார்'' சண்டே 51

''மாமழுச் சூலம்பாடி'' 9-17

75. ''......சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின்
மூழ்கிப் பூமேல் அயன் முதலாம்
துங்க **அமரர் துதி**செய்ய.....''

''அண்டர் பிரானும் தொண்டர் தமக்கு
அதிபனாக்கிய அனைத்து நாம்
உண்ட கலமும் உடுப் பனவும்
சூடுவனவும் உனக்காகச்
சண்டீசனுமாம் பதந் தந்தோம்
என்றங் கவர் பொற்றட முடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்'' - சண்டே 55,56

''.......... திருவருளால் **தேவர் தொழப்**
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்'' 15.7

76. ''......மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார்
இந்த நிலைமை அறிந்தாரார்
ஈறிலாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே
தவமாம் அன்றோ சாற்றுங்கால்'' - சண்டீ 59

''......... சித்தம் சிவமாக்கிச் செய்தனவே **தவமாக்கும்**
அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ'' 15.7

77. ''புண்தலைவன் **முருட்டமணர்** புலர்ந்துசெயல் அறியாது
குண்டிகை நீர் மந்திரித்துக் குடிப்பித்தும் தணியாமை
கண்டு மிகப் பீலிக்கொடு கால் அளவுந் தடவிடவும்
பண்டையினும் நோவுமிகப் பரிபவத்தால் இடர் உழந்தார்''
திருநா 53

''இடக்கும் **கரு முருட் டேனப்பின்** கானகத்தே
நடக்கும் திருவடி என் தலைமேல் நட்டமையால்
கடக்கும் திறல் ஐவர் கண்டகர் தம் வல்லாட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே'' 40.8

78. ''குண்டர்களும் கைவிட்டார் கொடுஞ்சூலை மிசைக்கொண்டு
மண்டி மிக மேன் மேலும் பெருகுதலால் மதிமயங்கிப்
பண்டையுற வுணர்ந்தார்க்குத் திலகவதியார் உளராக்
கொண்டவர்பால் ஊட்டுவான் தனைவிட்டார் குறிப்புணர்த்த''
திருநா 55

''நானார்? என் உள்ளமார்? ஞானங்களார்? என்னை யாரறிவார்?
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்' மதிமய்ங்கி
ஊனாருடை தலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ'' 10.2

79. ''திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்
பெருவாழ்வுவந்த தெனப் பெருந்தகையார் பணிந்தேற்றங்
குருவார அணிந்து தமக் குற்றவிடத் துய்யுநெறி
தருவாராய்த் தம் முன்பு வந்தார் பின் தாம்வந்தார் திருநா 67

''உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம் போல்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம் பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர் சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே''

80. ''**மையார் தடங்கண் பரவையார்**
மணவாளன்தன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய் வாழ்த்தி
மனத்தால் நினைக்கும் கடப்பாட்டில்
செய்யாள்கோனும் நான்முகனும்
அறியாச் செம்பொற்றாளிணைக்கீழ்
உய்வான்சேர உற்றநெறி இதுவே
என்றன்பினில் உய்த்தார்'' பெருமிழலை.5

''மொய்யார் தடம் பொய்கை புக்குமுகே ரென்னக்
கையால் குடைந்து குடைந்து ன்கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண்மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம்
உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.''

81. ''அங்கமெலாம் முழுதாய பரவசத்தின்
முகிழ்த்த மயிர்க்கால் மூழ்கவிழுதாரை
கண்பொழிய விதிர்புற்று விம்மினார் '' திருநா 335

''மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரையார் கழற்கு என் கைதான்
தலைவைத்துக் கண்ணீர் ததும்பி....'' 5-1

82. ''நினைப்பவர்தம் மனம் கோயில் கொண்டருளும்'' திருநாவு 174

''சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்'' 22/10

83. ''**சென்னிமிசை பாதமலர்**
சூட்டினான் சிவபெருமான் '' திருநாவு - 195

''**இருங்கழல் சென்னியில்**
வைத்த சேவக போற்றி''

84. ''மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயிலன்னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு என்ன ஏற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத்தாரும்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார்''

காரைக்கால் -42

''குன்றங் கிடையுங் கடந்துமார் கூறும் நிதி கொணர்ந்து
மின்றங் கிடைநும் மையும்வந்து மேவுவன் அம்பலஞ்சேர்
மன்றங் கிடை மரு தேகம்பம் வாஞ்சியம் அன்ன பொன்னைச்
சென்றங் கிடைகொண்டு வாடாவகை செப்பு தேமொழியே''

-திருக்கோவையார் - 268.

85. ''அங்கணன் ''**அம்மையே**'' என்
றருள்செய ''**அப்பா**'' என்று'' - காரைக் -59

''**அம்மையே அப்பா**
ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே'' -37 - 3

86. ''இறவாத இன்ப **அன்பு**'' -60

''மெய்கலந்த அன்பர் **அன்பு**'' -5.74

87. ''கையதனால் ஒத்தறுத்துப் பாடுதலும்
கண்டருளிக் கருணைகூர்ந்த
செய்ய சடை வானவர்தம் அஞ்செழுத்தும்
எழுதிய நற் செம்பொற்றாளம்
ஐயரவர் திருவருளால் எடுத்த
பாடலுக் கிசைந்த அளவால் ஒத்த
வையமெலாம் உய்யவருமறைச்
சிறுவர் கைத்தலத்து வந்ததன்றே''

பெருமான் கையிலிருந்த தாளத்தை பிள்ளையார்க்கு கொடுத்தார். திருஞா - 103

''தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாளம் இருந்தவாறு அன்னே என்னும்'' - 17/8

88. ''வந்திருந்த தொண்டர்க்கும் மல்கு செழு
மறையவர்க்கு மற்றுளோர்க்குஞ்
சிந்தை மகிழ்வுற மலர்ந்து திருவமுது
முதலான சிறப்பின் செய்கை
தத்தம் அள வினில் விரும்புந் தகைமையினாற்
கடனாற்றுஞ் சண்பை மூதூர்
எந்தை பிரான் சிவலோக மெனவிளங்கி
எவ்வுலகும் ஏத்து நாளில்'' -திருஞா. 110

''செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன், ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்து உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங் காண் அம்மானாய்'' - 8/11

89. தோள்நோக்கம்:

இது ஒரு பெண்கள் விளையாட்டு. மறைந்து போகா வண்ணம் விளையாட்டை ஞானம் விளையும் விளையாட்டாக்த் திருவாசகத்தில் இடந்தந்து ஆக்கினார். இனிச் சேக்கிழார், திருஞானசம்பந்தரை சிவபாத இருதயர் தம் தோளின் மேல் வைத்துக் கொள்வதை, நாதன் கழல் தம் முடிமேல் கொண்ட கருத்துடன் திருஞானசம்பந்தர் இருந்தார் என்பதால் நாம் தோளின் மேலுள்ள பிள்ளையாரை நோக்குவதாலும் திருத்தோள் நோக்கம் என்பாம்.

''பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த் தேர் முகக் குறும் பேதை குணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா உன் சேவடி கூடும் வண்ணம் தோணோக்கம்'' -15/1

''தாதவிழ்செந் தாமரையின் அகவிதழ்போல்
சீரடிகள் தரையின் மீது
போதுவதும் பிறர் ஒருவர் பொறுப்பதுவும்
பொறா அன்பு பிரிந்த சிந்தை
மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத்
தோளின் மேல் வைத்துக் கொள்ள
நாதர்கழல் தம் முடிமேல் கொண்ட
கருத்துடன் போந்தார் ஞான முண்டார்'' திருஞா - 113

90. ''முத்துநல் **தாமம்பூ மாலை** தூக்கி
முளைக் குடந்தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடு பல் லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே'' - 9/1

''காவணம் எங்கும் இட்டுக் கமுகொடு கதலிநாட்டிப்
பூவணை **தாமந்தூக்கிப்** பூரண கும்பம் ஏந்தி
ஆவண வீதி எல்லாம் அலங்கரித் தண்ணலாரை
மாவணை மலர்மென்சோலை வளம்பதி கொண்டு புக்கார்''
திருஞான - 118

91. ''**நள்ளிருட்கண் நின் றாடுவார்** உறைபதி நடுவகண்டன போற்றி''
திருஞான - 145

''**நள்ளிருளில் நட்டம் பயின்றாடும்** நாதனே!'' 1.89

92. ''செல்வம் பிரிவறியாத் தில்லைவாழ் அந்தணரும்
எல்லையில் சீர்ச் சண்பை இளவே றெழுந்தருளி
ஒல்லை இறைஞ்சா முன் தாமும் உடன் இறைஞ்சி
மல்லல் அணிவீதி மருங்கணைய வந்தார்கள்''
திருஞான - 171.

''பிறிவறியா அன்பர் நின் அருட்பெய்கழல் தாளிணைக் கீழ்
மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார் உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன் நின்னையே யறியும்
அறிவறியேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே.'' -24/9

93. ''ஒன்றிய சிந்தை உருக உயர்மேருக்
குன்றனைய பேரம்பலமருங்கு கும்பிட்டு
மன்றுள் நிறைந்தாடும் **மாணிக்கக் கூத்தர்** எதிர்
சென்றணைந்து தாழ்ந்தார் திருக்களிற்றுப் படிக்கீழ்''
திருஞான - 173.

''மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை **மாணிக்கக் கூத்தன்** தன்னை'' -9/12

94. ''இன்னதன்மையில் இன்னிசைப் பதிகமுந்
திருக்கடைக் காப்பேந்தி
மன்னும் **ஆனந்த வெள்ளத்தில் திளைத்**
தெதிர் வந்து முன் நின்றாடும்'' திருஞா. -175

''**ஆனந்தவெள்ளத்தழுந்து** மோர் ஆருயிர்'' திருக்கோவை 307

95. ''**தொண்டர்** ஆர்த்தனர் சுருதிகள் **ஆர்த்தன** தொல்லை
அண்டர் ஆர்த்தனர் அகிலமும் ஆர்ப்புடன் எய்தக்
கொண்டல் ஆர்த்தன முழவமும் ஆர்த்தன குழுமி
வண்டறா ப்பொலி மலர்மழை ஆர்த்தது வானம்
வளையும் ஆர்த்தன'' திருஞா-217, 218

''சூடகந்தோள்வளை **ஆர்ப்ப ஆர்ப்ப**
தொண்டர் குழாம் எழுந்தார்ப்ப ஆர்ப்ப''' - 9/7

96. ''மன்னு கோயிலை...
என்னையும் பொருளாக இன்னருள் புரிந்தருளும்
பொன்னடித்தலத் தாமரை போற்றி எனத் தொழுதார்'' திருஞான - 226

''**நம்மையுமோர் பொருளாக்கி** நாய் சிவிகை ஏற்று வித்த
அம்மையெனக் கருளியவாறு'' - 50.9

97. ''வினைதரும் **பவந்தீர்ப்பவர்** கோயில்கள் மேவி'' திருஞான 235

''செய்யவனே சிவனே சிறியேன் **பவம் தீர்ப்பவனே''** 6:7

98. ''வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதாள் தடிந்த சண்டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார்'' திருஞான - 248

''தீதில்லை மானி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்'' - 15

99. ''மந்திரங்களான எலாம் அருளிச் செய்து
மற்றவற்றின் வைதிக நூற்சடங்கின் வந்த
சிந்தை மயக் குறும் ஐயந் தெளிய எல்லாம்
செழுமறையோர்க் கருளி அவர்தெருளும் ஆற்றால்
முந்தைமுதன் மந்திரங்கள் எல்லாந் தோன்றும்
முதலாகும் முதல்வனார் **எழுத்தஞ்சு** என்பார்
அந்தியினுள் மந்திரம் அஞ்செழுத்துமே என்று
அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்''

திருஞான - 266

''சேரக் கருதி **சிந்தனையைத்** திருந்தவைத்துச் **சிந்திமின்**'' 45.9

''மரணம் பிறப்பென் றிவையிரண்டின் **மயக்கறுத்த**'' 10.9

''இப்பிறப்பினில் இணைமலர் கொய்து நான்
இயல்போடு **அஞ்செழுத்தோதி**'' 41.7

100. **''பந்தணை** மெல்விரலாளும் பரமரும் பாய்விடை மீது
வந்து பொன் வள்ளத் தளித்த
வரம்பில் ஞானத்தமுதுண்ட
செந்தமிழ் ஞான சம்பந்தர்
திறங்கேட் டிறைஞ்சுதற் காக
அந்தணர் பூந்தராய் தன்னில்
அணைந்தனர் நாவுக் கரையர் ''

திருஞா. 268

''**பந்தணை விரலாள்** பங்க நீ அல்லால்'' 28.8

''**பந்தணை மெல்விரலாட்கு** அருளும்'' 43.5

101. ''திருக்கோடிகாவில் அமர்ந்த தேவர்
சிகாமணி தன்னை''

திருஞான - 292

''கோலமேனி...
சீலமேது மறிந்திலாத வென் சிந்தை வைத்த **சிகாமணி**'' 30.5

102. ''சண்பையர்தம் பெருமானுந் தாங்கரிய பெருங்காதல்
பண்புடைய சிறுத் தொண்டருடன் பயின்று மற்றவரை
மண்பரவுந் திருப் பதிகத் தினில்வைத்துச் சிறப்பித்து
நண்பருளி யெழுந்தருளத் தாமினிது நயப்புற்றார்'' சிறுத் 24

பண்பு மிக்க சிறுத் தொண்டர்
பரிவு கண்டு பயிரவரும் **நண்புமிக்கீர்!...** -சிறுத் 50

''என்பே உருக, நின்அருள் அளித்து உன்
இணைமலர் அடிகாட்டி
முன்பே என்னை ஆண்டுகொண்ட
முனிவா, முனிவர் முழுமுதலே
இன்பே அருளி, எனை உருக்கி
உயிர் உண்கின்ற எம்மானே,
நண்பே, அருளாய் என் உயிர்
நாதா, நின் அருள் நாணாமே''. 44.3

103. ''அமுது செய்து எங் **குடிமுழு துய்யக்** கொள்வீர்'' - அப்பூதி 30
''என் **குடிமுழுதாண்டு**'' (37/1, 37/6)

104. ''மேவு நாளில் அவ் வேதியர் முன்புபோல் விரும்பும்
தாவில் பூசனை முதற்செய்கை **தலைத்தலை** சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராந் திருமறைச் சிறுவர்
பூவடித் தலம் பொருந்திய வுணர்வொடும் பயின்றார்''
திருநீலநக் - 35

''தாரகை போலும் **தலைத்தலை** மாலை'' - 6/48

105. ''**சோதி** விளக்கொன் றேற்றுதலுஞ்
சுடர்விட்டெழுந்த தனுநோக்கி...'' நமிந. 14

''**சோதியே** சுடரே சூழொளி விளக்கே'' - 29-1

106. ''மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக் கொள்ளும்''
- திருஞான -77

''**கண்ணுதலான் தன் கருணைக்** கண்காட்ட வந்தெய்தி'' 1-21

107. ''அறன்மலியுங் கான்யாற்றின் நீர்நசையால் **அணையுமான்**
பெறல்அரிய புனல்என்று **பேய்த்தேரின்** பின்தொடரும்;
உறையுணவு கொள்ளும்புள் தேம்ப வயல் இரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து வதியுமால்''.

சம்பந்தர் - 386

''இருமுச் சமயத் தொருபேய்த் **தேரினை**
நீர்நசை தரவரும் **நெடுங்கண் மான்கணம்**
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்காதசைந்தன'' திருவண்டப்பகுதி - 79-83

''பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாஉன் சேவடி கூடும் வண்ணம் தோணோக்கம்''

திருத்தோணோக்கம் - 1

108. ''தேவர்பிரான் அமர்ந்ததிரு இரும்பூளை சென்றெய்தக்
காவணநீள் தோரணங்கள் நாட்டியுடன் களிசிறப்பப்
பூவணிமா லைகள் நாற்றிப் **பூரண பொற் குடம்**நிரைத்தங்(கு)
யாவர்களும் போற்றிசைப்பத் திருத்தொண்டர் எதிர் கொண்டார்''

சம்பந்தர் - 400

''**பூரண பொற்குடம்** வைக்கமணிமுத்தம் பொன்பொதிந்த
தோரணம் நீடுக தூரியம் ஆர்க்கதொன் மாலயற்குங்
காரணன் ஏரணி கண்ணுத லோன்கடல் தில்லையன்ன
வாரணி வம்முலை மன்றலென் றேங்கும் மணமுரசே.''

திருக்கோவையார் - 296

109. ''கோயில் வாயில் முன்னடைந்து கூற்றன் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை அடியார்க் களிக்குந் தண்ணளியும்
ஏயுங் கருவி யிற்றொடுத் தங் கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார்''

-திருநீலகண்ட யாழ்ப் - 8

''தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'' 1-61

''தாயாய் முலையைத் தருவானே தாரா
தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ நம்பி
இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன் தயாநீ
என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய்
நான்தான் வேண்டாவோ'' - 50.6

''பால் நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய'' - 37.9

110. ''மைந்தன் றன்னை யிழந்த துயர்
மறந்து நான்வந் தணைந்ததற்கே
சிந்தை மகிழ்ந்தார் மறையோனும்
மனைவி தானுஞ் சிறுவனையான்
அந்த முதலைவாய் நின்றும்
அழைத்துக் கொடுத்தே யவிநாசி
எந்தை பெருமான் கழல்பணிவேன்
என்றார் சென்றா ரிடர்களைவார்'' வெள்ளானை - 9

''செய்வதொன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்து என்
ஐயன் அணைந்தான் எனை ஆளும் அண்ணல் அணைந்தான், ஆருரில்
சைவன் அணைந்தான் என் துணையாம் தலைவன் அணைந்தான் தரணி எலாம்,
உய்ய அணைந்தான் அணைந்தான் என்று ஓகை முரசஞ் சாற்று வித்தார்''.
-வெள்ளானை-17

''நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால
மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச
தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி அப்பா
பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதீ செய்வ
தொன்றும் அறியேனே'' - 50/7

''ஈசனே... செய்வதொன்றும் அறியேனே''. 5/51

111. ''கரிய கண்டர்தங்கோயிலை,
வலங்கொண்டு காதலாற் பெருகன்பு
புரியு முள்ளத்தருள்ளணைந்து,
இறைவர் தம் பூங்கழலிணை போற்றி
அரிய செய்கையி **லவனியில்,**
வீழ்ந்தெழுந்தலைப்புறு மனைவாழ்க்கை
சரியவே தலைக்குத்தலை மாலையென்
றெடுத்தனர் தமிழ்மாலை'' -வெள்ளானை-2௭

''எடுத்த அத்திரு பதிகத்தின் உட்குறிப்(பு) இவ்வுல கினிற்**பாசம்**
அடுத்த வாழ்க்கையை அறுத்திடவேண்டும் என்று அன்பர்,
அன்பினிற்பாடக்
கடுத்த தும்பிய கண்டர்தங் கயிலையிற் கணத்தவருடன் கூடத்
தடுத்த செய்கைதான், முடிந்திடத் தங்கழற் சார்புதந்தளிக்கின்றார்''.
வெள்ளானை - 30

''**பாசவே ரறுக்கும் பழம்பொருள்** தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே'' - 37/7

''தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து **பாசமெனுந் தாழுருவி**
உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத் துட்பொருளை
ஐயன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே '' -51/7

''காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கரையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே'' - 9/6

112. ''மன்றலந்தருமிடைந்தபூங், கயிலையில் மலைவல்லியுடன் கூட
வென்றி வெள்விடைப் பாகர்தம் வீற்றிருந்தருளிய பொழுதின்கண்
ஒன்றுசிந்தை நம்மூரனை உம்பர் வெள்ளானையினுடனேற்றிச்
சென்று கொண்டிங்கு வாருமென் றயன் முதற்றேவர்கட்
கருள் செய்தார்''
வெள்ளானை - 31

''வான நாடர்களரியயன் முதலினோர்,
வணங்கிமுன் விடைகொண்டு
தூநலந்திகழ்சோதி வெள்ளானையுங் கொண்டு
வன்தொண்டர்க்கு
தேனலம்பு தண் சோலைசூழ்
மகோதையிற் திருவஞ்சைக் களஞ்சேரக்
கானிலங் கொள வலங்கொண்டு மேவினார்,
கடிமதிற் றிருவாயில்'' -வெள்ளானை - 32

''தேவர் தங்குழாம் நெருங்கிய வாய்தனில்
திருநாவ லூரர்தம்
காவல் மன்னரும் புறப்பட
எதிர்கொண்டு கயிலைவீற்றிருக்கின்ற
பூவலம்புதண் புனற்சடைமுடியவர்
அருளிப்பாடு எனப்போற்றி
''ஏவல்'' என்ற பின் செய்வதொன் றிலாதவர்
பணிந்தெழுந் தெதிரேற்றார்'' வெள்ளானை - 33

''முன்னின்று ஆண்டாய் எனைமுன்னம் யானும்
அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிறபட்
டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வர நின்று போந்தி
டென்னா விடில் அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ பொன்னம்
பலக்கூத் துகந்தானே'' -21/2

113. ''பெருகு வேதமும் முனிவரும் துதிப்பரும் பெருமையாய்!
உனை அன்பால்,
திருஉ லாப் புறம் பாடினேன் திருச்செவி
சாத்திடப் பெறவேண்டும். மருவு பாசத்தை அகன்றிட
வன்தொண்டர், கூட்டம் வைத்தாய்'' என்ன, அருளும் ஈசருஞ்
'சொல்லுக' என்றனர் அன்பருங் கேட்பித்தார், வெள்ளானை-47

''வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார், கூட்டமும் வைத்தெம் பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ'' 13.7

114. ''**வானாகி நிலனாகி யனலு மாகி**
மாருதமா யிருசுடராய் நீருமாகி
ஊனாகி யுயிராகி யுணர்வுமாகி
யுலகங்க ளனைத்துமாய் யுலகுக்கப்பால்
ஆனாத வடிவாகி நின்றார் செய்ய
அடி பரவி அன்றிரவு துயிலும்போது
கானாடு கங்காளர் மிழலைமூதூர்
காதலித்தார் கனவிலணைந்தருளிச் செய்வார்'' திருஞா. -563

''**வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே'' - 5-15

115. ''வெய்ய தீங்கிது வேந்தன்மேற் றெனும் விதி முறையால்
செய்யனே திரு வாலவா யெனுந் திருப் பதிகஞ்
சைவர்வாழ்மடத் தமணர்களிட்டதீத் தழல் போய்ப்
பையவே சென்று பாண்டியற் காகெனப் பணித்தார்''. சம்- 704.

''தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழ்உருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயன் எனக்கருளியவா றாபெறுவா ரச்சோவே'' - 51/7

''பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
பயிலு நெடு மங்கலநாண் பாதுகாத்தும்
ஆண்டகையார் குலச்சிறையாரன்பினாலு
மரசன்பா லபராத முறுதலாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னாதலாலுஞ்
தீப்பிணியைப் **பையவே** செல்க வென்றார்'' சம் - 705

116. ''ஞானத்தின் திருவுருவை நான்மறையின் **தனித்துணையை**
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொ டுக்கும்
கானத்தின் எழு பிறப்பைக் கண் **களிப்பக் கண்டார்கள்''** 728

''**தனித்துணை** நீ நிற்க யான் தருக்கித்
தலையினால் நடந்த வினைத்துணையேனை'' - 6.39

''**வான் பழித்து இம் மண்புகுந்து** மனிதரை
ஆட்கொண்டவள்ளல்'' 18.4

''கண்களிரண்டும் அவன் கழல்கண்டு **களிப்பன** ஆகாதே'' 49-1

117. ''கற்பகம் ஈன்ற செவ்விக் காமரு **பவளச் சோதிப்**
பொற்றிரள் வயிரப் பத்திப் பூந்துணர் மலர்ந்த போலும்
நற்பதம் பொலிவு காட்ட ஞாலமும் விசும்பும் போலும்
அற்புதம் எய்தத் தோன்றி அழகினுக் கணியாய் நின்றாள்''
- ஞானசம் - 1108

''பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்து அசும்பு
ஒழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின்று இடர்க்கடற்
சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச் சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே.'' 26/7

118. ''எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்''.
திருஞா 1109

அ. ''**கண்ணுதலான் தன்கருணைக்** கண்காட்ட வந்தெய்தி''

ஆ ''ஆற்றின்ப **வெள்ளமே** அத்தாமிக் காய்நின்ற''

இ. ''நீரின்ப **வெள்ளத்துள்** நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங்கொண்டீர்
பாரின்ப **வெள்ளங்** கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனார்
ஓரின்ப **வெள்ளத்** துருக்கொண்டு தொண்டரை
உள்ளங்கொண்டார்
பேரின்ப **வெள்ளத்துட்** பெய்கழ லேசென்று பேணுமினே''.

உ. ''ஆனந்த **வெள்ளத்** தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த **வெள்ளத்** திடைத்திளைத் தாலொக்கும்
அம்பலஞ்சேர்
ஆனந்த **வெள்ளத்** தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த **வெள்ளம்** வற் றாதுமுற் றாதிவ் வணிநலமே''
-திருக்கோவையார் (307)

119. ''மற்றவர் தமக்குவண் புகலி வாணர் நீர்
பெற்றபெண் விடத்தினால் வீந்த பின்னையான்
கற்றைவார் சடையவர் கருணை காண்வர
உற்பவிப் பித்தலால் **உரைத காதென**'' -திருஞா 1114

''புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம்
மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல்
பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென
நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் **அம்மநாம் அஞ்சு மாறே.**'' 3.51

'உரைதகா' தென்பதில் 'அம்ம நாம் அஞ்சுமாறே' என்ற குறிப்பும் ஓர்ந்து உணரலாம்.

120. ''பரவிவரும் ஆனந்தம் நிறைந்ததுளி **கண்பனிப்ப**
விரவுமயிர்ப். புளகங்கள் மிசைவிளங்கப் புறத்தணைவுற்(று)
அரவநெடுந் திரைவேலை அணிவான்மி யூர்அதனுள்
சிரபுரத்துப் புரவலனார் சிலநாளங் கினிதமர்ந்தார்''. திருஞா 1124

''ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை **கண்பனிப்பப்**
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்கனே பித்தொருவர் ஆமாறும்

ஆர் ஒருவர்? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார் உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்''. 7.15

121 ''தவஅரசாள உய்க்குந் தனிக்குடை நிழற்றச் சாரும்
பவம்அறுத் தாள வல்லார் பாதம்உள் ளத்துக் கொண்டு
புவனங்கள் வாழ வந்த பூந்தரா ட் வேந்தர் போந்து
சிவனமர்ந் துறையும் நல்லூர்த் திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார்''.
திருஞா 1206

''**பிறப்பறுக்கும்** பிஞ்ஞகன்றன் பெய் கழல்கள் வெல்க'' 1.7

122 ''**அழகினுக் கணியாம் வெண்** ணீறஞ்செழுத் தோதிச் சாத்திப்
பழகிய அன்பர் சூழப் படரொளி மறுகில் எய்தி
மழவிடை மேலோர் தம்மை மனங்கொள வணங்கி வந்து
முழவொலி எடுப்ப முத்தின் சிவிகைமேற் கொண்ட போது'' -1217

''**சுந்தர நீறணிந் தும்**மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே'' 9.3

123 ''மாமறை மைந்த ரெல்லாம் மணத்தெதிர் சென்று மன்னுந்
தூமலர்ச் **செம்பொற் சுண்ண**ஞ் தொகுநவ மணியும் வீசத்
தாமரை மலரோன் போல்வார் அரசிலை தருப்பைதோய்ந்த
காமர்பொற் கலச நன்னீ இருக்குடன் கலந்துவீச'' - 1224
''ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொற்செய் சுண்ணம் இடித்து நாமே''. -9/16

124 ''தேவர்கள் தேவர் தாமுந் திருவருள் புரிந்து நீயும்
பூவையன் னாளும் இங்குன் புண்ணிய மணத்தின் வந்தார்
யாவரும் என்பாற் **சோதி** இதனுள்வந் தெய்தும் என்று
மூவுல கொளியால் விம்ம முழுச்சுடர்த் தாணுவாகி''. திருஞ 1246

''சிவனே! ஆர் உறவு எனக்கிங்கு ஆர் அயல்
உள்ளார் ஆனந்தம் ஆக்கும் என்**சோதி**''
''**சோதி**யாத தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கரிய ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே'' - 22.9

125 ''கோயிலுட் படமேல் ஓங்குங் கொள்கையாற் **பெருகுஞ்சோதி**
வாயிலை வகுத்துக்காட்ட மன்னுசீர்ப் புகலி மன்னர்
பாயின ஒளியால் நீடு பரஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிரு ஞாலம் உய்ய வழியினை அருளிச்செய்வார்'' சம் - 1247

''**சோதியே** சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்'' 29.1

126. ''ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு **நமச்சிவா** யச்சொலாம்''
என்றானசீர் நமச்சிவாயத் திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனும் கேட்க அருள்செய்(து).'' இம் மணத்தில்
வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக'' என்ன சம் - 1248

''**நமச்சிவாய** வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க.
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க'' 1.1-5

127. ''**கண்ணுதலார்** திருமேனி உடன்கூடக் கவுணியனார்
நண்ணியது தூரத்தே கண்டுநண்ணு கப்பெறா
விண்ணவரும் முனிவர்களும் விரிஞ்சனே முதலோரும்
எண்ணிலவர் ஏசறவு தீரஎடுத் தேத்தினார்.'' திருஞா-1255

''**கண்ணாற் நுதலோய்** கழலிணைகள்
கண்டேன்கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும்நான் அவையே
எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன்
கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை
சால அழகுடைத்தே''. - 33/9

128.''**இன்னணம் விளங்கிய ஏர்கொள் சாயலாள்**
தன்னைமுன் கண்ணுறக் கண்ட தாதையார்
பொன்னணி மாளிகைப் புகலி வேந்தர்தாள்
சென்னியிற் பொருந்தமுன் சென்று வீழ்ந்தனர்''. சம் - 1110

''மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்தி
டாவகை நல்கினான்
வேய தோளுமை பங்கன்எங்கள் திருப்பெ
ருந்துறை மேவினான்
காயத் துள்ளமு தூறஊறநீ கண்டு
கொள்ளென்று காட்டிய
சேயமாமலர்ச் சேவடிக்கண்நம் **சென்னி**
மன்னித் திகழுமே''. 42/5

129.''இருந்த இடைச் சுரம்மேவும் இவர்வண்ணம் என்னே!'' என்று
அருந்தமிழின் திருப்பதிகத் தலர்மாலை கொடுபரவித்
திருந்துமனங் கரைந்துருகத் திருக்கடைக்காப் புச்சாத்திப்
பெருந்தனி வாழ் வினைப்பெற்றார் பேருலகின் பேறானார்''.
திருஞா -1128

(அ)''சேரக்கருதிச் சிந்தனையைத் **திருந்த வைத்துச் சிந்திமின்**
போரிற் பொலியும் வேற்கண்ணாள் பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப்பருகி ஆராத ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே பொய்யிற் கிடந்து புரளாதே''
45/9

(ஆ)''அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்தமாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவப்புரத் தரைசே'' -22/2

130.''நிறைந்தாரா **வேட்கையினால்** நின்றிறைஞ்சிப் புறம் போந்தங்
குறை தருளிப் பணிகின்றார் உமைபாகர் அருள்பெற்றுச்
சிறந் திருத் தொண்டருடன் எழுந்தருளிச் செந்துருத்தி
அ து அளிகள் பயில்சாரல் திருக்கழுக்குன் றினை
அணைந்தார்''.
திருஞ -1129

''சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம் பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ'' 13/18

131. ''திருக்கழுக்குன்றத்தமர்ந்த **செங்கனகத் தனிக்குன்றைப்**
பெருக்கவளர் காதலினால் பணிந்தெழுந்து பேராத
கருத்தினுடன் காதல்செயுங் கோயில்கழுக் குன்று என்று
திருப்பதிகம் புனைந்தருளிச் சிந்தை நிறை மகிழ்வுற்றார்''. ஞா 1131

''ஆடகச்சீர் மணிக்குன்றே'' 5.11

132.''அரசிலியை அமர்ந்தருளும் **அங்கணர** சைப்பணிந்து
பரசிஎழு திருப்புறவார் பனங்காட்டூர் முதலாய
விரைசெய்மலர் கொன்றையினார் மேவுபதி பலவணங்கித்
திரைசெய்நெடுங் கடலுடுத்த திருத்தில்லை நகரணைந்தார்''.
ஞா - 1135

''**அங்கண்** அரசை அடியோங்கட் காரமுதை'' 7/17

133.''பரவுதிருப் பதிகங்கள் பலவும் இசை யினிற்பாடி
விரவிய **கண்ணருவிநீர்** வெள்ளத்திற் குளித்தருளி
அரவணிந்தார் அருள்பெருகப் புறம்பெய்தி அன்பருடன்
சிரபுரத்துப் பெருந்தகையார் தந்திருமா ளிகை சேர்ந்தார்'' ஞா - 1151

''நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண் பனிப்ப'' 7/15

134. ''மாளிகையின் உள்ளணைந்து மறையவர்க் கருள்புரிந்து
தாள்பணியும் பெருங்கிளைக்குத் தகுதியினால் **தலையளிசெய்(து)**
ஆளுடைய தம்பெருமான் அடியவர்களுடன் அமர்ந்து
நீளவரும் பேரின்பம் மிகப்பெருக நிகழுநாள்''. 1152

''தானே வந் தெம்மைத் **தலையளித்தாட் கொண்டருளும்**
வான்வார் கழல்பாடி'' - 7/6

135. ''திருஞான சம்பந்தர் திருவுள்ளஞ் செய்ததற்குத்
தருவாய்மை மறையவரும் தாதையரும் தாங்கரிய
பெருவாழ்வு பெற்றாராய்ப் **பிஞ்ஞகனார்** அருள் என்றே
உருகாதின் றின் பமுறும் உளமகிழ்ச்சி எய்துவார்''. - 1160

''பிறப்பறுக்கும் **பிஞ்ஞகன்றன்** பெய்கழல்கள் வெல்க'' 1.7

136. ''கோதையர் குழல்சூழ் வண்டின் குழாத்தொலி **ஒரு பால்** கோல
வேதியர் வேத வாய்மை மிகுமொலி **ஒருபால்** மிக்க
ஏதமில் விபஞ்சி **வீணை யாழொலி ஒருபால்** ஏத்தும்
நாதமங் கலங்கள் கீதநயப்பொலி **ஒரு பால**தாக'' 1200

''இன்னிசை **வீணையர் யாழினர் ஒருபால்**
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் **ஒருபால்**
துன்னிய பிணைமலர்க் கையினர் **ஒருபால்**
தொழுகையர் அழுகையர் துவள் கையர் **ஒருபால்**
சென்னியில் அஞ்சலி கூப்பினர் **ஒருபால்**
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 20/4

137. ''வண்றொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க
இன்று குறை யாகின்ற தென்செய்கேன்'' என நினைந்து
துன்று பெருங் கவலையினால் துயரெய்தி உண்ணாதே
அன்றிரவு துயில்கொள்ள **அங்கணர்**வந் தருள்புரிவார். -ஏயர் 13

''**அங்கணன்** எங்கள் அமரர்பெம்மான் அடியார்க்
கமுதன் அவனிவந்த எங்கள் பிரான்''. 43.10

138. ''ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் **போதுக்காக்கி**
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த **அஞ்செழுத்துக் காக்கி**
தாங்கு கைத்தொழிலின் செய்கை தம்பிரான் **அடியவர்க்காக்கி**
பாங்குடை யுடையுங் கீளும் பழுதில் கோவணமும் நெய்வார்''
நேசநாயனார் -3

''சிந்தனை நின்றனக் காக்கி
நாயினேன்றன் கண்ணினை
நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்காக்கி
வாக்குன் மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்தவிச்சை
மால் அமுதப் பெருங்கடலே! மலையே உன்னைத்
தந்தனை; செந்தாமரைக் காடு அனைய மேனித்
தனிச் சுடரே இரண்டும் இலித் தனியனேற்கே'' - 5/26

139. ''அந்நெறியின் மிக்கார் அவரொழுக ஆன்றதவச்
செந்நெறியின் வைகும் திலகவதியார் தாமும்
தொன்னெறியின் சுற்றத் தொடர்பொழிய தூய சிவ
நன்னெறியே சேர்வதற்கு நாதன் தாள் நண்ணுவார்'' திருநா 41

''பெற்றி பிறர்க்கரிய... சுற்றிய சுற்ற தொடர்
பறுப்பான் தொல்புகழே பற்றி யிப்பாசத்தை பற்றறப் பற்றுவான்
பற்றிய பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்''. 8-20

140. ''சென்று திருவீரட்டானம்..... ஆர்வமுற தங்கையால் துன்று
திருப்பணிகள் செய்ய தொடங்கினார்'' திருநா. 43

''எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க'' 7-19

141. ''புலர்வதன் முன் திருவலகு பணிமாறிப் புனிறகன்ற
நலமலி ஆன் சாணத்தால் நன்கு திரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலரு புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்தார்.''திருநா-44

''ஆமாறுன் திருவடிக்ககே...'' 5.14

142. ''தவமென்று வினையேபெருக்கிச் சார்பல்லா நெறி சார்வார்
திருநா 52

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கி.
51-6

143. ''அருள் பொழியும்...
மருள் பொழி மும்மலஞ் சிதைக்கும் வடிச் சூலம்'' -சிறுத் 35

''அழுக்கடையா நெஞ்சுருக
மும்மலங்கள் பாயும் கழுக்கடை'' 19.7

144. சென்ற **காலத்தின்** பழுது இலாத் திறமும் இனி எதிர்
காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்து அருளப் பெற்ற பேறு இதனால்
எற்றைக்கும் திரு அருள் உடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ்
வேந்தனும் உய்ந்து
வென்றி கொள் திரு நீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார். திருஞா-659

காலமுண்டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டான்எங்கள் பாண்டிப்பிரான்தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான்வந்து முந்துமினே.
திருப்பாண்டிப் பதிகம் 36/5 (சிவானந்த விளைவு)

145. உம்பர் நாயகர் அடியார் பேர் உவகை தாம் எய்த
நம்பி ஆரூரர் **திருக் கூட்டத்தின் நடுவணைந்தார்**
தம்பிரான் தோழர் அவர் தாம் மொழிந்த தமிழ் முறையே
எம்பிரான் தமர்கள் திருத் தொண்டு ஏத்தல் உறுகின்றேன்.
(தடுத் 203)

பாருரு வாய பிறப்பறவேண்டும் பத்திமை யும்பெற வேண்டும்
சீருரு வாய சிவபெரு மானே செங் கமல மலர்போல்
ஆருரு வாயஎன் னார முதேஉன் **அடியவர் தொகை நடுவே**
ஓருருவாய நின் திருவருள் காட்டி என்னையும்
உய்யக்கொண் டருளே!
(எண்ணப் பதிகம் 44/1, [ஒழியா இன்பத்து உவகை)

146. கடையுகத்தில் தனி வெள்ளம் பல விரிக்கும் கருப்பம் போல்
இடை அறாப் பெரும் தீர்த்தம் எவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடை உயர்த்தார் திருத் தோணிப் பற்று விடா மேன்மையதாம்
தடம் அதனில் **துறை** அணைந்தார் தருமத்தின் தலை நின்றார்
திருஞா-58

மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கருணையடியார் குலாவுநீதி குண மாகநல்கும்
போதலர் சோலைப் **பெருந்துறை**யெம் புண்ணியன் மண்ணிடை
வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த அருளறி வார் எம்பிரானாவாரே.
திருவார்த்தை 43-1. (அறிவித்து அன்புறுதல்)

147. அம்பிகை செம் பொற் கிண்ணத்து அமுத ஞா
னங் கொடுப்ப அழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக்
கரசர் எனச் சிறந்த சீர்த்தி
எம்பெரு மக்களும் இயைந்த கூட்டத்தி
லானடியார் இன்பம் எய்தி
உம்பர்களும் போற்றி இசைப்பச் சிவம் பெருகும்
ஒலிநிறைத்தா ருலகம் எல்லாம்

எண்ணிலேன் திருநாமவஞ் செழுத்தும்என் ஏழைமை யதனாலே
நண்ணிலேன் கலைஞானிகள் தம்மொடுநல்வினை நயவாதே
மண்ணிலே பிறந்திறந்து மண்ணாவதற் கொருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

திருவாசகத்தில் திருநீறு பற்றிய குறிப்பு

1. நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும் - 2/104
2. நீற்றோன் காண்க - 3/13
3. நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி - 3/108
4. சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி - 4/203
5. பூசில் தான் திருநீறே நிறையப் பூசி - 5/24
6. சிவனவன் திரள் தோள் மேல்
   நீறு நின்றது கண்டனை; ஆயினும் நோக்கிலை - 5/33
7. கட்ட அறுத்து, எனை ஆண்டு கண்ணார நீறு இட்ட அன்பரொடு, யாவரும் காணவே பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை - 5/49
8. கொம்பர் ஆர் மருங்குல் மங்கை கூற வெண்ணீற போற்றி - 5/67
9. பேசப்பட்டன் நின் அடியாரில்; திரு நீறே பூசப்பட்டேன் - 5/82
10. மெய் இலங்கு வெண்ணீற்று மேனியாய் - 5/92
11. நீறுபட்டே ஒளிகாட்டும் பொன் மேனி நெடுந்தகையே - 6/13
12. ஒண்மையனே, திரு நீற்றை உத்தூளித்து ஒளி மிளிரும் - 6/22
13. தத்துறு நீறுடன் ஆரச்செஞ் சாந்து அணி சச்சையனே - 6/31
14. செய்யா! வெண்ணீறு ஆடி செல்வா - 7/11
15. எம் தரமும் ஆட்கொண்டு, தோள் கொண்ட நீற்றனாய் - 8/3
16. கண்டம் கரியான், செம்மேனியான், வெண்ணீற்றான் - 8/9
17. செய்யானை, வெண்ணீறு அணிந்தானை - 8/13
18. சுந்தர நீறணிந்தும், மெழுகி - 9/3
19. தோள் திருமுண்டம் துதைந்து இலங்க - 9/8
20. பால் வெள்ளை நீறும், பசும் சாந்தும் - 10/18

21. பூசுவதும் வெண்ணீறு, பூண்பதுவும் பொங்கரவம் - 12/1,
22. தன்நீறு எனக்கருளி, தன்கருணை வெள்ளத்து. 16/3
23. வேத மொழியர், வெண்ணீற்றர், செம்மேனியர் 17/1
24. ஆடரப்பூண் உடைத்தோல் பொடி பூசிற்றோர் வேடம் இருந்தவாறு அன்னே 17/4
25. வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர். 17/7
26. தாளி அறுகினர், சந்தனச் சாந்தினர் 17/8
27. விடையாய் ! பொடி ஆடி! 25/5
28. பாதியே! பரனே! பால் கொள்வெண்ணீற்றாய்! 29/1
29. நிருத்தனே! நிமலா! நீற்றனே! 29/2
30. துப்பனே தூயா! தூய வெண்ணீறு துதைந்தெழு துளங்கொளி வயிரத்து ஒப்பனே 29/4
31. நீற்றார் தரு திருமேனி நின்மலனே 34/8
32. வெளிய நீறு ஆடும் மேனி 35/4
33. சேவடி பரவி வெண்ணீறு அணிகிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே 35/5
34. தோள் உலாம் நீற்றன் ஏற்றன் 35/6
35. திரு முண்டம் தீட்ட மாட்டாது அஞ்சுவார் அவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே 35/9
36. கோங்கலர் சேர் குவிமுலையாள்கூறா வெண்ணீறு ஆடி 39/1
37. தூவெள்ளை நீறணி எம் பெருமான் 43/9
38. பால் திருநீற்று எம் பரமனை ; 44/6
39. பொடிசேர் மேனிப் புயங்கன் தன் பூஆர் கழற்கே புகவிடுமே 45/4
40. ஆன நீற்றுக் கவசம்! அடையப் புகுமின்கள் 46/2
41. நாதன் அணித் திருநீற்றினை நித்தலும் 49/4
42. பொன் இயலும் திருமேனி வெண்ணீறு 49/9
43. சுண்ண வெண்ணீறு அணிவித்து தூநெறியே சேரும் வண்ணம் 51/4

திருக்கோவையாரில்

1. செந்நிற மேனிவெண்ணீறணி வோன்தில்லை யம்பலம் போல் (69)
2. ஈசன சாந்தம் எருக்கு மணிந்தோர் (74)
3. மேவியந் தோலுடுக் குந்தில்லை யான் பொடி (88)
4. உறுங்கண்ணி வந்த கணையுர வோன்பொடியாயொடுங்கத் (95)
5. பூசத்திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல் (109)
6. தவளத்த நீறணி யுந்தடந் தோனண்ணல (112)
7. குறியிடத்துக் கொண்டு சேறல் வினைவளம் நீறெழ நீறணியம்பல வன்ன (118)
8. உட்கொண்டு வினாதல் (153)
9. புனைவளர் சாரற் பொதியின் மலைப் பொலி சாந்தணிந்து (154)
10. பாலொத்த நீற்றம் பலவன் கழல் பணியார் பிணிவாய்க் (238)
11. சிவந்த அம் சாந்தமுந் தோன்றின வந்து திருமனைக்கே (361)

ஆளுடைய அடிகள் அருள்மாலை

1. தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே ஆனந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீ திருவாய் மலர்ந்த தமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம் நான் அனுபவிக்க அருளுதியே.

2. கருவெளிக்குட் புறனாகிக் கரணமெலாங் கடந்து நின்ற
பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழும் உயர்வாதவூர் மணியே.

3. மன்புருவ நடுமுதலா மனம்புதைந்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன் பின் அருளுருவம் அடைந்து பின்னர்
இன்புருவம் ஆயினை நீ எழில் வாதவூர் இறையே.

4. உருஆண்டப் பெருமறை என்றுலகமெலாம் புகழ்கின்ற
திருஅண்டப் பகுதியெனும் திருவகவல் வாய்மலர்ந்த
குருஎன்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருஎன்ற தனி அகவல் எண்ணம் எனக்கியம்புதியே.

5. தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருகால் மாற்றுதியே.

6. சேமமிகும் திருவாதவூர்த் தேவென்றுலகுபுகழ்
மாமணியே நீ உரைத்த வாசகத்தை எண்ணுந்தொறும்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும் இன்பெய்துவதே

7. வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப் பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்சுவைகலந்து என்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

8. வருமொழிசெய் மாணிக்கவாசக நின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும் என் உடையானையும் ஒன்று
வித்துத்
தருமொழியாம் என்னிலினிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்மியயல் கூடுவதேன் கூறுதியே.

9. பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண் சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றது மோர் மாறன்பிரம்படியால்
புண்சுமந்து கொண்டது நின்பொருட்டன்றோ புண்ணியனே.

10. வாட்ட மிலா மாணிக்க வாசக நின் வாசகத்தைக்
கேட்ட பொழுது
அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்றால் இங்கு நானடைதல் வியப்பன்றே.

நால்வர் நான் மணிமாலை

1. விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதி சீர்பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனோ
யாதோ சிறந்தது என்கு வீராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலம்
திருவாசக மிங் கொருகால் ஓதில்
கருங்கன் மனமும் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி
அன்பராகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே

2. பெருந்துறை புகுந்து
பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன்
மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு
வாச்சியம்
தூசகல்அல்குல் வேய்த்
தோளிடத் தவனே.

3. கடல் நிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதி நாயகற்கு
முடிவிளக் கெரித்தும் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கண் துணைவியை அளித்தும்
அருமகள் நறும்பூங் கருமயிர் உதவியும்
நெல்முளை வாரி இன்னமு தருத்தியும்
கோவணம் நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படு மணிமீன் அரற்கென விடுத்தும்
பூட்டி அரிவாள் ஊட்டி அரிந்தும்

தலையுடை ஒலிக்கும் சிலையிடை மோதியும்
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர்த் துணித்தும்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றும்
குற்றஞ் செய்த சுற்றம் களைந்தும்
பூக்கொளு மாதின் மூக்கினை அரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநாள் ஒருசிலர் தொண்டர் ஆயினர்
செங்கண்மால் தடக்கையிற் சங்கம் நாண
முள் தாள் தாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப
பாடும் பணி நீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ்முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழில் மேனியில் மாற்றடிபட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்
இருக்கு மடுக்கல் அரக்கன் எடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமகள் தழுவ மனமகிழ்வோனே.

4. வலமமு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கருணைக் கடல்
முகந்துலகுவப்ப உகந்த மாணிக்க வாசகன்
எனும் ஒரு மாமழை பொழிந்த
திருவாசகம் எனும் பெருநீர் ஒழுகி
ஓதுவார் மனமெனும் ஒண்குளம் புகுந்து
நாஎனும் மதகில் நடந்து கேட்போர்
செவியெனும் மடையில் செவ்விதிற் செல்லா
உளமெனும் நிலம் புக ஊன்றிய அன்பாம்
வித்திற் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன்தருமே.

5. வேண்டுநின் அடியார் மெய்யன்பு எனக்கும்
அருள்செய் சிவனே யலந்தேன் அந்தோ
முறையோ முறையோ இறையோனே என்று

அழுது செம்பொன் அம்பலக் கூத்தன்
அருளாற் பெற்ற அன்பினில் ஒருசிறிது
அடியனேற்கும் அருளல் வேண்டும்
நீயே கோடல் நின்னருட் பெருக்கிற்கு
ஏற்றது அன்று இளஏறு உகந்தேறியைப்
பரிமாவிசை வரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப் பொருள் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நிழலிற் கொள்ளை கொள்வோயே.

6. நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கும் மதுர வாசக
கலங்குறு புலனெறிவிளங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வநாயகன்
ஒருகலை யேனும் உணரான்அஃதான்று
கைகளோ முறிபடும் கைகள் காணிற்
கண்களோ ஒன்று வயங்கித்தோன்றும்
பழிப்பின் ஒன்று காலையிற் காணும்
மாலையில் ஒன்று விழிப்பின் எரியும்
ஆயினும் தன்னை நீ புகழ்ந் துரைத்த
பழுதிற் செய்யுள் எழுதினன் அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி அறியா என் பணிவானே.

7. பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரின் அழுங்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றாற் போலக்
களிகூர்ந்துள்ளக் கவலை தீர்ந்தேனே
அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கை
வாதவூர் அன்ப ஆதலாலே
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
நன்றறிவாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் இலர் எனும்
செஞ்சொற் பொருளின் தேற்றறிந்தேனே

8. திருவார் பெருந்துறைச் செழுமலர்க்குருந்தின்
நிழல்வாய் உண்ட நிகரிலா னந்த
தேன்றேக் கெறியும் செய்ய
மாணிக்க வாசகன் புகன்ற மதுரவாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கும் மதுரவாசகம்
ஒதின் முத்தி உறுபயன் வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே

9. தானே முத்தி தருகுவன் சிவன் அவன்
அடியன் வாதவூரனைக்
கடிவில் மனத்தால் கட்ட வல்லார்க்கே.

10. செய்யவார்சடை தெய்வசிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப
பாஎனப் படுவது உன்பாட்டு
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே

திருக்கோவையார்

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண்டு ஓங்குதெய்வ
மருவளர் மாலையர் வல்லியின் ஒல்கி அனநடை வாய்ந்து
உருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோன்று ஒளிர்கின்றதே. 4

போதா விசும்போ புனலோ பணிக ளதுபதியோ
யாதோ அறிகுவ(து) ஏதும் அரிதி யமன்விடுத்த
தூதோ அனங்கன் துணையோ இணையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயி லோஎன நின்றவர் வாழ்பதியே. .. 8

பாயும் விடையரன் தில்லையன் னாள்படைக் கண்ணிமைக்கும்
தோயும் நிலத்தடி தூமலர் வாடும் துயரமெய்தி
ஆயும் மனனே அணங்கல்லள் அம்மா முலைசுமந்து
தேயும் மருங்குல் பெரும்பணைத் தோளிச் சிறுநுதலே. .. 12

அகல்கின்ற அல்குல் தடமது கொங்கை அவைஅலம்நீ
புகல்கின்ற(து) என்னைநெஞ்(சு) உண்டே இடைஅடை யார்புரங்கள்
இகல்குன்ற வில்லில்செற் றோன்தில்லை ஈசனெம் மான்எதிர்த்த
பகல்குன்றப் பல்உகுத் தோன்பழ னம்அன்ன பல்வளைக்கே. .. 16

அணியும் அமிழ்தும்என் ஆவியம் ஆயவன் தில்லைச்சிந்தா
மணிஉம்ப ரார்அறி யாமறை யோன்அடி வாழ்த்தலரின்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின்னும்
பணியும் புரைமருங் குல்பெருந் தோளி படைக்கண்களே. .. 20

வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வான்நுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயின் நீக்கிஇக் கொண்டைஅங் கன்னியைக் கொண்டுதந்த
விளைவயல் வால்விய வேன்நய வேன்தெய்வம் மிக்கனவே. .. 24

ஏழுடை யான்பொழில் எட்டுடை யான்புயம் என்னைமுன்ஆள்
ஊழுடை யான்புலி யூர்அன்ன பொன்இவ் உயிர்பொழில் ஆகச்
சூழுடை ஆயத்தை நீக்கும் விதிதுணை யாமனனே
யாழுடை யார்மணம் காண்அணங்(கு) ஆய்வந்(து) அகப்பட்டதே. .. 28

சொற்பால் அமுதிவள் யான்சுவை என்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பார் அறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி(து) ஒட்ட களவகத்தே. .. 32

உணர்ந்தார்க்(கு) உணர்வரி யோன்தில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தால் புணரும் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாள் அல்குல் போல வளர்கின்றதே. . . 36

அளவியை யார்க்கும் அறி(வு)அரி யோன்தில்லை அம்பலம்போல்
வளவிய வான்கொங்கை வாள்தடங் கண்நுதல் மாமதியின்
பிள(வு)இயல் மின்இடை பேரமை தோளிது பெற்றியென்றால்
கிளவியை யென்றோ இனிக்கிள்ளை யார்வாயிற் கேட்கின்றதே. .. 40

கூம்பலங் கைத்தலத்து அன்பர்என்(பு) ஊடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்தில்லை அம்பலம் பாடலரின்
தேம்பலம் சிற்றிடை ஈங்கிவள் தீங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோஅளி காள்நும் அகன்பணையே .. 44

சிந்தா மணிதெள் கடல்அமிர் தம்தில்லை யான்அருளால்
வந்தால் இகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேநின்னை யான் அகன்(று) ஆற்றுவனோ
சிந்தா குலமுற்றென் னோஎன்னை வாட்டம் திருத்துவதே. .. 48

கோங்கின் பொலிஅரும்(பு) ஏய்கொங்கை பங்கன் குறுகலர்ஊர்
தீங்கில் புகச்செற்ற கொற்றவன் சிற்றம் பலம் அனையாள்
நீங்கின் புணர்(வு)அரி(து) என்றோ நெடி(து)இங்ங னேயிருந்தால்
ஆங்குஇற் பழியாம் எனவோ அறியேன் அயர்கின்றதே. .. 52

தேவரில் பெற்றநம் செல்வக் கடிவடி வால்திருவே
யாவரின் பெற்றினி யார்சிதைப் பார்இமை யாதமுக்கண்
மூவரின் பெற்றவர் சிற்றம் பலம்அணி மொய்பொழில்வாய்ப்
பூஅரில் பெற்ற குழலிஎன் வாடிப் புலம்புவதே. .. 56

வருங்குன்றம் ஒன்றுரித் தோன்தில்லை அம்பல வன்மலயத்(து)
இருங்குன்ற வாணர் இளங்கொடி யேஇடர் எய்தல்எம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்கும் களங்குழையே. .. 60

தெளிவளர் வான்சிலை செங்கனி வெண்முத்தம், திங்களின்வாய்ந்(து)
அளிவளர் வல்லிஅன் னாய் முன்னி யாடுபின் யான்அளவா
ஒளிவளர் தில்லை ஒருவன் கயிலை யுகுபெருந்தேன்
துளிவளர் சாரல் கரந்துங்ங னேவந்து தோன்றுவனே. .. 64

புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்புந்தன் பூங்கழலின்
துணர்ப்போ தெனக்கனி யாக்குந்தொல் லோன்தில்லைச் சூழ்பொழில்வாய்
இணர்ப்போ(து) அணிகுழல் ஏழைதன் நீர்மைஇந் நீர்மையென்றால்
புணர்ப்போ கனவோ பிறிதோ அறியேன் புகுந்ததுவே. .. 68

உயிரொன்(று) உளமும்ஒன்(று) ஒன்றே சிறப்(பு)இவட்(கு) என்னோடென்னப்
பயில்கின்ற சென்று செவியுற நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிர்ஒன்று முப்புரம் செற்றவன் தில்லைச்சிற் றம்பலத்துப்
பயில்கின்ற கூத்தன் அருளென லாகும் பணிமொழிக்கே. .. 72

பூங்கனை யார்புனல் தென்புலி யூர்புரிந்(து) அம்பலத்துள்
ஆங்கெனை யாண்டுகொண் டாடும் பிரானடித் தாமரைக்கே
பாங்கனை யான்அன்ன பண்பனைக் கண்(டு)இப் பரிசுரைத்தால்
ஈங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை எய்துதற்கே. 76

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந்(து) எய்தியதே. 80

கோம்பிக்(கு) ஒதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரம் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித்(து) ஆங்(கு)அப் பணைமுலைக்கே
தேம்பல் துடியிடை மான்மட நோக்கிதில் லைச் சிவன்தாள்
ஆம்பொன் தடமலர் சூடும்என் ஆற்றல் அகற்றியதே .. 84

உளமாம் வகைநம்மை உய்யவந்(து) ஆண்டுசென்(று) உம்பர்உய்யக்
களமாம் விடம்அமிர்(து) ஆக்கிய தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து நின்றோர்வஞ் சிம்மருங்குல்
இளமான் விழித்ததென் றோஇன்றெம் அண்ணல் இரங்கியதே. .. 88

சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத் தில்லைச்சிற்றம் பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான் கயிலை மயிலைமன்னும்
பூணிற் பொலிகொங்கை யாவியை ஓவியப் பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை மென்தோள் கரும்பினையே. .. 92

விலங்கலைக் கால்கொண்டு மேன்மேல் இடவின்னும் மண்ணும் முந்நீர்க்
கலங்கலைச் சென்றஅன் றுகலங் காய்கமழ் கொன்றைதுன்றும்
அலங்கலைச் சூழ்ந்தசிற்றம்பலத் தான்அருள் இல்லவர்போல்
துலங்கலைச் சென்றிதென் னோவள்ளல் உள்ளம் துயர்கின்றதே. .. 96

தலைப்படு சால்பினுக் கும்தள ரேன்சித்தம் பித்தனென்று
மலைத்தறி வார்இல்லை யாரையும் தேற்றுவன் எத்துணையும்
கலைச்சிறு திங்கள் மிலைத்தசிற் றம்பல வன்கயிலை
மலைச்சிறு மான்விழி யால்அழி வுற்று மயங்கினனே. .. 100

நல்வினை யும்நயம் தந்தின்று வந்து நடுங்குமின்மேல்
கொல்வினை வல்லன கோங்கரும் பாம்என்று பாங்கன் சொல்ல
வில்வினை மேருவில் வைத்தவன் தில்லை தொழாரின் வெள்கித்
தொல்வினை யால்துய ரும்என(து) ஆருயிர் துப்புறவே. .. 104

ஆலத்தி னால்அமிர்(து) ஆக்கிய கோன்தில்லை அம்பலம்போல்
கோலத்தி னாள்பொருட் டாக அமிர்தம் குணங்கெடினும்
காலத்தி னால்மழை மாறினும் மாறாக் கவிகைநின்பொற்
சீலத்தை நீயும் நினையா(து) ஒழிவதென் தீவினையே. .. 108

நின்னுடை நீர்மையும் நீயும்இவ் வாறு நினைத்தெருட்டும்
என்னுடை நீர்மையி(து) என்னென்ப தேதில்லை யேர்கொள்முக்கண்
மன்னுடை மால்வரை யோமல ரோவிகம் போசிலம்பா
என்னிடம் யாதியல் நின்னையின் னேசெய்த ஈர்ங்கொடிக்கே. .. 112

விழியால் பிணையாம் விளங்கிய லான்மயி லாம்மிழற்று
மொழியால் கிளியாம் முதுவா னவர்தம் முடித்தொகைகள்
கழியாக் கழல்தில்லைக் கூத்தன் கயிலைமுத் தம்மலைத்தேன்
கொழியாத் திகழும் பொழிற்(கு)எழி லாம்எங் குலதெய்வமே. .. 116

குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பில்பைம் பூம்புனம் காக்கும் கருங்கண்செவ்வாய்
மயிலைச் சிலம்புகண்(டு) யான்போய் வருவன்வன் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை நண்ணும் பனிக்கறையே. .. 120

கொடுங்கால் குலவரை ஏழ்ஏழ் பொழில்எழில் குன்றும்அன்றும்
நடுங்கா தவனை நடுங்க நுடங்கு நடுவுடைய
விடங்கால் அயிற்கண்ணி மேவுங்கொ லாம்தில்லை ஈசன் வெற்பில்
தடங்கார் தருபெரு வான்பொழில் நீழலம் தண்புனத்தே. . 124

வடிக்கண் இவைவஞ்சி அஞ்சும் இடைஇது வாய்பவளம்
துடிக்கின்ற வாவெற்பன் சொற்பரி சேயான் தொடர்ந்துவிடா
அடிச்சந்த மாமலர் அண்ணல்வின் னோர்வணங்(கு) அம்பலம்போல்
படிச்சந் தமும்இது வேஇவ ளேஅப் பணிமொழியே. .. 128

குவளைக்களத்(து)அம் பலவன் குரைகழல் போற்கமலத்
தவளைப் பயங்கர மாகநின்(று) ஆண்ட அவயவத்தின்
இவளைக்கண்(டு) இங்குநின்(று) அங்குவந்(து) அத்துணை யும்பகர்ந்த
கவளக் களிற்றண்ண லேதிண்ணி யான்இக் கடலிடத்தே. .. 132

பணந்தாழ் அரவரைச் சிற்றம் பலவர்பைம் பொற்கயிலைப்
புணர்ந்தாங்(கு) அகன்ற பொருகரி யுன்னிப் புனத்தயலே
மணந்தாழ் பொழிற்கண் வடிக்கண் பரப்பி மடப்பிடிவாய்
நிணந்தாழ் சுடரிலை வேல்கண் டேன்ஒன்று நின்றதுவே. .. 136

கயலுள வேகம லத்தவர் மீது கனிபவளத்(து)
அயலுள வேமுத்தம் ஒத்த நிரைஅரன் அம்பலத்தின்
இயலுள வேயிணைச் செப்புவெற் பாநின(து) ஈர்ங்கொடிமேல்
புயலுள வேமலர் சூழ்ந்திருள் தூங்கிப் புரள்வனவே. .. 140

எயிற்குலம் மூன்(று)இரும் தீஎய்த எய்தவன் தில்லையொத்துக்
குயிற்குலம் கொண்டுதொண் டைக்கனி வாய்க்குளிர் முத்தம்நிரைத்(து)
அயிற்குல வேல்கம லத்திற் கிடத்தி அனம்நடக்கும்
மயிற்குலம் கண்டதுண் டேல்அது என்னுடை மன்னுயிரே. .. 144

ஆவியன் னாய்கவ லேல்அக லேம்என்(று) அளித்தொளித்த
ஆவியன் னார்மிக் கவாயின ராய்க்கெழு மற்(கு)அழிவுற்(று)
ஆவியன் னார்மன்னி ஆடிடம் சேர்வர்கொல் அம்பலத்தெம்
ஆவியன் னான்பயி லுங்கயி லாயத்(து) அருவரையே. .. 148

காம்பிணை யால்களி மாமயி லால்கதிர் மாமணியால்
வாம்பிணை யால்வல்லி ஒல்குத லான்மன்னும் அம்பலவன்
பாம்பிணை யாக்குழை கொண்டோன் கயிலைப் பயில்புனமும்
தேம்பிணை வார்குழ லாளெனத் தோன்றும்என் சிந்தனைக்கே .. 152

நேயத்த தாய்நென்னல் என்னைப் புணர்ந்துநெஞ் சம்நெகப்போய்
ஆயத்த தாய் அமிழ் தாய்அணங் காய்அரன் அம்பலம்போல்
தேயத்த தாய்என்றன் சிந்தைய தாய்த்தெரி யிற்பெரிது
மாயத்த தாகி இதோவந்து நின்ற(து)என் மன்னுயிரே. .. 156

தாதிவர் போதுகொய் யார்தைய லார்அங்கை கூப்பநின்று
சோதி வரிப்பந்(து) அடியார் கனைப்புனல் ஆடல்செய்யார்
போதிவர் கற்பக நாடுபுல் வென்னத்தம் பொன்அடிப்பாய்
யாதிவர் மாதவம் அம்பலத் தான்மலை எய்துதற்கே. .. 160

காவிநின்(று) ஏர்தரு கண்டர்வண் தில்லைக்கண் ணார்கமலத்
தேவிஎன் றேஐயம் சென்ற(து)அன் றேஅறி யச்சிறிது
மாவியன் றன்னமென் னோக்கிநின் வாய்திற வாவிடின்என்
ஆவியன் றேஅமிழ் தேஅணங் கேஇன்(று) அழிகின்றதே .. 164

அகலிடம் தாவிய வானோன் அறிந்திறைஞ்(சு) அம்பலத்தின்
இகலிடம் தாவிடை ஈசன் தொழாரின்இன் னற்கிடமாய்
உகலிடம் தான்சென்(று) எனதுயிர் நையா வகையொதுங்கப்
புகலிடம் தாபொழில் வாய்எழில் வாய்தரு பூங்கொடியே. .. 168

தாழச்செய் தார்முடி தன்னடிக் கீழ்வைத் தவரைவிண்ணோர்
சூழச்செய் தான்அம் பலங்கை தொழாரின்உள் ளந்துளங்கப்
போழச்செய் யாமல்வை வேற்கண் புதைத்துப்பொன் னேஎன்னைநீ
வாழச்செய் தாய்கற்று முற்றும் புதைநின்னை வாணுதலே. .. 172

குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக் கூத்தனை ஏத்தலர்போல்
வருநாள் பிறவற்க வாழியரோ மற்றென் கண்மணிபோன்(று)
ஒருநாள் பிரியா(து) உயிரின் பழகி யுடன்வளர்ந்த
அருநாண் அளிய அழல்சேர் மெழுகொத்(து) அழிகின்றதே .. 176

கோலத் தனிக்கொம்பர் உம்பர்புக்(கு) அக்தே குறைப்பவர்தம்
சீலத் தன்கொங்கை தேற்றகி லேம்சிவன் தில்லையன்னாள்
நூலொத்த நேரிடை நொய்ம்மையெண் ணாதுநுண் தேன்நசையால்
சாலத் தகாதுகண் டீர்வண்டு காள்கொண்டை சார்வதுவே. .. 180

நீங்கரும் பொற்கழல் சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமும் எய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்அமிழ் துஞ்செழுந் தேனும் பொதிந்துசெப்பும்
கோங்கரும் பும்தொலைத்(து) என்னையும் ஆட்கொண்ட கொங்கைகளே. 184

சூளா மணியும்பர்க்(கு) ஆயவன் சூழ்பொழில் தில்லையன்னாய்க்(கு)
ஆளா ஒழிந்ததென் ஆருயிர் ஆரமிழ் தேஅணங்கே
தோளா மணியே பிணையே பலசொல்லி என்னைதுன்னும்
நாளார் மலர்பொழில் வாய்எழில் ஆயம் நணுகுகவே. .. 188

பொய்யுடை யார்க்(கு)அரன் போல்அக லும்மகன் றாற்புணரின்
மெய்யுடை யார்க்கவன் அம்பலம் போல மிகநணுகும்
மையுடை வாட்கண் மணியுடைப் பூண்முலை வாணுதல்வான்
பையுரை வாளர வத்(து) அல்குல் காக்கும்பைம் பூம்புனமே. 192

என்னறி வால்வந்த(து) அன்றிது முன்னும்இன் னும் முயன்றால்
மன்னெறி தந்த(து) இருந்தன்று தெய்வம் வருந்தல் நெஞ்சே
மின்எறி செஞ்சடைக் கூத்தப் பிரான்வியன் தில்லைமுந்நீர்
பொன்னெறி வார்துறை வாய்ச்சென்று மின்தோய் பொழிலிடத்தே. .. 196

எளிதன்(று) இனிக்கனி வாய்வல்லி புல்லல் எழில்மதிக்கீற்(று)
ஒளிசென்ற செஞ்சடைக் கூத்தப் பிரானைஉன் னாரின்என்கண்
தெளிசென்ற வேற்கண் வருவித்த செல்லல்எல் லாம்தெளிவித்து
அளிசென்ற பூங்குழல் தோழிக்கு வாழி அறிவிப்பனே. .. 200

குவளைக் கருங்கண் கொடியேர் இடையிக் கொடிக்கடைக்கண்
உவளைத் தனதுயிர் என்றது தன்னோ(டு) உவமையில்லா
தவளைத்தன் பால்வைத்த சிற்றம் பலத்தான் அருளிலர்போல்
துவளத் தலைவந்த இன்னலின் னேயினிச் சொல்லுவனே. .. 204

இருங்களி யாய்இன்(று) யான்சிறு மாப்பஇன் பம்பணிவோர்
மருங்(கு)அளி யாஅனல் ஆடவல் லோன்தில்லை யான்மலையீங்(கு)
ஒருங்(கு)அளி யார்ப்ப உமிழ்மும் மதத்(து)இரு கோட்(டு)ஒருநீள்
கருக்களி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே. .. 208

கருங்கண் ணனையறி யாமைநின் றோன்தில்லைக் கார்ப்பொழில்வாய்
வருங்கள் நனையவண் டாடும் வளரிள வல்லியன்னீர்
இருங்கண் அனைய கணைபொரு புண்புண ரிப்புனத்தின்
மருங்கண் அனையதுண் டோவந்த(து) ஈங்கொரு வான்கலையே. .. 212

சிலம்பணி கொண்டசேர் சீறடி பங்கன்தன் சீரடியார்
குலம்பணி கொள்ள எனைக்கொடுத் தோன்கொண்டு தான்அணியும்
கலம்பணி கொண்டிடம் அம்பலம் கொண்டவன் கார்க்கயிலைச்
சிலம்பணி கொண்டநும் சீறூர்க்(கு) உரைமின்கள் செல்நெறியே. .. 216

ஒருங்(கு)அட மூவெயில் ஒற்றைக் கணைகொள்சிற் றம்பலவன்
கருங்கடம் மூன்றுகு நால்வாய்க் கரியுரித் தோன்கயிலை
இரும்கடம் மூடும் பொழில்எழில் கொம்பர்அன் னீர்களின்னே
வருங்கள்தம் ஊர்பகர்ந் தால்பழி யோஇங்கு வாழ்பவர்க்கு. .. 220

தாரென்ன வோங்கும் சடைமுடி மேல்தனித் திங்கள்வைத்த
காரென்ன ஆரும் கறைமிடற்(று) அம்பல வன்கயிலை
ஊரென்ன என்னவும் வாய்திற வீர்ஒழி வீர்பழியேல்
பேரென்ன வோஉரை யீர்விரை யீர்ங்குழற் பேதையரே. .. 224

இரதம் உடைய நடம்ஆட்(டு) உடையவர் எம்முடையர்
வரதம் உடைய அணிதில்லை அன்னவர் இப்புனத்தார்
விரதம் உடையர் விருந்தொடு பேச்சின்மை மீட்டதன்றேல்
சரத முடையர் மணிவாய் திறக்கில் சலக்கென்பவே. .. 228

வின்னிற வாணுதல் வேல்நிறக் கண்மெல் லியலைமல்லல்
தன்னிறம் ஒன்றில் இருத்திநின் றோன்தன(து) அம்பலம்போல்
மின்னிற நுண்ணிடைப் பேரெழில் வெண்ணகைப் பைந்தொடியீர்
பொன்னிற அல்குலுக்(கு) ஆமோ மணிநிறப் பூந்தழையே. .. 232

கலைக்கீழ் அகல்அல்குல் பாரம(து) ஆரம்கண் ஆர்ந்(து)இலங்கு
முலைக்கீழ்ச் சிறிதின்றி நிற்றல்முற் றா(து)அன்(று) இலங்கையர்கோன்
மலைக்கீழ் விழச்செற்ற சிற்றம் பலவர்வண் பூங்கயிலைச்
சிலைக்கீழ்க் கணையன்ன கண்ணீர் எதுநுங்கள் சிற்றிடையே. .. 236

பல்இல னாகப் பகலைவென் றோன்தில்லை பாடலர்போல்
எல்இலன் நாகத்தோ(டு) ஏனம் வினாஇவன் யாவன்கொலாம்
வில்இலன் நாகத் தழைகையில் வேட்டைகொண் டாட்டம்மெய்ஓர்
சொல்இலன் ஆகற்ற வாகட வான்இச் சுனைப் புனமே. .. 240

ஆழமன் னோஉடைத்(து) இவ்வையர் வார்த்தை அனங்கன்நைந்து
வீழமுன் நோக்கிய அம்பலத் தான்வெற்பின் இப்புனத்தே
வேழமுன் னாய்க்கலை யாய்ப்பிற வாய்ப்பின்னும் மென்தழையாய்
மாழைமெல் நோக்கி யிடையாய்க் கழிந்தது வந்துவந்தே. .. 244

நிருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலும் கயிலை மலையின் உயர்குடுமித்
திருத்தம் பயிலும் கனைகுடைந்(து) ஆடிச் சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி மெல்லியல் வாடியதே. .. 248

மடுக்கோ கடலின் விடுதிமில் அன்றி மறிதிரைமீன்
படுக்கோ பணிலம் பலகுளிக் கோபரன் தில்லைமுன்றில்
கொடுக்கோ வளைமற்று நும்ஐயர்க்(கு) ஆயகுற் றேவல் செய்கோ
தொடுக்கோ பணியீர் அணியீர் மலர்நும் கரிகுழற்கே. .. 252

அளியமன் னும்மொன்று உடைத்(து) அண்ணல் எண்ணரன் தில்லையன்னாள்
கிளிமைமன்னுங்கடியச் செல்ல நிற்பின் கிளர்அளகத்(து)
அளியமர்ந்(து) ஏறின் வறிதே யிருப்பின் பளிங்கடுத்த
ஒளியமர்ந் தாங்கொன்று போன்றுறொன்று தோன்றும் ஒளிமுகத்தே. .. 256

பிழைகொண்(டு) ஒருவிக் கெடா(து)அன்பு செய்யின் பிறவியென்னும்
முழைகொண்(டு) ஒருவன்செல் லாமைநின்(று) அம்பலத்(து) ஆடுமுன்னோன்
உழைகொண்(டு) ஒருங்(கு)இரு நோக்கம் பயின்றஎம் ஒண்ணுதல்மாந்
தழைகொண்(டு) ஒருவன்என் னாமுன்னம் உள்ளம் தழைத்திடுமே. .. 260

மெய்யே இவற்(கு)இல்லை வேட்டையின் மேல்மனம் மீட்(டு) இவளும்
பொய்யே புனத்தினை காப்பது இறைபுலி யூர்அனையாள்
மையேர் குவளைக்கண் வண்டினம் வாழும்செந் தாமரைவாய்
எய்யேம் எனினும் குடைந்தின்பத் தேனுண்(டு) எழில்தருமே. .. 264

மைவார் கருங்கண்ணி செங்கரம் கூப்பு மறந்துமற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன் பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின் றோன்சடை மேல(து)ஒத்துச்
செவ்வான் அடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே. .. 268

அக்கின்ற வாமணி சேர்கண்டன் அம்பல வன்மலயத்து
இக்குன்ற வானர் கொழுந்திச் செழுந்தண் புனமுடையாள்
அக்குன்ற ஆ(று)அமர்ந்(து) ஆடச்சென் றாள்அங்கம் அவ்அவையே
ஒக்கின்ற ஆரணங் கேஇணங் காகும் உனக்கவளே. .. 272

செந்நிற மேனிவெண் ணீறணி வோன்தில்லை அம்பலம்போல்
அந்நிற மேனிநின் கொங்கையில் அங்கழி குங்குமமும்
மைந்நிற வார்குழல் மாலையும் தாதும் வளாய்மதஞ்சேர்
இந்நிற மும்பெறின் யானும் குடைவன் இருஞ்சுனையே. .. 276

பருங்கண் கவர்கொலை வேழப் படையோன் படப்படர்தீத்
தருங்கண் ணுதல்தில்லை அம்பலத் தோன்தட மால்வரைவாய்க்
கருங்கண் சிவப்பக் கனிவாய் விளர்ப்பகண் ணார்அளிபின்
வருங்கண் மலைமலர் குட்டவற் றோமற்றவ் வான்கனையே. .. 280

காகத்(து) இருகண் ணிற்(கு) ஒன்றே மணிகலந் தாங்(கு)இருவர்
ஆகத்து ளோர்உயிர் கண்டனம் யாமின்றி யாவையுமாம்
ஏகத்தொருவன் இரும்பொழில் அம்பல வன்மலையில்
தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும்இன்பத் துன்பங்களே. .. 284

ஆவா இருவர் அறியா அடிதில்லை அம்பலத்து
மூவா யிரவர் வணங்கநின் றோனையுன் னாரின் முன்னித்
தீவாய் உழுவை கிழித்த(து)அந் தோசிறி தேபிழைப்பித்(து)
ஆவா மணிவேல் பணிகொண்ட வாறின்றோர் ஆண்டகையே. .. 288

பொருளா எனைப்புகுந்(து) ஆண்டு புரந்தரன் மாலயன்பால்
இருளாய் இருக்கும் ஒளிநின்ற சிற்றம் பலமெனலாம்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் துடியிடையீர்
அருளா(து) ஒழியின் ஒழியா(து) அழியும்என் ஆருயிரே. .. 292

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் தென்புலியூர்
ஈசன சாந்தும் எருக்கும் அணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்ச்சின மாவென ஏறுவர் சீறூர்ப் பனைமடலே. .. 296

வின்னை மடங்க விரிநீர் பரந்துவெற் புக்கரப்ப
மன்னை மடங்க வரும்ஒரு காலத்து மன்னிநிற்கும்
அன்னல் மடங்கல் அதள்அம் பலவன் அருளிலர்போல்
பெண்ணை மடன்மிசை யான்வரப் பண்ணிற்றோர் பெண்கொடியே. .. 300

கழிகின்ற என்னையும் நின்றநின் கார்மயில் தன்னையும் யான்
கிழியொன்ற நாடி எழுதிக்கைக் கொண்டென் பிறவிகெட்டின்(று)
அழிகின்ற(து) ஆக்கிய தாள்அம் பலவன் கயிலையந்தேன்
பொழிகின்ற சாரல்நும் சீறூர்த் தெருவிடைப் போதுவனே. .. 304

நடனாம் வணங்கும்தொல் லோன்எல்லை நான்முகன் மாலறியாக்
கடனாம் உருவத்(து) அரன்தில்லை மல்லற் கன் ணார்ந்த பெண்ணை
உடனாம் பெடையொ(டு)ஆன் சேவலும் முட்டையும் கட்டழித்து
மடனாம் புனைதரின் யார்கன்ன தோமன்ன இன்னருளே. ... 308

அடிச்சந்தம் மால்கன் டிலாதன காட்டிவந்(து) ஆன்டுகொன்டென்
முடிச்சந்த மாமலர் ஆக்குமுன் னோன்புலி யூர்புரையும்
கடிச்சந்த யாழ்கற்ற மென்மொழிக் கன்னி அனநடைக்குப்
படிச்சந்தம் ஆக்கும் படம்உள வோநும் பரிசகத்தே. .. 312

யாழும் எழுதி எழில்முத்(து) எழுதி இருளின்மென்பூச்
சூழும் எழுதியொர் தொண்டையும் தீட்டியென் தொல்பிறவி
ஏழும் எழுதா வகைசிதைத் தோன்புலி யூரிளமாம்
போழும் எழுதிற்றொர் கொம்பருண் டேற்கொண்டு போதுகவே. .. 7316

ஊர்வாய் ஒழிவாய் உயர்பெண்ணைத் திண்மடல் நின்குறிப்புச்
சீர்வாய் சிலம்ப திருத்த இருந்திலம் ஈசாதில்லைக்
கார்வாய் குழலிக்குன்ஆதர(வு) ஓதிக்கற் பித்துக்கண்டால்
ஆர்வாய் தரின்அறி வார்பின்னைச் செய்க அறிந்தனவே. .. 320

பைந்நான் அரவன் படுகடல் வாய்ப்படு நஞ்சமுதாம்
மைந்நான் மனிகண்டன் மன்னும் புலியூர் மணந்தபொன்இம்
மொய்ந்நான் முதுதிரை வாயான் அழுந்திநும் என்னின்முன்னும்
இந்நாள் இதுமது வார்குழ லாட்(கு)என்கண் இன்னருளே. ... 324

தாதேய் மலர்க்குஞ்சி அஞ்சிறை வன்டுதன் தேன்பருகித்
தேதே எனும்தில்லை யோன்சேய் எனச்சின் வேல்ஒருவர்
மாதே புனத்திடை வானா மருவர்வந்(து) யாதும்சொல்லார்
யாதே செயத்தக் கதுமது வார்குழல் ஏந்திழையே. .. 329

வரிசேர் தடங்கன்னி மம்மர்கைம் மிக்கென்ன மாயங்கோலோ
எரிசேர் தளிரென்ன மேனியென் ஈர்ந்தழை யன்புலியூர்ப்
புரிசேர் சடையோன் புதல்வன்கொல் பூங்கனை வேள்கொலென்னத்
தெரியேம் உரையன் பிரியான் ஒருவன்இத் தேம்புனமே. .. 332

நீகண் டனையெனின் வாழலை நேரிழை அம்பலத்தான்
சேய்கண் டனை யன்சென் றாங்கோர் அலவன்தன் சீர்ப்பெடையின்
வாய்கண் டனையதோர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண்(டு) அனையதொன் றாகிநின் றான்அப் பெருந்தகையே. .. 336

சங்கம் தருமுத்தி யாம்பெற வான்வழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகழிப் பாறுலவு
துங்க மலிதலை யேந்தலின் ஏந்திழை தொல்லைப்பன்மா
வங்கம் மலிகலி நீர்தில்லை வானவன் நேர்வருமே. .. 340

புரங்கடந் தான்அடி காண்பான் புவிவிண்டு புக்கறியா(து)
இரங்கி(டு)எந் தாய்என்(று) இரப்பத்தன் ஈரடிக்(கு) என்இரண்டு
கரங்கள்தந் தான் ஒன்று காட்டமற்(று) ஆங்கதும் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை அம்பல முன்றில் அம் மாயவனே. .. 344

உள்ளப் படுவன வுள்ளி உரைத்தக் கவர்க்குரைத்து
மெள்ளப் படிறு துனிதுனி யேல்இது வேண்டுவல்யான்
கள்ளப் படிறர்க்(கு) அருளா அரன்தில்லை காணலர்போல்
கொள்ளப் படாது மறப்ப(து) அறிவிலென் கூற்றுக்களே. .. 348

மேவிஅம் தோல் உடுக் கும்தில்லை யான்பொடி மெய்யிற்கையில்
ஓவியம் தோன்றும் கிழிநின் எழில்என்(று) உரையுளதால்
தூவியம் தோகையன் னாய்என்ன பாவம்சொல் ஆடல்செய்யான்
பாவிஅந் தோபனை மாமடல் ஏறக்கொல் பாவித்ததே. .. 352

பொன்னார் சடையோன் புலியூர் புகழார் எனப்புரிநோய்
என்னால் அறிவில்லை யானொன்று உரைக்கிலன் வந்தயலார்
சொன்னார் எனும்இத் துரிகதுன் னாமைத் துணைமனனே
என்ஆழ் துயர்வல்லை யேற்சொல்லு நீர்மை இனியவர்க்கே. .. 356

தேமென் கிளவிதன் பங்கத்(து) இறையுறை தில்லையன்னீர்
பூமென் தழையும்அம் போதும்கொள் ளீர்தமி யேன்புலம்ப
ஆமென்(று) அருங்கோடும் பாடுகள் செய்துநும் கண்மலராம்
காமன் கணைகொண்(டு) அலைகொள்ள வோமுற்றக் கற்றதுவே. .. 360

ஆரத் தழையராப் பூண்(டு)அம் பலத்(து)அன லாடிஅன்பர்க்(கு)
ஆரத் தழையன்(பு) அருளிநின் றோன்சென்ற மாமலயத்(து)
ஆரத் தழையண்ணல் தந்தால் இவைஅவள் அல்குல்கண்டால்
ஆரத் தழைகொடு வந்தார் எனவரும் ஐயுறவே. .. 364

முன்தகர்த்(து) எல்லா இமையோரை யும்பின்னைத் தக்கன்முத்தீச்
சென்(று)அகத்(து) இல்லா வகைசினத்த தோன்திருந்(து) அம்பலவன்
குன்றகத்(து) இல்லாத் தழைஅண் ணல்தந்தால் கொடிச்சியருக்(கு)
இன்(று)அகத்(து) இல்லாப் பழிவந்து மூடும்என்(று) எள்குதுமே. .. 368

யாழார் மொழிமங்கை பங்கத்(து) இறைவன் எறிதிரைநீர்
ஏழாய் எழுமொழி லாய்இருந் தோன்நின்ற தில்லையன்ன
சூழார் குழல்எழில் தொண்டைச்செவ் வாய்நவ்வி சொல்லறிந்தால்
தாழா(து) எதிர்வந்து கோடும் சிலம்ப தரும்தழையே. ... 372

எழில்வாய் இளவஞ்சி யும்விரும் பும்மற்று இறைகுறையுண்டு
அழல்வாய் அவிரொளி அம்பலத்து ஆடும்அம் சோதி அம்தீம்
குழல்வாய் மொழிமங்கை பங்கன்குற் றாலத்துக் கோலப்பிண்டிப்
பொழில்வாய் தடவரை வாயல்ல(து) இல்லைஇப் பூந்தழையே. ... 376

உறுங்கள்றி வந்த கணையுர வோன்பொடி யாய் ஒடுங்கத்
தெறுங்கண்றி வந்தசிற்றம்பல வன்மலைச் சிற்றிலின்வாய்
நறுங்கண்ணி சூட்டினும் நாணும்என் வாணுதல் நாகத்தொண்பூங்
குறுங்கண்ணி வேயந்திள மந்திகள் நாணும்இக் குன்றிடத்தே. .. 380

நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகநண்ணி
மறமனை வேங்கை எனநனி அஞ்சும்அஞ் சார்சிலம்பா
குறமனை வேங்கைச் சுணங்கொடு அணங்கலர் கூட்டுபவோ
நிறமனை வேங்கை அதள்அம் பலவன் நெடுவ ரையே. .. 384

சுற்றில கண்டன்னம் மென்னடை கண்மலர் நோக்கருளப்
பெற்றில மென்பிணை பேச்சுப் பெறாகிள்ளை பிள்ளையின்றொன்(று)
உற்றிபள் உற்ற(து) அறிந்திலள் ஆகத்(து) ஒளிமிளுரும்
புற்றில வாளர வன்புலி யூரன்ன பூங்கொடியே. ... 388

முனிதரும் அன்னையும் என்ஐயர் சாலவும் மூர்க்கர்இன்னே
தனிதரும் இந்நிலத் தன்(று)ஐய குன்றமும் தாழ்சடைமேல்
பனிதரு திங்கள் அணிஅம் பலவர் பகைசெகுக்கும்
குனிதரு திண்சிலைக் கோடுசென் றான்சுடர்க் கொற்றவனே. .. 392

அந்தியின் வாயெழில் அம்பலத்(து) எம்பரன் அம்பொன்வெற்பின்
பந்தியின் வாய்ப்பல வின்சுளை பைந்தே னொடும்கடுவன்
மந்தியின் வாய்க்கொடுத்(து) ஓம்பும் சிலம்ப மனம்கனிய
முந்தியின் வாய்மொழி நீயே மொழிசென்றம் மொய்குழற்கே. ..396

தெங்கம் பழம்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத்(து) ஒளிர்குளிர் நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றில் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கம் திரிதரு சீறூர்ச் சிறுமிளம் தேமொழியே. .. 400

சிலையன்று வாணுதல் பங்கன்சிற் றம்பல வன்கயிலை
மலையன்று மாமுகத்(து) எம்ஐயர் எய்கணை மண்குளிக்கும்
கலையன்று வெங்கணை யோடு கடுகிட்ட தென்னிற்கெட்டேன்
கொலையென்று திண்ணிய வா(று)ஐயர் கையிற் கொடுஞ்சிலையே. .. 404

மைத்தழை யாநின்ற மாமிடற்(று) அம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற அன்பினர் போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா வினாய்க் கையில் வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ரால்என்ன பாவம் பெரியவரே. .. 408

அக்கும் அரவும் அணிமணிக் கூத்தன்சிற் றம்பலமே
ஒக்கும் இவள(து) ஒளிர்உரு அஞ்சி மஞ் சார்சிலம்பா
கொக்கும் சுனையும் குளிர்தளி ரும்கொழும் போதுகளும்
இக்குன்றில் என்றும் மலர்ந்தறி யாத இயல்பினவே. .. 412

உருகு தலைச்சென்ற உள்ளத்தும் அம்பலத் தும்ஒளியே
பெருகு தலைச்சென்று நின்றோன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை முடியா முலைபொடியா
ஒருகு தலைச்சின் மழலைக் கென் னோஐய ஒதுவதே. .. 416

பண்(டு)ஆல் இயலும் இலைவளர் பாலகன் பார்கிழித்துத்
தொண்டால் இயலும் சுடர்க்கழ லோன்தொல்லைத் தில்லையின்வாய்
வண்டால் இயலும் வளர்புந் துறைவ மறைக்கின்என்னைக்
கண்டால் இயலும் கடனில்லை கொல்லோ கருதியதே. .. 420

மத்தகம் சேர்தனி நோக்கினன் வாக்கிறந்(து) ஊறமுதே
ஒத்தகம் சேர்ந்தென்னை உய்யநின் றோன்தில்லை ஒத்திலங்கு
முத்தகம் சேர்மென் னகைப் பெருந் தோளி முகமதியின்
வித்தகம் சேர்மெல்லென் நோக்கமன்றோஎன் விழுத்துணையே. .. 424

விண்இறந் தார்நிலம் விண்டலர் என்றுமிக் கார்இருவர்
கண்இறந் தார்தில்லை அம்பலத் தார்கழுக் குன்றினின்று
தண்நறுந் தா(து)இவர் சந்தனச் சோலைப்பந் தாடுகின்றார்
எண்இறந் தார்அவர் யார்கண்ண தோமன்ன நின்னருளே. .. 428

குவவின கொங்கை குரும்பை குழல்கொன்றை கொவ்வைசெவ்வாய்
கவவின வாள்நகை வெண்முத்தம் கண்மலர் செங்கழுநீர்
தவவினை தீர்ப்பவன் தாழ்பொழில் சிற்றம்பலம் அனையாட்(கு)
உவவின நாள்மதி போன்றொளிர் கின்ற(து) ஒளிமுகமே. .. 432

ஈசற்(கு) யான்வைத்த அன்பின் அகன்றவன் வாங்கியஎன்
பாசத்தின் காரென்(று) அவன்தில்லை யின்ஒளி போன்றவன்தோள்
பூ(சு)அத் திருநீ(று) எனவெளுத்(து) அங்கவன் பூங்கழல்யாம்
பே(சு)அத் திருவார்த்தை யிற்பெரு நீளம் பெருங்கண்களே. .. 436

தோலாக் கரிவென்ற தற்கும் துவள்விற்கும் இல்லின்தொன்மைக்(கு)
ஏலாப் பரி(சு)உள வேயன்றி ஏலேம் இருஞ்சிலம்ப
மாலார்க்(கு) அரிய மலர்க்கழல் அம்பல வன்மலையில்
கோலாப் பிரசம் அன் னாட்(கு)ஐய நீதந்த கொய் தழையே. .. 440

கழைகாண் டலும்சுளி யுங்களி யானையன் னான்கரத்தில்
தழைகாண் டலும்பொய் தழைப்பமுன் காண்பன்இன்(று) அம்பலத்தான்
உழைகாண் டலும்நினைப் பாரும்மெல் நோக்கிமன் நோக்கங்கண்டால்
இழைகாண் பணைமுலை யாய்அறி யேன்சொல்லும் ஈடவற்கே. .. 444

தவளத்த நீறணி யும்தடந் தோள்அண்ணல் தன்னொருபால்
அவள்அத்த னாம்மக னாம்தில்லை யான்அன்(று) உரித்ததன்ன
கவளத்த யானை கடிந்தார் கரத்தகண் ணார்தழையும்
துவளத் தகுவன வோசுரும் பார்குழல் தூமொழியே. .. 448

ஏறும் பழிதழை யேன்பின்மற்(று) ஏலா விடின்மடன்மா
ஏறும் அவன்இட பங்கொடி ஏற்றிவந்(து) அம்பலத்துள்
ஏறும் அரன்மன்னும் ஈங்கோய் மலைநம் இரும்புனம்காய்ந்(து)
ஏறும் மலைதொலைத் தாற்(கு)என்னை யாம்செய்வ(து) ஏந்திழையே. .. 452

தெவ்வரை மெய்யெரி காய்சிலை ஆண்டென்னை ஆண்டுகொண்ட
செவ்வரை மேனியன் சிற்றம் பலவன் செழுங்கயிலை
அவ்வரை மேலன்றி யில்லைகண் டாய்உள்ள வா(று)அருளான்
இவ்வரை மேற்சிலம் பன்எளி தில்தந்த ஈர்ந்தழையே. .. 456

பாசத் தளையறுத்(து) ஆண்டுகொண் டடீன்தில்லை அம்பலம் சூழ்
தேசத் தனசெம்மல் நீதந் தனசென்(று) யான்கொடுத்தேன்
பேசிற் பெருகும் சுருங்கு மருங்குழல் பெயர்ந்தரைத்துப்
பூசிற் றிலள்அன்றிச் செய்யா தனஇல்லை பூந்தழையே. .. 460

வானுழை வாள்அம்ப லத்தரன் குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாஇரு ளாய்ப்புற நாப்பண்வண் தாரகை போல்
தேனுழை நாக மலர்ந்து திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றாங்கெழில் காட்டுமோர் கார்ப்பொழிலே. .. 464

புயல்வளர் ஊசல்முன் ஆடிப்பொன் னேபின்னைப் போய்ப்பொலியும்
அயல்வளர் குன்றில்நின் றேற்றும் அருவி திருவுருவில்
கயல்வளர் வாட்கண்ணி போதரு காதரம் தீர்த்தருளும்
தயல்வளர் மேனியன் அம்பலத் தான்வரைத் தண்புனத்தே. .. 468

தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூஉய்ச்சிற்றில் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவர்
வினைவளம் நீறெழ நீறணி அம்பல வன்தன்வெற்பில்
புனைவளர் கொம்பர்அன் னாய்அன்ன காண்டும் புனமயிலே. .. 472

நரல்வேய் இனநின தோட்(டு)உடைந்(து) உக்கநன் முத்தம்சிந்திப்
பரல்வேய் அறையுறைக் கும்பஞ் சடிப்பரன் தில்லையன்னாய்
வரல்வேய் தருவன்இங் கேநில்உங் கேசென்றுன் வார்குழற்(கு)ஈர்ங்
குரல்வேய் அளிமுரல் கொங்கார் தடமலர் கொண்டுவந்தே. .. 476

படமா கணப்பள்ளி இக்குவ டாக்கியப் பங்கயக்கண்
நெடுமால் எனஎன்னை நீநினைந் தோநெஞ்சத் தாமரையே
இடமா இருக்கலுற் றோதில்லை நின்றவன் ஈர்ங்கயிலை
வடமார் முலைமட வாய்வந்து வைஇற்றுஇவ் வார்பொழிற்கே. .. 480

தொத்தின் மலர்ப்பொழில் தில்லைத்தொல் லோன்அருள் என்னமுன்னி
முத்தீன் குவளைமென் காந்தளின் மூடித்தன் ஏர்அளப்பான்
ஒத்(து)ஈர்ங் கொடியின் ஒதுங்குகின் றாள்மருங் குல்நெருங்கப்
பித்தீர் பணைமுலை காள்என்னுக்கு இன்னும் பெருக்கின்றதே. .. 484

அளிநீ(டு) அளகத்தின் அட்டிய தாதும் அணியணியும்
ஒளிநீள் கரிகுழல் சூழ்ந்தஒண் மாலையும் தண்நறவுண்
களிநீ யெனச்செய் தவன்கடல் தில்லையன் னாய்கலங்கல்
தெளிநீ அனையபொன் னேபண்ணு கோலம் திருநுதலே. .. 488

செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம் பலவன் திருக்கழலே
கெழுநீர் மையில்சென்று கிண்கிணி வாய்க் கொள்ளும் கள்ளகத்த
கழுநீர் மலரிவள் யானதன் கண்மரு விப்பிரியாக்
கொழுநீர் நறப்பரு கும்பெரு நீர்மை அளிகுவமே. .. 492

கொழுந்தா ரகைமுகை கொண்டலம் பாசடை விண்மடுவில்
எழுந்தார் மதிக்கம லம்எழில் தந்தென இப்பிறப்பில்
அழுந்தா வகையெனை ஆண்டவன் சிற்றம் பலம்அனையாய்
செழுந்தா(து) அவிழ்பொழில் ஆயத்துச் சேர்க் திருத்தகவே. .. 496

பொன்அனை யான்தில்லைப் பொங்கர வம்புன் சடைமிடைந்த
மின்னனை யான்அருள் மேலவர் போன்மெல் விரல் வருந்த
மென்னனை யாய்மறி யேபறி யேல்வெறி யார்மலர்கள்
இன்னன யான்கொணர்ந் தேன்மணந் தாழ்குழற்(கு) ஏய்வனவே. .. 500

அறுகால் நிறைமலர் ஐம்பால் நிறையணிந் தேன் அணியார்
துறுகான் மலர்த்தொத்துத் தோகைதொல் லாயம்மெல் லப்புகுக
சிறுகால் மருங்குல் வருந்தா வகைமிக என்சிரத்தின்
உறுகால் பிறர்க்(கு)அரி யோன்புலி யூரன்ன ஒண்ணுதலே. .. 504

தழங்கும் அருவிஎம் சீறூர் பெரும இதுமதுவும்
கிழங்கும் அருந்தி இருந்(து) எம்மோ(டு) இன்று கிளர்ந்துகுன்றர்
முழங்கும் குரவை இரவிற்கண்(டு) ஏகுக முத்தன்முத்தி
வழங்கும் பிரான்எரி யாடிதென் தில்லை மணிநகர்க்கே. .. 508

தள்ளி மணிசிந்தம் உந்தித் தறுகண் கரிமருப்புத்
தெள்ளி நறவம் திசைதிசை பாயும் மலைச்சிலம்பா
வெள்ளி மலையன்ன மால்விடை யோன்புலி யூர்விளங்கும்
வள்ளி மருங்குல் வருத்துவ போன்ற வனமுலையே. .. 512

மாடஞ்செய் பொன்னக ரும்நிக ரில்லைஇம் மாதர்க்கென்னப்
பீடஞ்செய் தாமரை யோன்பெற்ற பிள்ளையை உள்ளவரைக்
கீடஞ்செய் தென்பிறப் புக்கெடத் தில்லைநின் றோன்கயிலைக்
கூடஞ்செய் சாரல் கொடிச்சியென் றோநின்று கூறுவதே. .. 516

வேய்தந்த வெண்முத்தம் சிந்துபைங் கார்வரை மீன்பரப்பிச்
சேய்தந்த வானக மானும் சிலம்பதன் சேவடிக்கே
ஆய்தந்த அன்புதந் தாட்கொண்ட அம்பல வன்மலையில்
தாய்தந்தை கானவர் ஏனல்எங் காவல்இத் தாழ்வரையே. .. 520

மன்னும் திருவருந் தும்வரை யாவிடின் நீர்வரைவென்(று)
உன்னும் அதற்குத் தளர்ந்தொளி வாடுதிர் உம்பரெலாம்
பன்னும் புகழ்ப்பர மன்பரஞ் சோதிசிற் றம்பலத்தான்
பொன்னங் கழல்வழுத் தார்புலன் என்னப் புலம்புவனே. .. 524

பனித்துண்டம் சூடும் படர்சடை அம்பல வன்உலகம்
தனித்துண் டவன்தொழும் தாளோன் கயிலைப் பயில்சிலம்பா
கனித்தொண்டை வாய்ச்சி கதிர்முலைப் பாரிப்புக் கண்டழிவுற்(று)
இனிக்கண் டிலம்பற்றுச் சிற்றிடைக்(கு) என்றஞ்சும் எம்அனையே. .. 528

ஈவிளை யாட நறவிளை(வு) ஓர்ந்தெமர் மால்பியற்றும்
வேய்விளை யாடும்வெற் பாவுற்று நோக்கிஎம் மெல்லியலைப்
போய்விளை யாடல்என் றாள்அன்னை அம்பலத் தான்புரத்தில்
தீவிளை யாட நின் றேவிளை யாடி திருமலைக்கே. .. 532

சுற்றும் சடைக்கற்றைச் சிற்றம் பலவன் தொழாதுதொல்சீர்
கற்றும் அறியல ரின்சிலம் பாஇடை நைவதுகண்(டு)
எற்றும் திரையின் அமிர்தை இனித்தமர் இற்செறிப்பார்
மற்றும் சிலபல சீறூர் பகர்பெரு வார்த்தைகளே. .. 536

வழியும் அதுஅன்னை என்னின் மகிழ்வும்வந்(து) எந்தையும்நின்
மொழியின் வழிநிற்கும் சுற்றம்முன்னேவயம் அம்பலத்துக்
குழிஉம்பர் ஏத்தும்எம் கூத்தன்குற் றாலமுற் றும்அறியக்
கெழி உம்ம வேபணைத் தோள்பல என்னோ கிளக்கின்றதே. .. 540

படையார் கருங்கண்ணி வண்ணப் பயோதரப் பாரமும் நுன்
இடையார் மெலிவுகண்(டு) அண்டர்கள் ஈர்முல்லை வேலிஎம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட் டார்வியன் தென்புலியூர்
உடையார் கடவி வருவது போலும் உருவினதே. .. 544

உருப்பனை அன்னகைக் குன்றொன்(று) உரித்(து)உர ஊர்எரித்த
நெருப்பனை அம்பலத்(து) ஆதியை உம்பர்சென்(று) ஏத்திநிற்கும்
திருப்பனை யூர்அனை யாளைப்பொன் னாளைப் புனைதல் செப்பிப்
பொருப்பனை முன்னின்(று) என் னோவினை யேன்யான் புகல்வதுவே. .. 548

மாதிடம் கொண்(டு)அம் பலத்துநின் றோன்வட வான்கயிலைப்
போதிடம் கொண்டபொன் வேங்கை தினைப்புனம் கொய்களென்று
தாதிடம் கொண்டுபொன் வீசித்தன் கள்வாய் சொரியநின்று
சோதிடம் கொண்(டு)இதுஎம் மைக்கெடு வித்தது தூமொழியே. .. 552

வடிவார் வயல்தில்லை யோன்மல யத்துநின் றும்வருதேன்
கடிவார் களிவண்டு நின்றலர் தூற்றப் பெருங்கனியார்
நொடிவார் நமக்கினி நோதக யான்உமக்(கு) என்னுரைக்கேன்
தடிவார் தினைஎமர் காவேம் பெருமஇத் தண்புனமே. .. 546

நினைவித்துத் தன்னைஎன் நெஞ்சத்து இருந்(து)அம் பலத்துநின்று
புனைவித்த ஈசன் பொதியின் மலைப்பொருப் பன்விருப்பில்
தினைவித்திக் காத்துச் சிறந்துநின் றேமுக்குச் சென்றுசென்று
வினைவித்திக் காத்து விளைவுண்ட தாகி விளைந்ததுவே. .. 560

கனைகடற் செய்தநஞ் சுண்டுகண் டார்க்(கு)அம் பலத்(துஐ அமிழ்தாய்
வினைகெடச் செய்தவன் விண்தோய் கயிலை மயிலனையாய்
நனைகெடச் செய்தனம் ஆயின் நமைக்கெடச் செய்திடுவான்
தினைகெடச் செய்திடு மாறும்உண் டீஇத் திருக்கனியே. .. 564

வழுவா இயல்எம் மலையர் விதைப்பமற்(று) யாம் வளர்த்த
கொழுவார் தினையின் குழாங்கள்எல் லாம்எம் குழாம்வணங்கும்
செழுவார் கழல்தில்லைச் சிற்றம் பலவரைச் சென்றுநின்று
தொழுவார் வினைநிற்கி லேநிற்ப தாவ(து)இத் தொல்புனத்தே. .. 568

பொருப்பர்க்(கு) யாம் ஒன்று மாட்டேம் புகலப் புகல்எமக்காம்
விருப்பர்க்(கு) யாவர்க்கும் மேலவர்க்கு மேல்வரும் ஊர்எரித்த
நெருப்பர்க்கு நீ(டு)அம் பலவருக்(கு) அன்பர் குலநிலத்துக்
கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற தின்றிக் கடிப்பினமே. .. 572

பரிவுசெய்(து) ஆண்(டு)அம் பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வாய்
அருவிசெய் தாழ்புனத்(து) ஐவனம் கொய்யவும் இவ்வனத்தே
பிரிவுசெய் தால்அரி தேகொள்க போயடும் என்றும்பெற்றி
இருவிசெய் தாளின் இருந்(து)இன்று காட்டும் இளங்கிளியே. .. 576

கனியார் கருத்தின்று முற்றிற்று யாம்சென்றும் கார்ப்புனமே
மனியார் பொழில்காள் மறத்திற்கண் டீர்மன்னும் அம்பலத்தோன்
அனியார் கயிலை மயில்காள் அயில்வேல் ஒருவர்வந்தால்
துணியா தனதுணிந் தார்என்னும் நீர்மைகள் சொல்லுமினே. .. 580

பொதுவினில் தீர்த்(து)என்னை யாண்டடீன் புலியூர் அரன்பொருப்பே
இதுவெனில் என்னின்(று) இருக்கின்ற வா(று)எம் இரும்பொழிலே
எதநுமக்(கு)எய்திய(து) என்உற் றனிர்அறை ஈண்டருவி
மதுவினில் கைப்புவைத் தாலொத்த வாமற்(று)இவ் வான்புனமே. .. 584

ஆனந்த மாக்கடல் ஆடுசிற் றம்பலம் அன்னபொன்னின்
தேனுந்து மாமலைச் சீறூர் இதுசெய்ய லாவதில்லை
வானுந்து மாமதி வேண்டி அழும்மழப் போலுமன்னோ
நானுந் தளர்ந்தனன் நீயும் தளர்ந்தனை நன்னெஞ்சமே. .. 588

மருந்துநம் அல்லற் பிறவிப் பிணிக்(கு)அம் பலத்(து)அமிர்தாய்
இருந்தனர் குன்றின்நின்(று) ஏங்கும் அருவிசென்(று) ஏர்திகழப்
பொருந்தின மேகம் புதைத்திருள் தூங்கும் புனை இறும்பின்
விருந்தின் யான்உங்கள் சீறூர் அதனுக்கு வெள்வளையே. .. 592

விசும்பினுக்(கு) ஏணி நெறியன்ன சின்னெறி மேல்மழைதூங்(கு)
அசும்பினில் துன்னி அளைநுழைந் தால் ஒக்கும் ஐயமெய்யே
இசும் பினில் சிந்தைக்கும் ஏறற்(கு) அரி(து)எழில் அம்பலத்துப்
பசும்பனிக் கோடு மிலைந்தான் மலயத்(து)எம் வாழ்பதியே .. 596

மாற்றேன் எனவந்த காலனை ஓலம் இடஅடர்த்த
கோலதேன் குளிர்தில்லைக் கூத்தன் கொடுங்குன்றின் நீள்குடுமி
மேல்தேன் விரும்பும் முடவனைப் போல மெலியும் நெஞ்சே
ஆற்றேன் அரிய அரிவைக்கு நீவைத்த அன்பினுக்கே. .. 600

கூளி நிரைக்கநின்(று) அம்பலத்(து) ஆடி குறைகழற்கீழ்த்
தூளி நிறைத்த சுடர்முடி யோஇவள் தோள்நசையால்
ஆளி நிரைத்தடல் ஆனைகள் தேரும் இரவில்வந்து
மீளி யுரைத்தி வினையேன் உரைப்பதென் மெல்லியற்கே. .. 604

வரையன்(று) ஒருகால் இருகால் வளைய நிமிர்ந்துவட்கார்
நிரையன்(று) அழல்எழ எய்துநின் றோன்தில்லை அன்னநின்னூர்
விரையென்ன மென்னிழல் என்ன வெறியுறு தாதிவர்போ(து)
உரையென்ன வோசிலம் பாநலம் பாவி ஒளிர்வனவே. .. 608

செம்மலர் ஆயிரம் தூய்க்கரு மால்திருக் கண்அணியும்
மொய்ம்மலர் ஈர்ங்கழல் அம்பலத் தோன்மன்னு தென்மலயத்(து)
எம்மலர் சூடிநின்(று) எச்சாந்(து) அணிந்(து)என்ன நன்னிழல்வாய்
அம்மலர் வாட்கண்நல் லாய்எல்லி வாய்நுமர் ஆடுவதே. .. 612

பனைவளர் கைம்மாப் படாத்(து)அம் பலத்தரன் பாதம்விண்ணோர்
புனைவளர் சாரல் பொதியின் மலைப்பொலி சந்தணிந்து
கனைவளர் காவிகள் சூடிப்பைந் தோகை துயில்பயிலும்
சினைவளர் வேங்கைகள் யாங்கள்நின்(று) ஆடும் செழும்பொழிலே. .. 616

மலவன் குரம்பையை மாற்றிஅம் மால்முதல் வானர்க்(கு) அப்பால்
செலஅன்பர்க்(கு) ஒக்கும் சிவன்தில்லைக் கானலிற் சீர்ப்பெடையோ(டு)
அலவன் பயில்வது கண்(டு)அஞர் கூர்ந்(து)அயில் வேல்உரவோன்
செலஅந்தி வாய்க்கன் டனன்என்ன(து) ஆங்கொல்மன் சேர்துயிலே. .. 620

மோட்டங் கதிர்முலைப் பங்குடைத் தில்லைமுன் னோன்கழற்கே
கோட்டந் தரும்நம் குருமுடி வெற்பன் மழைகுழுமி
நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள் நாகம் நடுங்கச் சிங்கம்
வேட்டம் திரிசரி வாய்வரு வான்சொல்லு மெல்லியலே. .. 624

செழுங்கார் முழவதிர் சிற்றம் பலத்துப் பெருந்திருமால்
கொழுங்கான் மலரிடக் கூத்தயர் வோன்கழல் ஏத்தலர்போல்
முழங்கார் அரிமுரண் வாரண வேட்டைசெய் மொய்இருள்வாய்
வழங்கா அதரின் வழங்கென்று மோஇன்(று)எம் வள்ளலையே. .. 628

ஓங்கும் ஒருவிடம் உண்(டு)அம் பலத்(து)உம்பர் உய்யஅன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த்தழங் கும்அருவி
வீங்கும் கனைபுனல் வீழ்ந்(து)அன்(று) அழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்(கு)அறி யேன்சிறி யேன்சொல்லும் வாசகமே. .. 632

ஏனற் பசுங்கதிர் என்றூழ்க் கழிய எழிலியுன்னிக்
கானக் குறவர்கள் கம்பலை செய்யும்வம் பார்சிலம்பா
யான்இற்றை யாமத்து நின்னருள் மேல்நிற்க லுற்றுச் சென்றேன்
தேனக்க கொன்றையன் தில்லை யுறார்செல்லும் செல்லல்களே. .. 636

முன்னும் ஒருவர் இரும்பொழில் மூன்றற்கு முற்றும்இற்றால்
பின்னும் ஒருவர்சிற் றம்பலத் தார்தரும் பேரருள்போல்
துன்னுமோர் இன்பம்என் தோகைதம் தோகைக்குச் சொல்லுவபோல்
மன்னும் அரவத்த வாய்த்துயில் பேரும் மயிலினமே. .. 640

கூடார் அரண்எரி கூடக் கொடுஞ்சிலை கொண்டஅண்டன்
சேடார் மதின்மல்லல் தில்லைஅன் னாய்சிறு கண்பெருவெண்
கோடார் கரிகுரு மாமணி ஊசலைக் கோப்பழித்துத்
தோடார் மதுமலர் நாகத்தை நூக்குநம் சூழ்பொழிற்கே. .. 644

விண்ணுக்கு மேல்வியன் பாதலக் கீழ்விரி நீர்உடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்துதென் தில்லைநின் றோன் மிடற்றின்
வண்ணக் குவளை மலர்க்கின் றனசிவ வான்மிளிர்நின்
கண்ணோர்க்கு மேற்கண்டு காண்வண்டு வாழும் கருங்குழலே. .. 648

நந்தீ வரமென்னும் நாரணன் நாண்மலர்க் கண்ணிற்(கு) எ"கம்
தந்தீ வரன்புலி யூரன்ன யாய்தடங் கண்கடந்த
இந்தீ வரமிவை காணின் இருள்சேர் குழற்கெழில்சேர்
சந்தீ வரமுறி யும்வெறி வீயும் தருகுவனே. .. 652

காமரை வென்றகண் ணோன்தில்லைப் பல்கதி ரோன்அடைத்த
தாமரை இல்லின் இதழ்க்கத வம்திறந் தோதமியே
பாமரை மேகலை பற்றிச் சிலம்பொதுக் கிப்பையவே
நாமரை யாமத்(து)என் னோவந்து வைகி நயந்ததுவே. .. 656

அகலின் புகைவிம்மி ஆய்மலர் வேய்ந்(து)அஞ் சனம்எழுதத்
தகிலும் தனிவடம் பூட்டத் தகாள்சங் கரன்புலியூர்
இகலும் அவரில் தளரும்இத் தேம்பல்இடைஞெமியப்
புகலும் மிகஇங்ங னேயிறு மாக்கும் புணர்முலையே. .. 660

அழுந்தேன் நரகத்து யானென்(று) இருப்பவந்(து) ஆண்டுகொண்ட
செழுந்தேன் திகழ்பொழில் தில்லைப் புறவில் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுதம் இவள்யான் குருஉச்சுடர்கொண்(டு)
எழுந்(து)ஆங் கதுமலர்த் தும்உயர் வானத்(து) இளமதியே. .. 664

கரும்புறு நீலம் கொய்யல் தமிநின்று துயில்பயின்மோ
அரும்பெறல் கோழிய(டு) ஆயத்து நாப்பண் அமரர்ஒன்னார்
இரும்புறு மாமதிப் பொன்இஞ்சி வெள்ளிப் புரிசையன்றோர்
துரும்புறச் செற்றகொற் றத்(து)எம் பிரான்தில்லைச் சூழ்பொழிற்கே. .. 668

நற்பகல் சோமன் எரிதரு நாட்டத்தன் தில்லையன்ன
விற்பகைத்(து) ஓங்கும் புருவத்(து) இவளின் மெய்யேஎளிதே
வெற்பகச் சோலையின் வேய்வளர் தீச்சென்று விண்ணினின்ற
கற்பகச் சோலை கதுவுங்கல் நாடஇக் கல்லதரே. .. 672

பைவாய் அரவுஅரை அம்பலத்(து) எம்பரன் பைங்கயிலைச்
செவ்வாய்க் கருங்கண் பெரும்பணைத் தோள்சிற் றிடைக்கொடியை
மொய்வார் கமலத்து முற்றிழை இன்றென்முன் னைத்தவத்தால்
இவ்வா(று) இருக்கும்என் றேநிற்ப(து) என்றும்என் இன்னுயிரே. .. 676

பைவாய் அரவும் மறியும் மழுவும் பயின்மலர்க்கை
மொய்வார் சடைமுடி முன்னவன் தில்லையின் முன்னினக்கால்
செவ்வாய் கருவுயிர்ச் சேர்த்திச் சிறியாள் பெருமலர்க்கண்
மைவார் குவளை விடும்மன்ன நீண்முத்த மாலைகளே. .. 680

நாகம் தொழஎழில் அம்பலம் நண்ணி நடம்வில்வோன்
நாகம் இதுமதி யேமதி யேநவில் வேற்கைஎங்கள்
நாகம் வரஎதிர் நாங்கொள்ளும் நள்ளிருள் வாய்நறவார்
நாகம் மலிபொழில் வாயெழில் வாய்த்தநின் நாயகமே. .. 684

மின்அங்(கு) அலரும் சடைமுடி யோன்வியன் தில்லையன்னாய்
என்அங்(கு) அலமரல் எய்திய தோஎழில் முத்தம்தொத்திப்
பொன்அங்(கு) அலர்புன்னைச் சேக்கையின் வாய்ப்புலம் புற்றுமுற்றும்
அன்னம் புலரும் அளவும் துயிலா(து) அழுங்கினவே. .. 688

சோத்துன் அடியம் என் றோரைக் குழுமித்தொல் வானவர்சூழ்ந்(து)
ஏத்தும் படிநிற்ப வன்தில்லை யன்னாள் இவள்துவள
ஆர்த்துன் அமிழ்தும் திருவும் மதியும் இழந்தவம்நீ
பேர்த்தும் இரைப்பொழி யாய்பழி நோக்காய் பெருங்கடலே. .. 692

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லிதில் லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காள்எழிற் புள்ளினங்காள்
ஏதுற்(று) அழிதிஎன் னீர்மன்னும் ஈர்ந்துறை வர்க்(கு) இவளோ
தீதுற்ற(து) என்னுக்(கு)என் னீர்இது வோநன்மை செப்புமினே. .. 696

இன்னற வார்பொழில் தில்லை நகரிறை சீர்விழவில்.
பன்னிற மாலைத் தொகைபக லாம்பல் விளக்கிருளின்
துன்னற வுய்க்கும்இல் லோரும் துயிலில் துறைவர்மிக்க
கொன்னிற வேலொடு வந்திடின் ஞாளி குரை தருமே. .. 700

தாருறு கொன்றையன் தில்லைச் ‘சடைமுடி யோன்கயிலை
நீருறு கான்யா(று) அளவில் நீந்திவந் தால்நினது
போருறு வேல்வயப் பொங்குரும் அஞ்சுகம் அஞ்சிவரும்
சூருறு சோலையின் வாய்வரற் பாற்றன்று தூங்கிருளே. .. 704

விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் தில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குல்எல் லாம்மங்குல் வாய்விளக்கும்
மண்டல மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே. .. 708

பற்றொன்றி லார்பற்றும் தில்லைப் பரன்பரம் குன்றில்நின்ற
புற்றொன்று அரவன் புதல்வ னெனநீ புகுந்துநின்றால்
மற்றொன்று மாமலர் இட்டுன்னை வாழ்த்திவந் தித்திலன்றி
மற்றொன்று சிந்திப்ப ரேல்வல்ல ளோமங்கை வாழ்வகையே. .. 712

பூங்கணை வேளைப் பொடியாய் விழவிழித் தோன்புலியூர்
ஓங்கணை மேவிப் புரண்டு விழுந்தெழுந்(து) ஓலமிட்டுத்
தீங்கணைந் தோர்அல்லும் தேறாய் கலங்கிச் செறிகடலே
ஆங்கணைந் தார்நின்னை யும்உள ரோசென்(று) அகன்றவரே. .. 716

அலர்ஆ யிரம்தந்து வந்தித்து மால்ஆ யிரங்கரத்தால்
அலரார் கழல்வழி பாடுசெய் தாற்(கு)அள வில்ஒளிகள்
அலரா யிருக்கும் படைகொடுத் தோன்தில்லை யான்அருள்போன்(று)
அலராய் விளைகின்ற(து) அம்பல்கைம் மிக்(கு)ஐய மெய்யருளே. .. 720

புகழும் பழியும் பெருக்கில் பெருகும் பெருகிநின்று
நிகழும் நிகழா நிகழ்த்தின்அல் லால்இது நீநினைப்பின்
அகழும் மதிலும் அணிதில்லை யோன்அடிப் போதுசென்னித்
திகழும் அவர்செல்லல் போலில்லை யாம்பழி சின்மொழிக்கே. .. 724

ஆரம் பரந்து திரைபொரு நீர்முகில் மீன்பரப்பிச்
சீரம் பரத்தின் திகழ்ந்தொளி தோன்றும் துறைவர்சென்றார்
போரும் பரிசு புகன்றன ரோபுலி யூர்ப்புனிதன்
சீரம்பல் சுற்றி எற்றிச் சிறந்தார்க்கும் செறிகடலே. .. 728

பாணிகர் வண்டினம் பாடப்பைம் பொன்தரு வெண்கிழிதம்
சேணிகர் காவின் வழங்கும்புன் னைத்துறைச் சேர்ப்பர்திங்கள்
வாணிகர் வெள்வளை கொண்டகன் றார்திறம் வாய்திறவாய்
பூணிகர் வாளர வன்புலி யூர்சுற்றும் போர்க்கடலே. .. 732

பகன்தா மரைக்கண் கெடக்கடந் தோன்புலி யூர்ப்பழனத்(து)
அகன்தா மரையென்ன மேவண்டு நீல மணியணிந்து
முகன்தாழ் குழைச்செம்பொன் முத்தணி புன்னகையின் ஒும்உரையாது
அகன்றார் அகன்றே ஒழிவர்கொல் லோநம் அகன்துறையே. .. 736

உள்ளும் உருகி உரோமம் சிலிர்ப்ப உடையவன் ஆட்
கொள்ளும் அவரிலோர் கூட்டம்தந் தான்குனி கும்புலியூர்
விள்ளும் பரிசுசென் றார்வியன் தேர்வழி தூரல்கண்டாய்
புள்ளும் திரையும் பொரச்சங்கம் ஆர்க்கும் பொருகடலே. .. 740

ஆழி திருத்தும் புலியூர் உடையான் அருளின் அளித்(து)
ஆழி திருத்தும் மணற்குன்றின் நீத்தகன் றார்வருகென்(று)
ஆழி திருத்திச் சுழிக்கணக்(கு) ஓதிநை யாமல்ஐய
வாழி திருத்தித் தரக்கிற்றி யோஉள்ளம் வள்ளலையே. .. 744

கார்த்தரங் கம்திரை தோணி சுறாக்கடல் மீன்எறிவோர்
போர்த்த(ரு)அங் கம்துறைமானும் துறைவர்தம் போக்குமிக்க
தீர்த்தர்அங் கந்தில்லைப் பல்பூம் பொழிற்செப்பும் வஞ்சினமும்
ஆர்த்தர் அங் கம்செய்யு மால்உய்யு மா(று)என்கொல் ஆழ்சுடரே. .. 748

பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்பற் றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோன்எவ ரும்புகலத்
தகலோன் பயில்தில்லைப் பைம்பொழிற் சேக்கைகள் நோக்கினவால்
அகலோங்(கு) இருங்கழி வாய்க்கொழு மீனுண்ட அன்னங்களே. .. 752

பொன்னும் மணியும் பவளமும் போன்று பொலிந்திலங்கி
மின்னும் சடையோன் புலியூர் விரவா தவரினுள்நோய்
இன்னும் அறிகில வால்என்னை பாவம் இருங்கழிவாய்
மன்னும் பகலே மகிழ்ந்திரை தேரும்வண் டானங்களே. .. 756

கருங்கழி காதல்பைங் கானவில் தில்லைஎம் கண்டர்விண்டார்
ஒருங்கழி காதர மூவெயில் செற்றஒற் றைச்சிலைசூழ்ந்(து)
அருங்கழி காதம் அகலும்என் றூழ்என்(று) அலந்துகண்ணீர்
வருங்கழி காதல் வனசங்கள் கூப்பும் மலர்க்கைகளே. .. 760

மூவல் தழீஇய அருள்முத லோன்தில்லைச் செல்வன்முந்நீர்
நாவல் தழீஇயஇந் நானிலம் துஞ்சும் நயந்த இன்பச்
சேவல் தழீஇச்சென்று தான்துஞ்சும் யான்துயி லாச்செயிர்எம்
காவல் தழீஇயவர்க்(கு) ஓதா(து) அளிய களியன்னமே. .. 764

நில்லா வளைநெஞ்சம் நெக்குரு கும்நெடுங் கண்துயிலது
கல்லா கதிர்முத்தம் காற்றும் எனக்கட் டுரைக்கதில்லைத்
தொல்லோன் அருள்களில் லாரிற்சென் றார்சென்ற செல்லல்கண்டாய்
எல்லார் மதியே இதுநின்னை யான்இன்(று) இரக்கின்றதே. .. 768

வளரும் கறியறி யாமந்தி தின்றுமம் மர்க்(கு)இடமாய்த்
தளரும் தடவரைத் தண்சிலம் பாதன(து) அங்கம்எங்கும்
விளரும் விழும்எழும் விம்மும் மெலியும்வெண் மாமதிநின்(று)
ஒளிரும் சடைமுடி யோன்புலி யூர்அன்ன ஒண்ணுதலே. .. 772

ஓராகம் இரண்டெழி லாய்ஒளிர் வோன்தில்லை ஒண்ணுதல்அங்
கராகம் பயின்(று) அமிழ் தம்பொதிந்(து) ஈர்ஞ்சுணங்(கு) ஆடகத்தின்
பராகம் சிதர்ந்த பயோதரம் இப்பரி சேபணத்த
இராகங்கண் டால்வள்ள லேஇல்லை யேஎமர் எண்ணுவதே. .. 776

மணிஅக்(கு) அணியும் அரன்நஞ்சம் அஞ்சி மறுகிவிண்ணோர்
பணியக் கருணை தரும்பரன் தில்லையன் னாள்திறத்துத்
துணியக் கருதுவ(து) இன்றே துணிதுறை வாநிறைபொன்
அணியக் கருதுநின் றார்பலர் மேன்மேல் அயலவரே. .. 780

பாப்பணி யோன்தில்லைப் பல்பூ மருவுசில் ஓதியைநற்
காப்பணிந் தார்பொன் அணிவார் இனிக்கமழ் பூந்துறைவ
கோப்பணிவான் தோய்கொடி முன்றில் நின்றிவை ஏர்குழுமி
மாப்பணி லங்கள் முழுங்கத் தழங்கும் மணமுரசே. .. 784

எலும்பால் அணியிறை அம்பலத் தோன்எல்லை செல்குறுவோர்
நலம்பா வியமுற்றும் நல்கினும் கல்வரை நாடர்அம்ம
சிலம்பா வடிக்கண்ணி சிற்றிடைக் கேவிலை செப்பல்ஒட்டார்
கலம்பா வியமுலை யின்விலை என்நீ கருதுவதே. .. 788

விசும்புற்ற திங்கட்(கு) அழும்மழப் போன்(று)இனி விம்மிவிம்மி
அசும்புற்ற கண்ணோ(டு) அலறாய் கிடந்(து)அரன் தில்லையன்னாள்
குயம்புற் றர(வு)இடை கூர்எயிற்(று) ஊறல் குழல்மொழியின்
நயம்பற்றி நின்று நடுங்கித் தளர்கின்ற நன்னெஞ்சமே. .. 792

மைதயங் கும்திரை வாரியை நோக்கி மடல்அவிழ்பூங்
கைதை அங் கானலை நோக்கிக்கண் ணீர்கொண்(டு)எங் கண்டர்தில்லைப்
பொய்தயங் கும்நுண் மருங்குல்நல் லாரையெல் லாம்புல்லினாள்
பைதயங் கும்அர வம்புரை யும்அல்குல் பைந்தொடியே. .. 796

மாவைவந் தாண்டமென் னோக்கிதன் பங்கர்வண் தில்லைமல்லற்
கோவைவந் தாண்டசெவ் வாய்க்கருங் கண்ணி குறிப்பறி யேன்
பூவைதந் தாள்பொன்னம் பந்துதந் தாள்என்னைப் புல்லிக்கொண்டு
பாவைதந் தாள்பைங் கிளியளித் தாள்இன்றென் பைந்தொடியே. .. 800

மெல்லியல் கொங்கை பெரியமின் நேரிடை மெல்லடிபூக்
கல்லியல் வெம்மைக் கடங்கடும் தீக்கற்று வானம்எல்லாம்
சொல்லிய சீர்ச்சுடர் திங்கள் அங் கண்ணித்தொல் லோன்புலியூர்
அல்லியங் கோதைநல் லாய்எல்லை சேய்த்துஎம் அகல்நகரே. .. 804

பிணையும் கலையும்வன் பேய்த்தே ரினைப்பெரு நீர்நசையால்
அணையும் முரம்பு நிரம்பிய அத்தமும் ஐயமெய்யே
இணையும் அளவும் இல் லாஇறை யோன்உறை தில்லைத்தண்பூம்
பணையும் தடமும்அன் றேநின்னோ(டு) ஏகின்எம் பைந்தொடிக்கே. .. 808

இங்(கு)அயல் என்நீ பணிக்கின்ற(து) ஏந்தல் இணைப்பதில்லாக்
கங்கைஅம் செஞ்சடைக் கண்ணுதல் அண்ணல் கடிகொள்தில்லைப்
பங்கயப் பாசடைப் பாய்தடம் நீஅப் படர்தடத்துச்
செங்கயல் அன்றே கருங்கயல் கண்ணித் திருநுதலே. .. 812

தாயிற் சிறந்தன்று நாண்தைய லாருக்(கு)அந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் தோளி திண் கற்பின் விழுமிதன்(று)ஈங்
கோயில் சிறந்துசிற் றம்பலத்(து) ஆடும்எம் கூத்தப்பிரான்
வாயில் சிறந்த மதியில் சிறந்த மதிநுதலே. .. 816

குறப்பாவை நின்குழல் வேங்கையம் போதொடு கோங்கம்விராய்
நறப்பா டலம்புனை வார்நினை வார்தம் பிரான்புலியூர்
மறப்பான் அடுப்பதோர் தீவினை வந்திடின் சென்றுசென்று
பிறப்பான் அடுப்பினும் பின்னும்துன் னத்தகும் பெற்றியரே. .. 820

நிழல்தலை தீநெறி நீரில்லை கானகம் ஒரிகத்தும்
அழல்தலை வெம்பரற் றென்பர்என் னோதில்லை அம்பலத்தான்
கழல்தலை வைத்துக்கைப் போதுகள் கூப்பக்கல் லாதவர்போல்
குழல்தலைச் சொல்விசெல் லக்குறிப் பாகும் நம்கொற்றவர்க்கே. .. 824

காயமும் ஆவியும் நீங்கள் சிற்றம்பல வன்கயிலைச்
சீயமும் மாவும் வெரீஇவரல் என்பல் செறிதிரைநீர்த்
தேயமும் யாவும் பெறினும் கொடார்நமர் இன்னசெப்பில்
தோயமும் நாடும்இல் லாச்சுரம் போக்குத் துணிவித்தவே. .. 828

மற்பாய் விடையோன் மகிழ்புலி யூர்என் னொடும்வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர் விருப்புப் புகுந்துநுந்தக்
கற்பார் கடுங்கால் கலக்கிப் பறித்தெறி யக்கழிக
இற்பாற் பிறவற்க ஏழையர் வாழி எழுமையுமே. .. 832

கம்பம் சிவந்த சலந்தரன் ஆகம் கறுத்ததில்லை
நம்பன் சிவநகர் நற்றளிர் கற்சுரம் ஆகும்நம்பா
அம்பஞ்சி ஆவம் புகமிக நீண்(டு)அரி சிந்துகண்ணாள்
செம்பஞ்சி யின்மிதிக் கிற்பதைக் கும்மலர்ச் சீறடிக்கே. .. 836

முன்னோன் மணிகண்டம் ஒத்தவன் அம்பலம் தம்முடிதாழ்த்(து)
உன்னா தவர்வினை போல்பரந்(து) ஓங்கும் எனதுயிரே
அன்னாள் அரும்பெறல் ஆவியன் னாய்அருள் ஆசையினால்
பொன்னார் மணிமகிழ்ப் பூவிழ யாம்விழை பொங்கிருளே. .. 840

பனிச்சந் திரனொடு பாய்புனல் சூடும் பரன்புலியூர்
அனிச்சம் திகழும் அம் சீறடி ஆவ அழல்பழுத்த
கனிச்செந் திரளன்ன கற்கடம் போந்து கடக்குமென்றால்
இனிச் சந்த மேகலை யாட்(கு)என்கொ லாம்புகுந்(து) எய்துவதே. .. 844

வைவந்த வேலவர் சூழ்வரத் தேர்வரும் வள்ளல்உள்ளம்
தெய்வம் தரும்இருள் தூங்கும் முழுதும் செழுமிடற்றின்
மைவந்த கோன்தில்லை வாழ்த்தார் மனத்தின் வழுத்துநர் போல்
மொய்வந்த வாவி தெளியும் துயிலும்இம் மூதெயிலே. .. 848

பறந்திருந்(து) உம்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்(து)எரி யாடிதென் தில்லையன் னாள்திறத் துச்சிலம்பா
அறம்திருந்(து) உன்னரு ளும்பிறி தாயின் அருமறையின்
திறம்திரிந் தார்கலி யும்முற்றும் வற்றும்இச் சேணிலத்தே. .. 852

ஈண்டொல்லை ஆயமும் ஔவையும் நீங்கஇவ் ஒர்கவ்வைதீர்த்(து)
ஆண்டொல்லை கண்டிடக் கூடுக நும்மைஎம் மைப்பிடித்தின்(று)
ஆண்டெல்லை தீர்இன்பம் தந்தவன் சிற்றம் பலம்நிலவு
சேண்தில்லை மாநகர் வாய்ச்சென்று சேர்க திருத்தகவே. .. 856

பேணத் திருத்திய சீறடி மெல்லச்செல் பேரரவம்
பூணத் திருத்திய பொங்கொளி யோன்புலி யூர்புரையும்
மாணத் திருத்திய வான்பதி சேரும் இருமருங்கும்
காணத் திருத்திய போலும் முன் னாமன்னு கானங்களே. .. 860

கொடித்தேர் மறவர் சூழாம்வெங் கரிநிரை கூடின்என்கை
வடித்தேர் இலங்கெ"தின் வாய்க்குத வாமன்னும் அம்பலத்தோன்
அடித்தேர் அலரென்ன அஞ்சுவன் நின்ஐயர் என்னின்மன்னும்
கடித்தேர் குழன்மங்கை கண்டி(டு)இவ் விண்தோய் கனவரையே. .. 864

முன்னோன் அருள்முன்னும் உன்னா வினையின் முகர்துன்னும்
இன்னாக் கடறி(து)இப் போழ்தே கடந்தின்று காண்டும்சென்று
பொன்னார் அணிமணி மாளிகைத் தென்புலி யூர்ப்புகழ்வார்
தென்னா எனஉடை யான்நட மாடுசிற் றம்பலமே. .. 868

விடலைஉற் றாரில்லை வெம்முனை வேடர் தமியைமென்பூ
மடலையுற் றார்குழல் வாடினள் மன்றுசிற் றம்பலவர்க்கு
அடலையுற் றாரின் எறிப்(பு)ஒழிந் தாங்(கு)அருக் கன்கருக்கிக்
கடலையுற் றான்கடப் பாரில்லை இன்றிக் கடுஞ்சுரமே. .. 872

அன்பணைத்(து) அம்சொல்லி பின்செல்லும் ஆடவன் நீடவன்தன்
பின்பணைத் தோளி வரும்இப் பெருஞ்சுரம் செல்வதன்று
பொன்பணைத் தன்ன இறையுறை தில்லைப் பொலிமலர்மேல்
நன்பணைத் தன்னற(வு) உன்அளி போன்றொளிர் நாடகமே. .. 876

கண்கள்தம் மாற்பயன் கொண்டனம் கண்டினிக் காரிகைநின்
பண்கட மென்மொழி ஆரப் பருக வருகஇன்னே
விண்கள்தம் நாயகன் தில்லையின் மெல்லியல் பங்கன்எங்கோன்
தண்கடம் பைத்தடம் போற்கடுங் கானகம் தண்ணெனவே. .. 880

மின்தங்(கு) இடையடு நீவியன் தில்லைச்சிற் றம்பலவர்
குன்றம் கடந்துசென் றால்நின்று தோன்றும் குருஉக்கமலம் ,
துன்(று)அம் கிடங்கும் துறைதுறை வள்ளைவெள் ளைநகையார்
சென்(று)அங்(கு) அடைதட மும்புடை சூழ்தரு சேண்நகரே. .. 884

மின்போல் கொடிநெடு வானக் கடலுள் திரைவிரிப்பப்
பொன்போல் புரிசை வடவரை காட்டப் பொலிபுலியூர்
மன்போற் பிறையணி மாளிகை சூலத்த வாய்மடவாய்
நின்போல் நடைஅன்னம் துன்னிமுன் தோன்றும்நல் நீள்நகரே. .. 888

செய்குன்(று) உவைஇவை சீர்மலர் வாவி விசும்பியங்கி
நைகின்ற திங்கள்எய்ப்(பு) ஆறும் பொழில்அவை ஞாங்கர்எங்கும்
பொய்குன்ற வேதியர் ஓதிடம் உந்திடம் இந்திடமும்
எய்குன்ற வார்சிலை அம்பல வற்(கு)இடம் ஏந்திழையே. .. 892

மயிலெனப் பேர்ந்(து)இள வல்லியின் ஒல்கிமென் மான்விழித்துக்
குயிலெனப் பேசும்எங் குட்டன்எங் குற்றதென் னெஞ்சகத்தே
பயிலெனப் பேர்ந்தறி யாதவன் தில்லைப்பல் பூங்குழலாய்
அயிலெனப் பேருங்கண் ணாய்என் கொலாம்இன்(று) அயர்கின்றதே. .. 896

ஆளரிக் கும்அரி தாய்த்தில்லை யாவருக் கும்எளிதாம்
தாளர்இக் குன்றில்தன் பாவைக்கு மேவித் தழல்திகழ்வேல்
கோளரிக் கும்நிகர் அன்னார் ஒருவர் குருஉமலர்த்தார்
வாளரிக் கண்ணிகொண் டாள்வண்டல் ஆயத்(து)எம் வாணுதலே. .. 900

வடுத்தான் வகிர்மலர் கண்ணிக்குத் தக்கின்று தக்கன்முத்தீக்
கெடுத்தான் கெடலில்தொல் லோன்தில்லைப் பன்மலர் கேழ்கிளர
மடுத்தான் குடைந்தன் றழுங்க அழுங்கித் தழீஇமகிழ்வுற்(று)
எடுத்தாற்(கு) இனியன வேயினி யாவன எம்மனைக்கே. .. 904

முறுவல்அக் கால்தந்து வந்தென் முலைமுழு வித்தழுவிச்
சிறுவலக் காரங்கள் செய்தஎல் லாம்முழு தும்திதையத்
தெறுவலக் காலனைச் செற்றவன் சிற்றம் பலஞ்சிந்தியார்
உறுவலக் கானகம் தான்படர் வானாம் ஒளியிழையே. .. 908

தாமே தமக்(கு)ஒப்பு மற்றில் லவர்தில்லைத் தண்அனிச்சப்
பூமேல் மிதிக்கின் பதைத்தடி பொங்கும்நங் காய் எரியும்
தீமேல் அயில்போல் செறிபரல் கானிற் சிலம்படியாய்
ஆமே நடக்க அருவினை யேன்பெற்ற அம்மனைக்கே. .. 912

தழுவின கையிறை சோரின் தமியம்என் றேதளர்வுற்(று)
அழுவினை செய்யும்நை யாஅம்சொல் பேதை அறிவுவிண்ணோர்
குழுவினை உய்யநஞ் சுண்(டு)அம் பலத்துக் குனிக்கும்பிரான்
செழுவின தாள்பணி யார்பிணி யாலுற்றுத் தேய்வித்ததே. .. 916

யாழியல் மென்மொழி வன்மனப் பேதையர் ஏதிலம்பின்
தோழியை நீத்(து)என்னை முன்னே துறந்துதுன் னார்கண்முன்னே
வாழிஇம் மூதூர் மறுகச்சென் றாள்அன்று மால்வணங்க
ஆழிதந் தான்அம் பலம்பணி யாரின் அருஞ்சுரமே. .. 920

கொன்னுனை வேல்அம் பலவன் தொழாரின்குன் றம்கொடியோள்
என்னணம் சென்றனள் என்னணம் சேரும் எனஅயரா
என்னனை போயினள் யாண்டையள் என்னைப் பருந்தடும்என்(று)
என்னனை போக்கன்றிக் கிள்ளைஎன் உள்ளத்தை ஈர்க்கின்றதே. .. 924

பெற்றே னொடுங்கிள்ளை வாட முதுக்குறை பெற்றிமிக்கு
நற்றேன் மொழியழல் கான்நடந் தாள்முகம் நானணுகப்
பெற்றேன் பிறவி பெறாமற்செய் தோன்தில்லைத் தேன்பிறங்கு
மற்றேன் மலரின் மலர்த்(து)இரந் தேன்சுடர் வானவனே. .. 928

வைம்மலர் வாட்படை யூரற்குச் செய்யும்குற் றேவல்மற்றென்
மைம்மலர் வாட்கண்ணி வல்லள்கொல் லாம்தில்லை யான்மலைவாய்
மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென்(று) எண்ணித்துண் ணென்றொளித்துக்
கைம்மல ரால்கண் புதைத்துப் பதைக்கும்எம் கார்மயிலே. .. 932

வேயின தோளி மெலியல்விண் ணோர்தக்கன் வேள்வியின்வாய்ப்
பாயின சீர்த்தியன் அம்பலத் தானைப் பழித்துமும்மைத்
தீயின(து) ஆற்றல் சிரம்கண்இழிந்து திசைதிசைதாம்
போயின எல்லையெல் லாம்புக்கு நாடுவன் பொன்னினையே. .. 936

பணங்கள்அஞ் சாலும் பருஅர(வு) ஆர்த்தவன் தில்லையன்ன
மணங்கொள்அஞ் சாயலும் மன்னனும் இன்னஏ வரக்கரைந்தால்
உணங்கல்அஞ் சா(து)உண்ண லாம்ஒள் நிணப்பலி ஒக்குவல்மாக்
குணங்கள்அஞ் சாற்பொலி யும்நல சேட்டைக் குலக்கொடியே. .. 940

முன்னும் கடுவிடம் உண்டதென் தில்லைமுன் னோன்அருளால்
இன்னும் கடியிக் கடிமனைக் கேமற்(று) யாம்அயர
மன்னும் கடிமலர்க் கூந்தலைத் தான்பெறு மாறும்உண்டேல்
உன்னுங்கள் தீதின்றி ஓதுங்கள் நான்மறை உத்தமரே. .. 944

தெள்வன் புனற்சென்னி யோன்அம் பலம்சிந்தி யார்இனஞ்சேர்
முள்வன் பரல்முரம் பத்தின்முன் செய்வினை யேன்எடுத்த
ஒள்வன் படைக்கண்ணி சீறடி இங்கிவை உங்குவை அக்
கள்வன் பகட்டுர வோன்அடி யென்று கருதுவனே. .. 948

பாலொத்த நீற்றம் பலவன் கழல்பணி யார்பிணிவாய்க்
கோலத் தவிசின் மிதிக்கின் பதைத்தடி கொப்புள்கொள்ளும்
வேலொத்த வெம்பரல் கானத்தின் நின்றோர் விடலைபின்போம்
காலொத் தனவினை யேன்பெற்ற மாணிழை கால்மலரே. .. 952

பேதைப் பருவம் பின்சென் றதுமுன்றில் எனைப்பிரிந்தால்
ஊதைக்(கு) அலமரும் வல்லியப் பாள்முத்தன் தில்லையன்னாள்
ஏதிற் கரத்தய லானொ(டு)இன்(று) ஏகினள் கண்டனையே
போதிற் பொலியும் தொழிற்புலிப் பல்குரல் பொற்றொடியே. .. 956

புயலன்(று) அலர்சடை ஏற்றவன் தில்லைப் பொருப்பரசி
பயலன் தலைப்பணி யாதவர் போல்மிகு பாவம்செய்தேற்(கு)
அயலன் தமியன்அம் சொல்துணை வெஞ்சுரம் மாதர்சென்றால்
இயலன்(று) எனக்கிற் றிலைமற்று வாழி எழிற்புறவே. .. 960

பாயும் விடையோன் புலியூர் அனையஎன் பாவைமுன்னே
காயும் கடத்திடை யாடிக் கடப்பவும் கண்டுநின்று
வாயும் திறவாய் குழைஎழில் வீசவண்(டு) ஒலுறுத்த
நீயும்நின் பாவையும் நின்று நிலாவிடும் நீள்குரவே. .. 964

கத்திய பொக்கணத்(து) என்(பு)அணி கட்டங்கம் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தி னீர்புலி யூர்அம் பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பணைத்திறு மாந்த பயோதரத்தோர்
பித்திதன் பின்வர முன்வரு மோஓர் பெருந்தகையே. .. 968

வெதிரேய் கரத்துமென் தோல்ஏய் சுவல்வெள்ளை நூலிற்கொண்மூ
அதிரேய் மறையின்இவ் வாறுசெல் வீர்தில்லை அம்பலத்துக்
கதிரேய் சடையோன் கரமான் எனஒரு மான்மயில்போல்
எதிரே வருமே சுரமே வெறுப்பவோர் ஏந்தலோடே. .. 972

மீண்டார் எனஉவந் தேன்கண்டு நும்மைஇம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயின ரேபுலி யூர்எனைநின்(று)
ஆண்டான் அருவரை ஆளியன் னானைக்கண்டேன்அயலே
தூண்டா விளக்கனை யாய்என்னை யோஅன்னை சொல்லியதே. .. 976

பூங்கயி லாயப் பொருப்பன் திருப்புலி யூரதென்னத்
தீங்கை இலாச்சிறி யாள்நின்ற(து) இவ்விடம் சென்றெதிர்ந்த
வேங்கையின் வாயின் வியன்களகம் மடுத்துக் கிடந்தலற
ஆங்(கு)அயி லாற்பணி கொண்டது திண்திறல் ஆண்தகையே. .. 980

மின்தொத்(து) இடுகழல் நூபுரம் வெள்ளைசெம் பட்டுமின்ன
ஒன்(று)ஒத் திடவுடை யாள(டு)ஒன் றாம்புலி யூரன்என்றே
நன்(று)ஒத் தெழிலைத் தொழவுற் றனம்என்ன தோர்நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனம்அன்னை நீசொன்ன கொள்கையரே. .. 984

மீள்வது செல்வதன்(று) அன்னைஇவ் வெங்கடத்(து) அக்கடமாக்
கீள்வது செய்த கிழவோ னொடுங்கிளர் கெண்டையன்ன
நீள்வது செய்தகண் ணாள்இந் நெடுஞ்சுரம் நீந்தியெம்மை
ஆள்வது செய்தவன் தில்லையின் எல்லை அணுகுவரே. .. 988

கரும்பிவர் சந்தும் தொடுகடல் முத்தும்வெண் சங்கும்எங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்(கு)அணி யாம்வியன் கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம் பலம்அனைய
கரும்பன மென்மொழி யாரும்அந் நீர்மையர் காணுநர்க்கே. .. 992

ஆண்(டு)இல் எடுத்தவ ராம்இவர் தாம்அவர் அல்குவர்போய்த்
தீண்டில் எடுத்தவர் தீவினை தீர்ப்பவன் தில்லையின்வாய்த்
தூண்டில் எடுத்தவ ரால்தொங்கொ(டு) எற்றப் பழம்விழுந்து
பாண்டில் எடுத்தபல் தாமரை கீழும் பழனங்களே. .. 996

எழுங்குலை வாழையின் இன்கனி தின்(று)இள மந்திஅந்தண்
செழுங்குலை வாழை நிழலில் துயில்சிலம் பாமுனைமேல்
உழுங்கொலை வேல்திருச் சிற்றம் பலவரை உன்னலர்போல்
அழுங்குலை வேலன்ன கண்ணிக்(கு)என் னோநின் னருள் வகையே. .. 1000

பரம்பயன் தன்னடி யேனுக்குப் பார்விசும் பூடுருவி
வரம்பயன் மாலறி யாத்தில்லை வானவன் வானகஞ்சேர்
அரம்பையர் தம்மிட மோஅன்றி வேழத்தின் என்புநட்ட
குரம்பையர் தம்மிட மோஇடம் தோன்றும்இக் குன்றிடத்தே. .. 1004

சிறார்கவண் வாய்த்த மணியிற் சிதை பெருந் தேனிழும்என்(று)
இறால்கழி வுற்(று)எம் சிறுகுடில் உந்தும் இடமி(து)எந்தை
உறாவரை யுற்றார் குறவர்பெற் றாளும் கொடிச்சி உம்பர்
பெறாஅருள் அம்பல வன்மலைக் காத்தும் பெரும்புனமே. .. 1008

கடந்தொறும் வாரண வல்சியின் நாடிப்பல் சீயம்கங்குல்
இடம்தொறும் பார்க்கும் இயவொரு நீஎழில் வேலின்வந்தால்
படந்தொறும் தீஅர வன்னம் பலம்பணி யாரின்எம்மைத்
தொடர்ந்தொறும் துன்(பு)என் பதேஅன்ப நின்னருள் தோன்றுவதே. .. 1012

களிறுற்ற செல்லல் களைவயின் பெண்மரங் கைஞ்ஞெமிர்த்துப்
பிளிறுற்ற வானப் பெருவரை நாட பெடைநடையோ(டு)
ஒளிறுற்ற மேனியின் சிற்றம் பலம்நெஞ் சுறாதவர்போல்
வெளிறுற்ற வான்பழி யாம்பகல் நீசெய்யும் மெய்யருளே. .. 1016

கழிகண் தலைமலை வோன்புலி யூர்கரு தாதவர்போல்
குழிகண் களிறு வெரீஇ அரி யாளி குழீஇவழங்காக்
கழிகட் டிரவின்வரல்கழல் கைதொழு தேயிரந்தேன்
பொழிகட் புயலின் மயிலில் துவளும் இவள்பொருட்டே. .. 1020

விண்ணும் செலவறி யாவெறி யார்கழல் வீழ்சடைத்தீ
வண்ணன் சிவன்தில்லை மல்லெழில் கானல் அரையிரவில்
அண்ணல் மணிநெடுந் தேர்வந்த துண்டாம் எனச்சிறிது
கண்ணும் சிவந்தன்னை என்னையும் நோக்கினள் கார்மயிலே. .. 1024

வான்தோய் பொழில்எழில் மாங்கனி மந்தியின் வாய்க்கடுவன்
தேன்தோய்த்(து) அருத்தி மகிழ்வகன் டாள்திரு நீள்முடிமேல்
மீன்தோய் புனற்பெண்ணை வைத்துடை யானையும் மேனியைத்தான்
வான்தோய் மதில்தில்லை மாநகர் போலும் வரிவளையே. .. 1028

நறைக்கன் மலிகொன்றை யோன்நின்று நாடக மாடுதில்லைச்
சிறைக்கன் மலிபுனல் சீர்நகர் காக்கும்செவ் வேல்கிளைஞர்
பறைக்கன் படும்படும் தோறும் படாமுலைப் பைந்தொடியாள்
கறைக்கன் மலிகதிர் வேற்கன் படாது கலங்கினவே. .. 1032

கரலா யினர்நினை யாத்தில்லை அம்பலத் தான்கழற்(கு)அன்
பிலரா யினர்வினை போலிருள் தூங்கி முழங்கிமின்னிப்
புலரா இரவும் பொழியா மழையும்புண் ணில்நுழைவேல்
மலரா வரும்மருந் தும்இல்லை யோநும் வரையிடத்தே. .. 1036

இறவரை உம்பர்க் கடவுட் பராய்நின்(று) எழிலியுன்னிக்
குறவரை ஆர்க்கும் குளிர்வரை நாட கொழும்பவள
நிறவரை மேனியன் சிற்றம் பலம்நெஞ்(சு) உறாதவர்போல்
உறவரை மேகலை யாட்(கு)அலராம்பகல் உள்ளருளே. .. 1040

கழியா வருபெரு நீர்சென்னி வைத்தென்னைத் தன்தொழும்பில்
கழியா அருள்வைத்த சிற்றம் பலவன் கரந்தருமான்
விழியா வரும்புரி மென்குழ லாள்திறத்(து) ஐயமெய்யே
பழியாம் பகல்வரில் நீயிர(வு) ஏதும் பயனில்லையே. .. 1044

மையார் கதலி வனத்து வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா(து) அயின்றன மந்திகள் சோரும் இருஞ்சிலம்பா
மெய்யா அரியதென் அம்பலத் தான்மதி யூர்கொள் வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கைபொன் மாலையின் முன்னினவே. .. 1048

தேமாம் பொழில்தில்லைச் சிற்றம் பலத்துவின் னோர்வணங்க
நாமா தரிக்க நடம்பயில் வோனைநன் னாதவரின்
வாமான் கலைசெல்ல நின்றார் கிடந்தநம் அல்லல்கண்டால்
தாமா அறிகில ராயின்என்னாம் சொல்லும் தன்மைகளே. .. 1052

வல்சியின் எண்கு வளர்புற்(று) அகழமல் கும்இருள்வாய்ச்
செல்(வு)அரி தன்றுமன் சிற்றம் பலவரைச் சேரலர்போல்
கொல்கரி சீயங் குறுகா வகைபிடி தானிடைச்செல்
கல்லதர் என்வந்த வாறென் பவர்ப்பெறின் கார்மயிலே. .. 1056

வாரிக் களிற்றின் மருப்புகு முத்தம் வரைமகளிர்
வேரிக்(கு) அளிக்கும் விழுமலை நாட விரிதிரையின்
நாரிக்(கு) அளிக்கமர் நன்மாச் சடைமுடி நம்பர்தில்லை
ஏரிக் களிக்கரு மஞ்ஞைஇந் நீர்மைஎன் எய்துவதே. .. 1060

குறைவிற்கும் கல்விக்கும் செல்விற்கும் நின்குலத் திற்கும் வந்தோர்
நிறைவிற்கும் மேதகு நீதிக்கும் ஏற்பின்அல் லால்நினையின்
இறைவிற் குலாவரை யேந்திவண் தில்லையன் ஏழ்பொழிலும்
உறைவிற் குலாநுத லாள்விலை யோமெய்ம்மை யோதுநர்க்கே. .. 1064

வடுத்தன நீள்வகிர்க் கண்ணிவெண் நித்தில வாள்நகைக்குத்
தொடுத்தன நீவிடுத் தெய்தத் துணியென்னைத் தன்தொழும்பிற்
படுத்தநன் நீள்கழல் ஈசர்சிற் றம்பலம் தாம்பணியார்க்(கு)
அடுத்தன தாம்வரின் பொல்லா(து) இரவின்நின் ஆரருளே. .. 1068

குன்றங் கிடையும் கடந்துமர் கூறும் நிதிகொணர்ந்து
மின்தங் கிடைநும் மையும் வந்து மேவுவன் அம்பலம்சேர்
மன்தங்(கு) இடைமரு(து) ஏகம்பம் வாஞ்சியம் அன்னபொன்னைச்
சென்(று)அங்(கு) இடைகொண்டு வாடா வகைசெப்பு தேமொழியே. .. 1072

கேழ்ஏ வரையும்இல் லோன்புலி யூர்பயில் கிள்ளையன்ன
யாழேர் மொழியாள் இரவரி னும்பகற் சேறியென்று
வாழேன் எனஇருக் கும்வரிக் கண்ணியை நீவருட்டித்
தாழேன் எனஇடைக் கண்சொல்லி ஏகு தனிவள்ளலே. .. 1076

வருட்டின் திகைக்கும் வசிக்கின் துளங்கும் மனமகிழ்ந்து
தெருட்டின் தெளியலள் செப்பும் வகையில்லை சீரருக்கன்
குருட்டின் புகச்செற்ற கோன்புலி யூர்குரு கார்மனம் போன்(று)
இருட்டிற் புரிகுழ லாட்(கு)எங்ங னேசொல்லி ஏகுவனே. .. 1080

நல்லாய் நமக்குற்ற(து) என்னென்(று) உரைக்கேன் நமர்தொடுத்த
எல்லா நிதியும் உடன்விடுப் பான்இமை யோர் இறைஞ்சும்
மல்லார் கழல்அழல் வண்ணர்வண் தில்லை தொழார்கள் அல்லால்
சொல்லா அழற்கடம் இன்றுசென் றார் சிறந்தவரே. .. 1084

அருந்தும் விடம்அணி யாம்மணிகண்டன்மற்(று) அண்டர்க்கெல்லாம்
மருந்தும் அமிர்தமும் ஆகும்முன் னோன்தில்லை வாழ்த்தும்வள்ளல்
திருந்தும் கடன்நெறி செல்லும்இவ் வாறு சிதைக்குமென்றால்
வருந்தும் மடநெஞ்ச மேயென்ன யாம்இனி வாழ்வகையே. .. 1088

ஏர்ப்பின்னை தோள்முன் மணந்தவன் ஏத்த எழில்திகழும்
சீர்ப்பொன்னை வென்ற செறிகழ லோன்தில்லைச் சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னை பொன்னவிழ் முத்த மணலிற் கலந்தகன்றார்
தேர்ப் பின்னைச் சென்றஎன்
நெஞ்(சு)என் கொலாம்இன்று செய்கின்றதே. .. 1092

கானமர் குன்றர் செவியுற வாங்கு கணைதுணையா
மானமர் நோக்கியர் நோக்கென மான்நல் தொடைமடக்கும்
வானவர் வெற்பர்வண் தில்லையின் மன்னை வணங்கலர் போல்
தேனமர் சொல்லிசெல் லார்செல்லல் செல்லல் திருநுதலே. .. 1096

மதுமலர்ச் சோலையும் வாய்மையும் அன்பும் மருவி வெங்கான்
கதுமெனப் போக்கும் நிதியின் அருக்குமுன் னிக்கலுழ்ந்தால்
நொதுமலர் நோக்கமொர் மூன்றுடை யோன்தில்லை நோக்கலர்போல்
இதுமலர்ப் பாவைக்(கு)என் னோவந்த வாறென்பர் ஏந்திழையே. .. 1100

வந்(து)ஆய் பவரைஇல்லாமயில் முட்டை இளையமந்தி
பந்தா(டு) இரும்பொழில் பல்வரை நாடன்பண் போஇனிதே
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்தென் தில்லை தொழார்குழுப்போல்
சிந்தா குலமுற்றப் பற்றின்றி நையும் திருவினர்க்கே. .. 1104

மொய்யென் பதேஇழை கொண்டவன் என்னைத்தன் மொய்கழற்(கு)ஆட்
செய்என் பதேசெய் தவன்தில்லைச் சூழ்கடற் சேர்ப்பர்சொல்லும்
பொய்என்ப தேகருத்தாயின் புரிகுழற் பொற்றொடியாய்
மெய்என்ப(து) ஏதுமற்(று) இல்லைகொலாம்இவ் வியவிடத்தே. .. 1108

மன்செய்த முன்னாள் மொழிவழி யேஅன்ன வாய்மைகண்டும்
என்செய்த நெஞ்சும் நிறையும்நில் லாஎன(து) இன்னுயிரும்
பொன்செய்த மேனியன் தில்லை யுறாரின் பொறைஅரிதாம்
முன்செய்த தீங்குகொல் காலத்து நீர்மைகொல் மொய்குழலே. .. 1112

கருந்தினை ஓம்பக் கடவுள் பராவி நமர்கலிப்பச்
சொரிந்தன கொன்மூச் சுரந்ததன் பேரரு ளால்தொழும்பிற்
பரிந்தெனை யாண்டசிற் றம்பலத் தான்பரங் குன்றில்துன்றி
விரிந்தன காந்தள் வெருவரல் காரென வெள்வளையே. .. 1116

வென்றவர் முப்புரம் சிற்றம் பலத்திற்நின் றாடும்வெள்ளிக்
குன்றவர் குன்றா அருள்தரக் கூடினர் நம்மகன்று
சென்றவர் தூதுகொல் லோஇருந் தேமையும் செல்லல்செப்பா
நின்றவர் தூதுகொல் லோவந்து தோன்றும் நிரைவளையே. .. 1120

வருவன செல்வன தூதுகள் ஏதில வான்புலியூர்
ஒருவனது அன்பரின் இன்பக் கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்தன(து) ஆவிகொண்(டு) ஏகிஎன் நெஞ்சில்தம்மை
இருவின காதலர் ஏதுசெய் வான்இன்(று) இருக்கின்றதே. .. 1124

வேயின மென்தோள் மெலிந்தோளி வாடி விழிபிறிதாய்ப்
பாயின மேகலை பண்டையள் அல்லள் பவளச்செவ்வி
ஆயின ஈசன் அமரர்க்(கு) அமரன்சிற் றம்பலத்தான்
சேயின(து) ஆட்சியில் பட்டன ளாம்இத் திருந்திழையே. .. 1128

கணங்குற்ற கொங்கைகள் சூதுற் றிலசொல் தெளிவுற்றில
குணங்குற்றம் கொள்ளும் பருவமு றாள்குறு காஅசுரர்
நிணங்குற்ற வேல்சிவன் சிற்றம் பலநெஞ் சுறாதவர்போல்
அணங்குற்ற நோய்அறி வுற்றுரை யாடுமின் அன்னையரே. .. 1132

மாட்டியன் றேஎம் வயின்பெரு நாணினி மாக்குடிமா
சூட்டியன் றேநிற்ப(து) ஓடிய வா(று)இவள் உள்ளமெல்லாம்
காட்டியன் றேநின்ற தில்லைத்தொல் லோனைக்கல் லாதவர்போல்
வாட்டியன்(று) ஏர்குழ லார்மொழி யாதன வாய்திறந்தே. .. 1136

குயிலிதன் றேயென்ன லாம்சொல்லி கூறன்சிற் றம்பலத்தான்
இயலிதன் றேயென்ன லாகா இறைவிறற் சேய்கடவும்
மயிலிதன் றேகொடி வாரணம் காண்கவன் சூர்தடிந்த
அயிலிதன் றேயிதன் றேநெல்லில் தோன்றும் அவன்வடிவே. .. 1140

வேலன் புகுந்து வெறியா டுகவெண் மறியறுக்க
காலன் புகுந்(து)அவி யக்கழல் வைத்தெழில் தில்லைநின்ற
மேலன் புகுந்தென்கண் நின்றான் இருந்தவெண் காடனைய
பாலன் புகுந்திப் பரிசினின் நிற்பித்த பண்பினுக்கே. .. 1144

அயர்ந்தும் வெறிமறி ஆவி செகுத்தும் விளர்ப்(பு)அயலார்
பெயர்ந்தும் ஒழியா விடின்என்னை பேசுவ பேர்ந்திருவர்
உயர்ந்தும் பணிந்தும் உணரான(து) அம்பலம் உன்னலரின்
துயர்ந்தும் பிறிதின் ஒழியினென் ஆதும் துறைவனுக்கே. .. 1148

சென்றார் திருத்திய செல்லல்நின் றார்கள் சிதைப்பரென்றால்
நன்றா அழகிதன் றேஇறை தில்லை தொழாரின்நைந்தும்
ஒன்றாம் இவட்கும் மொழிதல்இல் லேன்மொழி யாதும்உய்யேன்
குன்றார் துறைவர்க்(கு) உறுவேன் உரைப்பன் இக் கூர்மறையே. .. 1152

யாயும் தெறுக அயலவர் ஏசுக ஊர்நகுக
நீயும் முனிக நிகழ்ந்தது கூறுவல் என்னுடைய
வாயும் மனமும் பிரியா இறைதில்லை வாழ்த்துநர்போல்
தூயன் நினக்குக் கடுஞ்சூள் தருவன் சுடர்க்குழையே. .. 1156

வண்டலுற் றேம்எங்கண் வந்தொரு தோன்றல் வரிவளையீர்
உண்டலுற் றேமென்று நின்றதோர் போழ்(து)உடை யான்புலியூர்க்
கொண்டலுற்(று) ஏறும் கடல்வர எம்உயிர் கொண்டுதந்து
கண்டலுற்(று) ஏர்நின்ற சேரிச்சென் றான்ஓர் கழலவனே. .. 1160

குடிக்கலர் கூறினும் கூறா வியன்தில்லைக் கூத்தன்தாள்
முடிக்(கு)அல ராக்கும்மொய் பூந்துறை வற்கு முரிபுருவ
வடிக்கலர் வேற்கண்ணி வந்தன சென்றுநம் யாய்அறியும்
படிக்கல ராம்இவை என்நாம் மறைக்கும் பரிசுகளே. .. 1164

விதியுடை யார்உன்க வேரி விலக்கலம் அம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினில் பாய்புனல் யாம் ஒழுகக்
கதியுடை யான்கதிர்த் தோள்நிற்க வேறு கருதுநின்னின்
மதியுண்டை யார்தெய்வ மேயில்லை கொல்இனி வையகத்தே. .. 1168

மனக்களி யாய்இன் றியான்மகிழ் தூங்கத்தன் வார்கழல்கள்
எனக்களி யாநிற்கும் அம்பலத் தோன்இருந் தண்கயிலைச்
சினக்களி யானை கடிந்தார் ஒருவர்செவ் வாய்ப்பசிய
புனக்கிளி யாங்கடி யும்வரைச் சாரற் பொருப்பிடத்தே. .. 1172

இளையாள் இவளைஎன் சொல்லிப் பரவுதும் ஈர்எயிறு
முளையா அளவின் முதுக்குறைந் தாள்முடி சாய்த்திமையோர்
வளையா வழுத்தா வருதிருச் சிற்றம் பலத்துமன்னன்
திளையா வரும்அரு விக்கயி லைப்பயில் செல்வியையே. ... 1176

கள்ளினம் ஆர்த்துண்ணும் வண்கொன்றை யோன்தில்லைக் கார்க்கடல்வாய்ப்
புள்ளினம் ஆர்ப்பப் பொருதிரை யார்ப்பப் புலவர்கள்தம்
வள்ளினம் ஆர்ப்ப மதுகரம் ஆர்ப்ப வலம்புரியின்
வெள்ளினம் ஆர்ப்ப வரும்பெரும் தேரின்று மெல்லியலே. ... 1180

பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரணம் நீடுக தூரியம் ஆர்க்கதொன் மால்அயற்கும்
காரணன் ஏரணி கண்ணுத லோன்கடல் திலலையன்ன
வாரண வும்முலை மன்றலென்(று) ஏங்கும் மணமுரசே. ... 1184

அடற்களி யாவர்க்கும் அன்பர்க்(கு) அளிப்பவன் துன்பஇன்பம்
படக்களி யாவண் டறைபொழில் தில்லைப் பரமன்வெற்பில்
கடக்களி யானை கடிந்தவர்க் கோஅன்றி நின்றவர்க்கோ
விடக்களி யாம்நம் விழுநகர் ஆர்க்கும் வியன்முரசே. ... 1188

என்கடைக் கண்ணினும் யான்பிற ஏத்தா வகையிரங்கித்
தன்கடைக் கண்வைத்த தண்தில்லைச் சங்கரன் தாழ்கயிலைக்
கொன்கடைக் கண்தரும் யானை கடிந்தார் கொணர்ந்திறுத்தார்
முன்கடைக் கண்ணிது காண்வந்து தோன்றும் முழுநிதியே. ... 1192

பிரசம் திகழும் வரைபுரை யானையின் பீடழித்தார்
முரசம் திகழும் முருகியம் நீங்கும் எவர்க்குமுன்னாம்
அர(சு)அம் பலத்துநின்(று) ஆடும் பிரானருள் பெற்றவரின்
புரைசந்த மேகலை யாய்துயர் தீரப் புகுந்துநின்றே. ... 1196

இருந்துதி என்வயின் கொண்டவன் யான்எப் பொழுதும்உன்னும்
மருந்து திசைமுகன் மாற்கரி யோன்தில்லை வாழ்த்தினர்போல்
இருந்து திவண்டன வால்எரி முன்வலம் செய்(து)இடப்பால்
அருந்துதி காணும் அளவும் சிலம்பன் அருந்தழையே. ... 1200

சீரியல் ஆவியும் யாக்கையும் என்ன சிறந்தமையால்
காரியல் வாட்கண்ணி எண்ணக லார்கம லங்கலந்த
வேரியம் சந்தும் வியல்தந் தெனக்கற்பின் நிற்பர்அன்னே
காரியல் கண்டவர்வன் தில்லை வணங்கும்எம் காவலரே. ... 1204

தொண்டினம் மேவும் கடர்க்கழ லோன்தில்லைத் தொல்நகரில்
கண்டின மேவும்இல் நீஅவள் நின்கொழு நன்செழுமெல்
தண்டின மேவுதிண் தோளவன் யானவள் தற்பணிவோள்
வண்டின மேவும் குழலாள் அயல்மன்னும் இவ்அயலே. ... 1208

பொட்டணி யான்நுதல் போயிறும் பொய்போல் இடையெனப்பூண்
இட்டணி யான்தவி சின்மலர் அன்றி மிதிப்பக் கொடான்
மட்டணி வார்குழல் வையான் மலர்வண் டுறுதல் அஞ்சிக்
கட்டணி வார்சடை யோன்தில்லை போலிதன் காதலனே. ... 1212

தெய்வம் பணிகழ லோன்தில்லைச் சிற்றம் பலம்அனையாள்
தெய்வம் பணிந்தறி யாள்என்று நின்று திறைவழங்காத்
தெய்வம் பணியச்சென் றாலும்மன் வந்தன்றிச் சேர்ந்தறியான்
பௌவம் பணிமணி யன்னார் பரி(சு)இன்ன பான்மைகளே. ... 1216

சிற்பம் திகழ்தரு திண்மதில் தில்லைச் சிற்றம்பலத்துப்
பொற்பந்தி யன்ன சடையவன் பூவணம் அன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனும் கடக்கும் படிகடந்தும்
இற்பந்தி வாயன்றி வைகல் செல்லாதவன் ஈர்ங்களிறே. ... 1220

மன்னவன் தெம்முனை மேற்செல்லு மாயினும் மாலரியே(று)
அன்னவன் தேர்புறத்(து) அல்கல்செல் லாது வரகுணனாம்
தென்னவன் ஏத்துசிற்றம் பலம் தான்மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவல்அன் னாளும்மற்(று) ஓர் தெய்வம் முன்னலளே. ... 1224

ஆனந்த வெள்ளத்(து) அழுந்தும்ஓர் ஆருயிர் ஈருருக் கொண்(டு)
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத் தால்ஒக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத்(து) அறைகழ லோன்அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றாதுமுற்றா(து)இவ் வணிநலமே. ... 1228

சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா அளவுசென் றார்அம் பலத்துள்நின்ற
ஒரள வில்லா ஒருவன் இருங்கழல் உன்னினர்போல்
ஏரள வில்லா அளவினர் ஆகுவர் ஏந்திழையே. ... 1232
வீதலுற் றார்தலை மாலையன் தில்லைமிக் கோன்கழற்கே

காதலுற் றார்நன்மை கல்விசெல் வீதரும் என்பதுகொண்டு
ஓதலுற் றார்உற் றுணர்தலுற் றார்செல்லல் மல்லழற்கான்
போதலுற் றார்நின் புணர்முலை யுற்ற புரவலரே. ... 1236

கற்பா மதில் தில்லைச் சிற்றம் பலமது காதல்செய்த
விற்பா விலங்கல்எங் கோனை விரும்பலர் போலஅன்பர்
சொற்பா விரும்பினர் என்னமெல் லோதி செவிப்புறத்துக்
கொற்பா இலங்கிலை வேல்குளித் தாங்குக் குறுகியதே. ... 1240

பிரியா மையும்உயிர் ஒன்றா வதும்பிரி யிற்பெரிதும்
தரியா மையும்ஒருங் கேநின்று சாற்றினர் தையல்மெய்யிற்
பிரியாமை செய்து நின்றோன் தில்லைப் பேரியல் ஊரர்அன்ன
புரியா மையும்இது வேயினி என்னாம் புகல்வதுவே. ... 1244

மூப்பான் இளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்
வீப்பான் வியன்தில்லை யான்அரு ளால்விரி நீர்உலகம்
காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர் கார்கயற்கண்
பூப்பால் நலம்ஒளி ரும்புரி தாழ்குழல் பூங்கொடியே. ... 1248

சிறுகண் பெருங்கைத்திண் கோட்டுக் குழைசெவிச் செம்முகமாத்
தெறுகட் டழியமுன் னுய்யச்செய் தோர்கருப் புச்சிலையோன்
உறுகண் தழலுடை யோன்உறை அம்பலம் உன்னலரின்
துறுகள் புரிகுழ லாய்இது வோஇன்று சூழ்கின்றதே. ... 1252

மிகைதணித் தற்(கு)அரி தாம்இரு வேந்தர்வெம் போர்மிடைந்த
பகைதணித் தற்குப் படர்தலுற் றார்நமர் பல்பிறவித்
தொகைதணித் தற்(கு)என்னை ஆண்டுகொண் டடீன்தில்லைச் சூழ்பொழில்வாய்
முகைதணித் தற்(கு)அரி தாம்புரி தாழ்தரு மொய்குழலே. ... 1256

நெருப்புறு வெண்ணெயும் நீருறும் உப்பு மெனஇங்ஙனே
பொருப்புறு தோகை புலம்புறல் பொய்யன்பர் போக்குமிக்க
விருப்புறு வோரைவின் னோரின் மிகுத்துநன் னார்கழியத்
திருப்புறு சூலத்தி னோன்தில்லை போலும் திருநுதலே. ... 1260

போது குலாய புனைமுடி வேந்தர்தம் போர்முனைமேல்
மாது குலாயமென் னோர்க்கிசென் றார்நமர் வண்புலியூர்க்
காதுகுலாய குழைஎழி லோனைக் கருதலர்போல்
ஏதுகொ லாவிளை கின்ற(து)இன்(று) ஒன்னார் இடுமதிலே. ... 1264

பொன்னி வளைத்த புனல்சூழ் நிலவிப் பொலிபுலியூர்
வன்னி வளைத்த வளர்சடை யோனை வணங்கலர்போல்
துன்னி வளைத்தநம் தோன்றற்குப் பாசறை தோன்றுங் கொலோ
மின்னி வளைத்து விரிநீர் கவரும் வியன்முகிலே. ... 1268
கோவித் திகழ்கிற(கு) ஒன்றின் ஒடுக்கிப் பெடைக் குருகு

பாலித் திரும்பனி பார்ப்பொடு சேவல் பயில்இரவின்
மாலித் தனையறி யாமறை யோன்உறை அம்பலமே
போலித் திருநுத லாட்(கு)என்ன தாங்கொல்என் போதரவே. ... 1272

கருப்பினம் மேவும் பொழில்தில்லை மன்னன்கண் ணார்அருளால்
விருப்பினம் மேவச்சென் றார்க்கும்சென்(று) அல்குங்கொல் வீழ்பனிவாய்
நெருப்பினம் மேய்நடு மால்எழில் தோன்றச்சென் றாங்குநின்ற
பொருப்பினம் ஏறித் தமியரைப் பார்க்கும் புயலினமே. ... 1276

கற்றின வீழ்பனி தூங்கத் துவண்டு துயர்களன்று
பெற்றவ ளேஎனைப் பெற்றாள் பெடைசிற கான்ஒடுக்கிப்
புற்றில வாளர வன்தில்லைப் புள்ளும்தம் பிள்ளைதழீஇ
மற்றினம் சூழ்ந்து துயிலப் பெறும்இம் மயங்கிருளே. ... 1280

புரமன்(று) அயரப் பொருப்புவில் ஏந்திப் புத் தேளிர்நாப்பண்
சிரம்அன்(று) அயனைச்செற் றோன்தில்லைச் சிற்றம்பலம்அனையாள்
பரம்அன்(று) இரும்பனி பாரித்த வாபரந்(து) எங்கும்வையம்
சரமின்றி வான்தரு மேலாக்கும் மிக்க தமியருக்கே. ... 1284

வாழும் படியன்றும் கண்டிலம் வாழிஇம் மாம்பொழில்தேன்
சூழும் முகச்சுற்றும் பற்றின வால்தொண்டை யங்கனிவாய்
யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பலம் ஆதரியாக்
கூழின் மலிமனம் போன்(று)இருளா நின்ற கோகிலமே. ... 1288

பூண்பதென் றேகொண்ட பரம்பன் புலியூர் அரன் மிடற்றின்
மாண்பதென் றேஎன வானின் மலரும் மணந்தவர்தேர்
காண்பதன் றேயின்று நாளையிங் கேவரக் கார்மலர்த்தேன்
பாண்பதன் தேர்குழ லாய்எழில் வாய்த்த பனிமுகிலே. ... 1292

தெளிதரல் காரெனச் சீர்அனம் சிற்றம் பலத்தடியேன்
களிதரக் கார்மிடற் றோன்நட மாடக்கண் ணார்முழவம்
துளிதரல் காரென ஆர்த்தன ஆர்ப்பத்தொக்(கு) உன்குழல்போன்(று)
அளிதரக் காந்தளும் பாந்தளைப் பாரித்(து) அலர்ந்தனவே. ... 1296

தேன்திக்(கு) இலங்கு கழல்அழல் வண்ணன்சிற் றம்பலத்(து)எங்
கோன்திக்(கு) இலங்குதிண் தோள் கொண்டல் கண்டன் குழைஎழில்நாண்
போன்(று)இக் கடிமலர்க் காந்தளும் போந்தவன் கையனல் போல்
தோன்றிக் கடிமல ரும்பொய்ம்மை யோமெய்யில் தோன்றுவதே. ... 13000

திருமால் அறியாச் செறிகழல் தில்லைச் சிற்றம்பலத்(து)எம்
கருமால் விடையடை யோன்கண்டம் போற்கொண்டல் எண்டிசையும்
வருமால் உடன்மன் பொருந்தல் திருந்த மணந்தவர்தேர்
பொருமால் அயிற்கண்நல் லாய்இன்று தோன்றும்நம் பொன்னாகர்க்கே. ... 1304
புயலோங்(கு) அலர்சடை ஏற்றவன் சிற்றம் பலம்புகழும்

மயலோங்கு இருங்களி யானை வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங்(கு) இருஞ்சிலை கொண்டுமன் கோபமும் காட்டிவரும்
செயலோங்(கு) எயில்எரி செய்தபின் இன்றோர் திருமுகமே. ... 1308

சிறப்பின் திகழ்சிவன் சிற்றம் பலஞ்சென்று சேர்ந்தவர்தம்
பிறப்பின் துனைந்து பெருகுக தேர்பிறங் கும்ஒளியார்
நிறப்பொன் புரிசை மறுகினில் துன்னி மடநடைப்புள்
இறப்பின் துயின்றுமுற் றத்(து)இரை தேரும் எழில் நகர்க்கே. ... 1312

அருந்(து)ஏர் அழிந்தனம் ஆலம்என்(று) ஓல மிடும்இமையோர்
மருந்(து)ஏர் அணிஅம் பலத்தோன் மலர்த்தாள் வணங்கலர்போல்
திருந்(து)ஏர் அழிந்து பழங்கண் தரும்செல்வி சீர்நகர்(கு)என்
வரும்தேர் இதன்முன் வழங்கேல் முழங்கேல் வளமுகிலே. ... 1316

பணிவார் குழைஎழி லோன்தில்லைச் சிற்றம் பலம்அனைய
மணிவார் குழல்மட மாதே பொலிகநம் மன்னர்முன்னாப்
பணிவார் திறையும் பகைத்தவர் சின்னமுரம் கொண்டுவண்தேர்
அணிவார் முரசினொ(டு) ஆலிக்கும் மாவோ(டு) அணுகினரே. ... 1320

கருங்குவ ளைக்கடி மாமலர் முத்தங் கலந்திலங்க
நெருங்கு வளைக்கிள்ளை நீங்கற் றிலள்நின்று நான்முகனோ(டு)
ஒருங்கு வளைக்கரத் தான் உண ராதவன் தில்லையப்பாய்
மருங்கு வளைத்துமன் பாசறை நீடிய வைகலுமே. ... 1324

முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியுமெனப்
பனிவருங் கன்பர மன்திருச் சிற்றம் பலமனையாய்
துனிவரு நீர்மையி(து) என்னென்று தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோஎன்று வந்திக்கும் நன்னுதலே. ... 1328

வறியார் இருமை அறியார் எனமன்னும் மாநிதிக்கு
நெறியார் அருஞ்சுரம் செல்லலுற் றார்நமர் நீண்டிருவர்
அறியா அளவுநின் றோன்தில்லைச் சிற்றம்பலம் அனைய
செறிவார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் திருநுதலே. ... 1332

சிறுவாள் உகிருற்(று) உறாமுன்னம் சின்னப் படுங்குவளைக்(கு)
எறிவாள் கழித்தனள் தோழி எழுதிற் கரப்பதற்கே
அறிவாள் ஒழுகுவ(து) அஞ்சனம் அம்பல வர்ப்பணியார்
குறியாழ் நெறிசெல்வர் அன்பரென்(று) அம்ம கொடியவளே. ... 1336

வானக் கடிமதில் தில்லைஎம் கூத்தனை ஏத்தலர்போல்
கானக் கடஞ்செல்வர் காதலர் என்னக் கதிர்முலைகள்
மானக் கனகம் தரும்மலர்க் கண்கள்முத் தம்வளர்க்கும்
தேனக்க தார்மன்னன் என்னோ இனிச் சென்று தேர்பொருளே. ... 1340
கருள்தரு செஞ்சடை வெண்சுடர் அம்பல வன்மலயத்(து)

இருள்தரு பூம்பொழில் இன்னுயிர் போலக் கலந்திசைத்த
அருள்தரும் இன்சொற்கள் அத்தனை யும்மறந்து அத்தம்சென்றோ
பொருள்தரக் கிற்கின் றதுவினை யேற்குப் புரவலரே. ... 1344

மூவர்நின்(று) ஏத்த முதலவன் ஆடமுப் பத்துமுல்லைத்
தேவர்சென்(று) ஏத்தும் சிவன்தில்லை அம்பலம் சீர்வழுத்தாப்
பாவர்சென்(று) அல்கும் நரகம் அனைய புனையழற்கான்
போவர்நம் காதலர் என்நாம் உரைப்பது பூங்கொடியே. ... 1348

தென்மாத் திசைவசை தீர்தரத் தில்லைச்சிற் றம்பலத்துள்
என்மாத் தலைக்கழல் வைத்தெரி யாடும் இறைதிகழும்
பொன்மாப் புரிசைப் பொழில்திருப் பூவணம் அன்னபொன்னே
வன்மாக் களிற்றொடு சென்றனர் இன்றுநம் மன்னவரே. ... 1352

ஆழியன்(று) ஈர்அடி யும்இலன் பாகன்முக் கண்தில்லையோன்
ஊழியன் றாதன நான்கும்ஐம் பூதமும் ஆறொடுங்கும்
ஏழியன் றாழ்கட லும்எண் திசையும் திரிந்திளைத்து
வாழியன் றோஅருக் கன்பெருந் தேர்வந்து வைகுவதே. ... 1356

பிரியார் எனஇகழ்ந் தேன்முன்னம் யான்பின்னை எற்பிரியின்
தரியாள் எனஇகழ்ந் தார்மன்னர் தாந்தக்கன் வேள்விமிக்க
எரியார் எழில்அழிக் கும்எழில் அம்பலத் தோன்எவர்க்கும்
அரியான் அருளிலர் போலன்ன என்னை அழிவித்தவே. ... 1360

சேணும் திகழ்மதில் சிற்றம் பலவன்தென் னீர்க் கடல்நஞ்(சு)
ஊணும் திருத்தும் ஒருவன் திருத்தும் உலகின்னல்லாம்
காணும் திசைதொறும் கார்க்கய லும்செங் கனியடுபைம்
பூணும் புணர்முலை யுங்கொண்டு தோன்றுமொர் பூங்கொடியே. ... 1364

பொன்னணி ஈட்டிய ஒட்டரும் நெஞ்சம்இப் பொங்குவெங்கா
னின்னணி நிற்கும்இ(து) என்னென்ப தேஇமை யோர்இறைஞ்சும்
மன்னணி தில்லை வளநகர் அன்னஅன் னந் நடையாள்
மின்னணி நுண்ணிடைக் கோபொருட் கோநீ விரைகின்றதே. ... 1368

நாய்வயின் உள்ள குணமும்இல் லேனைநற் றொண்டுகொண்ட
தீவயின் மேனியன் சிற்றம் பலமன்ன சின்மொழியைப்
பேய்வயி னும்அரி தாகும் பிரி(வு)எளி தாக்குவித்துச்
சேய்வயின் போந்தநெஞ் சேஅஞ்சத் தக்க(துஐஉன் சிக்கெனவே. ... 1372

தீமே வியநிருத் தன்திருச் சிற்றம் பலம்அனைய
பூமே வியபொன்னை விட்டுப்பொன் தேடியிப் பொங்குவெங்கான்
நாமே நடக்க ஒழிந்தனம் யாம்நெஞ்சம் வஞ்சியன்ன
வாமே கலையைவிட் டடீபொருள் தேர்ந்தெம்மை வாழ்விப்பதே. ... 1376
தென்னீர் அணிசிவன் சிற்றம் பலம்சிந்தி யாதவரின்

பண்ணீர் மொழியிவ ளைப்பையுள் எய்தப் பனித்தடங்கண்
உண்ணீர் உகஒளி வாடிய நீடுசென் றார்சென்றநாள்
எண்ணீர் மையின்நிலனுங் குழி யும்விரல் இட்டறவே. ... 1380

சுற்றம் பலம்இன்மை காட்டித்தன் தொல்கழல் தந்ததொல்லோன்
சிற்றம் பலமனை யாள்பர மன்றுதின் கோட்டின்வண்ணப்
புற்றங்(கு) உதர்த்துநல் நாகொடும் பொன்னார் மணிபுலம்பக்
கொற்றம் மருவுகொல் ஏறுசெல்லா நின்ற கூர்ஞ்செக்கரே. ... 1384

கண்ணுழை யாதுவிண் மேகம் கலந்து கணமயில்தொக்(கு)
எண்ணுழை யாத்தழை கோலிநின்(று) ஆலும் இனமலர்வாய்
மண்ணுழை யாவும் அறிதில்லை மன்னன(து) இன்னருள்போல்
பண்ணுழை யாமொழி யாள்என்ன ளாங்கொல்மன் பாவியற்கே. ... 1388

அற்படு காட்டில்நின்(று) ஆடிசிற் றம்பலத் தான்மிடற்றின்
முற்படு நீள்முகில் என்னின்முன் னேல்முது வோர்குழுமி
விற்படு வாணுத லாள்செல்லல் தீர்ப்பான் விரைமலர்தூய்
நெற்படு வான்பலி செய்(து)அய ராநிற்கும் நீள்நகர்க்கே. ... 1392

பாவியை வெல்லும் பரிசில்லை யேமுகில் பாவையஞ்சீர்
ஆவியை வெல்லக் கறுக்கின்ற போழ்தத்தின் அம்பலத்துக்
காவியை வெல்லும் மிடற்றோன் அருளிற் கதுமெனப் போய்
மேவிய மாநிதி யோ(டு)அன்பர் தேர்வந்து மேவினதே. ... 1396

யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பலத் தான்அமைத்த
ஊழின் வலியதொன்(று) என்னை ஒளிமே கலையுகளும்
வீழும் வரிவளை மெல்லியல் ஆவிசெல் லாதமுன்ன
சூழும் தொகுநிதி யோ(டு)அன்பர் தேர்வந்து தோன்றியதே. ... 1400

மயில் மன்னு சாயல்இம் மானைப் பிரிந்து பொருள்வளர்ப்பான்
வெயில் மன்னு வெஞ்சுரம் சென்றதெல்லாம் விடை யோன்புலியூர்க்
குயில் மன்னு சொல்லிமென் கொங்கைஎன் அங்கத் திடைகுளிப்பத்
துயில் மன்னு பூவணை மேலணை யாமுன் துவள் உற்றதே. ... 1404

உடுத்தணி வாளர வன்தில்லை யூரன் வரஒருங்கே
எடுத்தணி கையே றினவளை ஆர்ப்ப இளமயிலேர்
கடுத்தணி காமர் கரும்புரு வச்சிலை கண்மலர் அம்பு
அடுத்தணி வாள்இளை யோர்சுற்றும் பற்றினர் மாதிரமே. ... 1408

கரும்புறு கொன்றையன் தொல்புலி யூர்சுருங் கும்மருங்குல்
பெரும்பொறை யாட்டியை யென்இன்று பேசுவ பேரொலிநீர்க்
கரும்புறை யுரன் கலந்தகன் றானென்று கண்மணியும்
அரும்பொறை யாகும்என் ஆவியும் தேய்வுற்(று) அழிகின்றதே. ... 1412

அப்புற்ற சென்னியன் தில்லை உறாரின் அவர்உறுநோய்

ஒப்புற்று எழில்நலம் ஊரன் கவரஉள் ளும்புறம்பும்
வெப்புற்று வெய்துயிர்ப் புற்றத்தம் மெல்லணை யேதுணையாச்
செப்புற்ற கொங்கையர் யாவர்கொல் ஆருயிர் தேய்பவரே. ... 1416

தேவா சுரர்இறைஞ் சும்கழ லோன்தில்லை சேரலர்போல்
ஆவா கனவும் இழந்தேன் நனவென்(று) அமளியின்மேல்
பூவார் அகலம்வந்(து) ஊரன் தரப்புலம் பாய்நலம்பாய்
பாவாய் தழுவிற் றிலேன் விழித் தேன்அரும் பாவியனே. ... 1420

செய்ம்முக நீல மலர்தில்லைச் சிற்றம் பலத்தரற்குக்
கைம்முகங் கூம்பக் கழல்பணி யாரிற் கலந்தவர்க்குப்
பொய்ம்முகங் காட்டிக் கரத்தல் பொருத்தம்அன்(று) என்றில்லையே
நெய்ம்முக மாந்தி இருள்முகங் கீழும் நெடுஞ்சுடரே. ... 1424

பூங்குவ ளைப்பொலி மாலையும் ஊரன்பொற் றோளிணையும்
ஆங்கு வளைத்துவைத் தாரேனும் கொள்கநள் ளார் அரணம்
தீங்கு வளைத்தவில் லோன்தில்லைச் சிற்றம் பலத்தயல்வாய்
ஓங்கு வளைக்கரத் தார்க்கடுத் தோம்மன் உறாவரையே. ... 1428

தவஞ்செய் திலாதவெந் தீவினை யேம்புன்மைத் தன்மைக்(கு)எள்ளா(து)
எவம்செய்து நின்(று)இனி இன்(று)உனை நோவ(து)என் அத்தன்முத்தன்
சிவன்செய்த சீரரு ளார்தில்லை யூரநின் சேயிழையார்
நவம்செய்த புல்லங்கள் மாட்டேம் தொடல்விடு நற்கலையே. ... 1432

தணியுறப் பொங்கும்இக் கொங்கைகள் தாங்கித் தளர்மருங்குல்
பிணியுறப் பேதைசென்(று) இன்றெய்து மால்அர வும்பிறையும்
அணியுறக் கொண்டவன் தில்லைத்தொல் லாயநல் லார்கண்முன்னே
பணியுறத் தோன்றும் நுடங்கிடை யார்கள் பயின்மனைக்கே. ... 1436

இரவணை யும்மதி யேர்நுத லார்நுதிக் கோலஞ் செய்து
குரவணை யுங்குழல் இங்(கு)இவ ளால்இக் குறியறிவித்(து)
அரவணை யும்சடை யோன்தில்லை யூரனை ஆங்கொருத்தி
தரஅணை யும்பரி சாயின வாறுநம் தன்மைகளே. ... 1440

சிவந்தபொன் மேனி மணிதிருச் சிற்றம் பலமுடையான்
சிவந்தஅம் தாளணி ஊரற்(கு) உலகிய லாறுரைப்பான்
சிவந்தபைம் போதும் அம் செம்மலர்ப் பட்டும்கட் டார்முலைமேல்
சிவந்தஅச் சாந்தமும் தோன்றின வந்து திருமனைக்கே. ... 1444

குராப்பயில் கூழை இவளின்மிக்(கு) அம்பலத் தான்குழையாம்
அராப்பயில் நுண்ணிடை யார்அடங் கார்எவ ரேயினிப்பண்(டு)
இராப்பகல் நின்றுணங்(கு) ஈர்ங்கடை யித்துணைப் போழ்திற்சென்று
கராப்பயில் பூம்புன லூரன் புகும்இக் கடிமனைக்கே. ... 1448
வந்தான் வயலணி ஊரன் எனச்சின வாள்மலர்க்கண்

செந்தா மரைச்செவ்வி சென்றசிற்றம்பல வன்அருளான்
முந்தா யினவியன்நோக்கெதிர் நோக்க முகமடுவின்
பைந்தாள் குவளைகள் பூத்திருள் சூழ்ந்து பயின்றனவே. ... 1452

வில்லிகைப் போதின் விரும்பா அரும்பா வியர்கள் அன்பில்
செல்லிகைப் போதின் எரியுடை யோன்தில்லை அம்பலம்சூழ்
மல்லிகைப் போதின்வெண் சங்கம்வண்(டு) ஊதவிண் தோய்பிறையோ(டு)
எல்லிகைப் போதியல் வேல்வயல் ஊரற்(கு) எதிர் கொண்டதே. ... 1456

புலவித் திரைபொரச் சீறடிப் பூங்கலம் சென்னி உய்ப்பக்
கலவிக்கடலுள் கலிங்கஞ் சென்(று) எய்திக் கதிர்கொள்முத்தம்
நிலவி நிறைமது ஆர்ந்(து)அம் பலத்துநின்றோன் அருள்போன்(று)
உலவிய லாத்தனம் சென்றெய்தல் ஆயின ஊரனுக்கே. ... 1460

செவ்வாய் துடிப்பக்கருங்கன் பிறழச்சிற் றம்பலத்(து)எம்
மொய்வார் சடையோன் அருளின் முயங்கி மயங்குகின்றாள்
வெவ்வாய் உயிர்ப்பொடு விம்மிக் கலுழ்ந்து புலந்துறைந்தாள்
இவ்வா(று) அருள்பிறர்க்(கு) ஆகு மென நினைந்து இன்னகையே. ... 1464

மலரைப் பொறாஅடி மானும் தமியன்மன் னன்ஒருவன்
பலரைப் பொறா(து)என்(று) இழிந்துநின் றாள்பள்ளி காமன்எய்த
அலரைப் பொறா(து)அன்(று) அழல்விழித் தோன்அம்பலம் வணங்காக்
கலரைப் பொறாச்சிறி யாள்என்னை கொல்லோ கருதியதே. ... 1468

வில்லைப் பொலிநுதல் வேற்பொலி கண்ணி மெலிவறிந்து
வல்லைப் பொலிவொடு வந்தமை யான்நின்று வான்வழுத்தும்
தில்லைப் பொலிசிவன் சிற்றம்பலம்சிந்தை செய்பவரின்
மல்லைப் பொலிவய லூரன்மெய்யேதக்க வாய்மையனே. ... 1472

சூன்முதிர் துள்ளு நடைப்பெடைக்(கு) இல்துணைச் சேவல் செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூக்குதர் செம்ம லூரன் திண்தோள்
மான்முதிர் நோக்கின்நல் லார்மகிழத் தில்லை யான் அருளே
போன்முதிர் பொய்கையில் பாய்ந்தது வாய்ந்த புதுப்புனலே. ... 1476

சேயே எனமன்னு தீம்புன லூரன்திண் தோள்இணைகள்
தோயீர் புணர்தவம் தொன்மைசெய் தீர்சுடர் கின்றகோலம்
தீயே எனமன்னு சிற்றம்பலவர்தில்லைந்நகர் வாய்
வீயே எனஅடி யீர்நெடுந் தேர்வந்து மேவினதே. ... 1480

அரமங் கையரென வந்து விழாப்புகும் அவ்வவர்வான்
அரமங் கையரென வந்தனு கும்அவள் அன்(று)உகிரால்
சிரம்அங்(கு) அயனைச் செற்றோன் தில்லைச் சிற்றம் பலம்வழுத்தாப்
புரமங் கையரின்நை யாதுஐய காத்துநம் பொற்பரையே. ... 1484
கனலூர் கணைதுணை யூர்கெடச் செற்றசிற் றம்பலத்தெம்

அனலூர் சடையோன் அருள்பெற் றவரின் அமரப்புல்லும்
மினலூர் நகையவர் தம்பால் அருள்விலக் காவிடின்யான்
புனலூ ரனைப் பிரி யும்புன லூர்கணப் பூங்கொடியே. ... 1488

இறுமாப்(பு) ஒழியும்அன் றேதங்கை தோன்றின்என் எங்கையங்கைச்
சிறுமான் தரித்தசிற் றம்பலத் தான்தில்லை யூரன்திண்தோள்
பெறு மாத் தொடும்தன்ன பேரணுக் குப்பெற்ற பெற்றியனோ(டு)
இறுமாப்(பு) ஒழிய இறுமாப்(பு) ஒழிந்த இணைமுலையே. ... 1492

வேயாது செப்பின் அடைத்துத் தமிவைகும் வீயன்அன்ன
தீயாடி சிற்றம் பலமனை யாள்தில்லை யூரனுக்கின்(று)
ஏயாப் பழியென நாணியென் கண்ணிங்ங னேமறைத்தாள்
யாயாம் இயல்பிவள் கற்புநற் பால இயல்புகளே. ... 1496

விறலியும் பாணனும் வேந்தற்குத் தில்லை இறைஅமைத்த
திறலியல் யாழ்கொண்டு வந்துநின் றார்சென் றிராத்திசைபோம்
பறலியல் வாவல் பகலுறை மாமரம் போலும்மன்னோ
அறலியல் கூழைநல் லாய் தமியோமை யறிந்திலரே. ... 1500

திக்கின் இலங்குதன் தோள்இறை தில்லைச்சிற் றம்பலத்துக்
கொக்கின் இறக(து) அணிந்துநின் றாடிதென் கூடலன்ன
அக்கின் நகையிவள் நைய அயல்வயின் நல்குதலால்
தக்கின் றிருந்ததிலன் நின்றசெவ்வேல் எம் தனிவள்ளலே. ... 1504

அன்புடை நெஞ்சத்து இவள்பே துற அம் பலத்தடியார்
என்பிடை வந்(து)அமிழ்(து) ஊறநின்(று) ஆடி இருஞ்சுழியல்
தன்பெடை நையத் தகவழிந்(து) அன்னம் சலஞ்சலத்தின்
வன்பெடை மேல்துயி லும்வய லூரன் வரம்பிலனே. ... 1508

அஞ்சார் புரஞ்செற்ற சிற்றம் பலவர்அந் தண்கயிலை
மஞ்சார் புனத்தன்று மாந்தழை யேந்திவந் தார்அவரென்
நெஞ்சார் விலக்கினும் நீங்கார் நனவு கனவும்உண்டேல்
பஞ்சார் அமளிப் பிரிதலுண் டீஎம் பயோதரமே. ... 1512

தெள்ளம் புனற்கங்கை தங்கும் சடையன்சிற் றம்பலத்தான்
கள்ளம் புகுநெஞ்சர் காணா இறையுறை காழியன்னாள்
உள்ளம் புகும்ஒரு காற்பிரி யாதுள்ளி உள்ளுதொறும்
பள்ளம் புகும்புனல் போன்(று)அகத் தேவரும் பான்மையளே. ... 1516

தேன்வண்(டு) உறைதரு கொன்றையன் சிற்றம்பலம் வழுத்தும்
வான்வள் துறைதரு வாய்மையன் மன்னு குதலை யின்வா
யான்வள் துறைதரு மால்அமு தன்னவன் வந்தணையான்
நான்வண்(டு) உறைதரு கொங்கைஎவ் வாறுகொல் நண்ணுவதே. ... 1520
கயல்வந்த கண்ணியர் கண்ணிணை யால்மிகு காதரத்தால்

மயல்வந்த வாட்டம் அகற்றா விரதம்என் மாமதியின்
அயல்வந்த ஆடர(வு) ஆடவைத் தோன்அம் பலம்நிலவு
புயல்வந்த மாமதில் தில்லைநன் னாட்டுப் பொலிபவரே. ... 1524

கூற்றா யினசின ஆளியென் னீர்கன்கள் கோள்இழித்தால்
போல்தான் செறியிருள் பொக்கம்எண் ணீர்கன்(று) அகன்றபுனிற்(று)
ஈற்றா வெனநீர் வருவது பண்(டு)இன்(று)எம் ஈசர்தில்லைத்
தேற்றார் கொடிநெடுவீதியில் போதிர்அத் தேர்மிசையே. ... 1528

வியந்தலை நீர்வையம் மெய்யே இறைஞ்சவின் தோய்குடைக்கீழ்
வயந்தலை கூர்ந்தொன்றும் வாய்திற வார்வந்த வாளரக்கன்
புயந்தலை தீரப் புலியூர் அரன்இருக் கும்பொருப்பிற்
கயந்தலை யானை கடிந்த விருந்தினர் கார்மயிலே. ... 1532

தேவியங் கன்திகழ் மேனியன் சிற்றம் பலத்தெழுதும்
ஓவியம் கண்டன்ன ஒண்ணுத லாள்தனக்(கு) ஒகையுய்ப்பான்
மேவியம் கண்டனை யோவந் தனன்என வெய்துயிர்த்துக்
காவியம் கண்கழு நீர்ச்செவ்வி வெளவுதல் கற்றனவே. ... 1536

உடைமணி கட்டிச் சிறுதேர் உருட்டி உலாத்தரும்இந்
நடைமணி யைத்தந்த பின்னர்முன் நான்முகன் மால்அறியா
விடைமணி கண்டர்வன் தில்லைமென் தோகையன் னார்கண்முன்நம்
கடைமணி வாள்நகை யாய்இன்று கண்டனர் காதலரே. ... 1540

மைகொண்ட கண்டர் வயல்கொண்ட தில்லைமல்(கு) ஊரர்நின்வாய்
மெய்கொண்ட அன்பினர் என்பதென் விள்ளா அருள்பெரியர்
வைகொண்ட ஊசிகொல் சேரியில் விற்றெம்இல் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை ஆத்தின்னி போந்ததுவே. ... 1544

கொல்லாண் டிலங்கு மழுப்படை யோன்குளிர் தில்லையன்னாய்
வில்லாண் டிலங்கு புருவம் நெரியச்செல் வாய்துடிப்பக்
கல்லாண்(டு) எடேல்கருங் கண்சிவப் பாற்று கறுப்பதன்று
பல்லாண்(டு) அடியேன் அடிவலம் கொள்வன் பனிமொழியே. ... 1548

மத்தக் கரியுரி யோன்தில்லை யூரன் வரவெனலும்
தத்தைக் கிளவி முகத்தா மரைத்தழல் வேல்மிளிர்ந்து
முத்தம் பயக்கும் கழுநீர் விருந்தொடென் னாதமுன்னம்
இந்தக் கருங்குவ ளைச் செவ்வி யோடிக் கெழுமினவே. ... 1552

கவலங்கொள் பேய்த்தொகை பாய்தரக் காட்டிடை ஆட்டுவந்த
தவலங்கிலாச்சிவன் தில்லையன் னாய்தழு விம்முழுவிச்
கவலங் கிருந்தநம் தோன்றல் துணையெனத் தோன்றுதலால்
அவலங் களைந்து பணிசெயற் பாலை அரசனுக்கே. ... 1556
சேல்தான் திகழ்வயல் சிற்றம் பலவர்தில் லைநகர்வாய்

வேல்தான் திகழ்கன் இளையார் வெகுள்வர்மெய்ப் பாலன்செய்த
பால்தான் திகழும் பரிசினம் மேவும் படி(று)உவவேம்
கால்தான் தொடல்தொட ரேல்விடு தீண்டல் எம் கைத்தலமே. ... 1560

செந்தார் நறுங்கொன்றைச் சிற்றம் பலவர்தில் லைநகரோர்
பந்தார் விரலியைப் பாய்புன லாட்டிமன் பாவி எற்கு
வந்தார் பரிசும் அன் றாய்நிற்கும் ஆறென் வளமனையில்
கொந்தார் தடந்தோள் விடங்கால் அயிற்படைக் கொற்றவரே. ... 1564

மின்துன் னியசெஞ் சடைவெண் மதியன் விதியுடையோர்
சென்றுன் னிய கழற் சிற்றம் பலவன்தென்னம் பொதியில்
நன்றும் சிறியவர் இல்எம(து) இல்லம்நல் லூரமன்னோ
இன்றுன் திருவருள் இத்துணை சாலுமன் எங்களுக்கே. ... 1568

செழுமிய மாளிகைச் சிற்றம் பலவர்சென்(று) அன்பர்சிந்தைக்
கழுமிய கூத்தர் கடிபொழில் ஏழிமை வாழியரோ
விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுக்குடியீர்
வழுமிய அல்லகொல் லோஇன்ன வாறு விரும்புவதே. ... 1572

திருந்தேன் உயநின்ற சிற்றம் பலவர்தென் னம்பொதியில்
இருந்தேன் உயவந்(து) இணைமலர்க் கண்ணின்இன் நோக்கருளிப்
பெருந்தேன் எனநெஞ் சுகப்பிடித்(து) ஆங்கு நம் பெண்ணமிழ்தம்
வருந்தேல் அதுவன்(று) இதுவோ வருவதோர் வஞ்சனையே. ... 1576

இயல்மன்னும் அன்புதந் தார்க்(கு)என் நிலைஇமை யோர்இறைஞ்சும்
செயல்மன்னும் சீர்க்கழல் சிற்றம் பலவர்தென் னம்பொதியில்
புயல்மன்னு குன்றில் பொருவேல் துணையாப்பொம் மென்இருள்வாய்
அயல்மன்னும் யானை துரந்(து)அரி தேரும் அதரகத்தே. ... 1580

கதிர்த்த நகைமன்னும் சிற்றவ்வை மார்களைக் கண்பிழைப்பித்(து)
எதிர்த்(து)எங்கு நின்(று)எப் பரிசளித் தான்இமை யோர்இறைஞ்சும்
மதுத்தங் கியகொன்றை வார்சடை ஈசர்வண் தில்லைநல்லார்
பொதுத்தம்ப லங்கொணர்ந் தோபுதல்வர் எம்மைப் பூசிப்பதே. ... 1584

சிலைமலி வாணுதல் எங்கைய(து) ஆகம் எனச் செழும்பூண்
மலைமலி மார்பின் உதைப்பத்தந் தான்தலை மன்னர்தில்லை
உலைமலி வேற்படை ஊரனின் கள்வர்இல் என்ன உன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே. ... 1588

ஆறூர் சடைமுடி அம்பலத்(து) அண்டர்அண்டம்பெறினும்
மாறூர் மழலிடை யாய்கன் டிலம்வன் கதிர்வெதுப்பு
நீறூர் கொடிநெறி சென்றிச் செறிமென் முலைநெருங்கச்
சீறூர் மரையத ளில்தங்கு கங்குற் சிறுதுயிலே. .. 1592

ஐயுர வாய்நம் அகன்கடைக் கண்டுவண் தேர் உருட்டும்
மையுறு வாட்கண் மழவைத் தழுவமற்(று) உன்மகனே
மெய்யுற வாம்இதுன் இல்லே வருகென வெள்கிச்சென்றாள்
கையுறு மான்மறி யோன்புலி யூரன்ன காரிகையே. ... 1596

காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை பாணர்ஒக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்தம் சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க்(கு) ஊரன்மற்(று) யாவர்க்கும் ஊதியமே. ... 1600

திருவாசகத்தில் மாணிக்க வாசகப் பெருமான்

எடுத்தாண்டுள்ள உவமைகள். (உவம உருபு வெளிப்பட் தோன்றும் வகையான உவமைகள்)

1. சிவபுராணம்
வரி46 - கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போல

2. கீர்த்தித்திரு அகவல் வரி 142 - கணிதரு செவ்வாய்

3. திரு அண்டப்பகுதி

வரி 115 - பூவினில் நாற்றம் போன்று
162-தடக்கையின் நெல்லிக்கனி
178- கன்னல் கனிதேற் களிறு என

4. போற்றித்திரு அகவல்

வரி 60 - தழல் அது கண்ட மெழுகது போல
65 - பசுமரத்தாணி அறைந்தால் போல
73 - கற்றாமனம் எனக் கதறியும் பதறியும்
96 - மின் ஆர் உருவ விகிர்தா
135 - மான்நேர் நோக்கி மணாளா
184 - பஞ்சு ஏர் அடியாள் பங்கா

5. திருச்சதகம்

பாடல் வரி
11-1 - உன் அடியார் போல்
19-2 - பானல் ஆர் கண்ணியர்
(26-4- செந்தாமரைக் காடு அனைய மேனி)
21-2 - பள்ளம் தாழ் உறு புனிலில்
22-2 - இரும்பின் பாவை அனைய நான்
27-2 - கனியை நேர் துவர் வாயார்
29-4 - கனியை நேர் தவர் வாயார்.
29-4 - செச்சை மாமலர் புரையும் மேனி
38-3 - மான் அன நோக்கி தன் கூறன்.
40-2 - மான் நிலாவிய நோக்கியர்
மத்து இரு தயிராகி
41-1- இரு கை யானையை ஒத்து
46-4- எள்ளும் எண்ணெயும் போல
48-4- கல் வகை மனம்

53-4- கண்கெட்ட ஊர் ஏறு ஆய்
55-1- மான்நேர்நோக்கி உமையாற்
72-4- கண்கள் தாரை ஆறு அதுஆக
80-2- கருப்பு மட்டு வாய் மடுத்து
87-3- ஊர் ஆ மிலைக்க, குருட்டு ஆ மிலைத்தாங்கு
88-1- அழல் சேர்ந்த மெழுகே அன்னார்
88-2-பொன்னார் கழல்
89-3- திணி ஆர் மூங்கில் அனையேன்
92-2- மழக்கை இலங்கு பொற்கிண்ணம் என்று
96-4- தாம் வளர்த்தது ஓர் நச்சு மாமரம்

6. நீத்தல் விண்ணப்பம்

3 - 1 - ஆற்றங்கரை மரமாய் வேர் உறுவேனை
5 - 1 - செழிகின்ற தீப்புகு விட்டிலின் சில் மொழியார்
9-1- இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து
13-1-கடலினுள் நாய் நக்கி ஆங்கு
14-1-வெள்ளத்துள் நா வற்றி ஆங்கு
16-2/4 - மின்னை ஒப்பாய், அன்னை ஒப்பாய்
எனக்கு அத்தன் ஒப்பாய்
20 -1 - கொம்பர் இல்லாக் கொடி போல
21- 1 - ஆனை வெம்போரில் குறுந்தூறு என
24-4- நெய்க்குடம் தன்னை மொய்க்கும் எறும்பு எனவே
25-1-எறும்பிடை நாங்கழ் என
26-1-பெருநீர் அற, சிறுமீன் துவண்டாங்கு
27-1-மணி ஏர் நகையார்
29-4-தயிரில் பொரு மத்துறவே
30-1-மத்து உறு தண் தயிரின்
32-1- அடல் கரி போல்
34-2- இனிய மது மதுப் போன்று
36-1-பொதும்பு உறு தீப்போல் புகைந்து எரிய
37-4-வரை சேர்ந்து அடர்ந்து என்ன
38-3 - விரிந்தே எரியும் சுடர் அனையாய்
40-1- வலைத்தலை மான் அன்ன நோக்கியர்
44-2-விழுது அனையேனை
46-1-பலாப் பழத்து ஈயின் ஒப்பாய்
48-1-தாரகை போலும் தலைத்தலைமாலை.

7. திருவெம்பாவை.
3-1-முத்தன்ன வெண்நகையாய்
7-2- தீ சேர் மெழுகு ஒப்பாய்
7-4 - வன் நெஞ்சப் பேதையர் போல்
11-2 - ஆர் அழல் போல் செய்யா
18-1 - விண்ணோற் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்

8. திரு அம்மானை

4-2-தாய்போல் தலை அளித்திட்டு
14-2-தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து
18-1-கிளிவந்த மென் மொழியாள்

9. திருப் பொற் சுண்ணம்

2-2-மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்
7-4-ஆடக மாமலை அன்ன.

10. திருக்கோத்தும்பி

3-1-தினைத்தனை உள்ளதோற் பூ
4-1-கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு
10-1 நுந்து கன்றாய் இங்கிருந்து
10-3 தாய் உற்று வந்து

11. திருத் தெள்ளேணம்

7-3- பூ ஆர் அடி
8-1 கறங்கு ஓலை போல்வது ஓர் காயப் பிறப்பு இறப்பு
9-1- கல்நார் உரித்து என்ன
9-2 -பொன் ஆர் கழல்
9-3- மின் நேர் நுடங்கு இடை
10-2- புனவேய் அன வளைத்தோளி.

13. திருப்பூவல்லி

17-2-பொன் ஆர் திருவடி
20-4-பூ ஆர் கழல்

15. திருத்தோள் நோக்கம்
3-1 பொருள் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்க
4-1-கல் போலும் நெஞ்சம்
4-2-கருணையினால் நிற்பானைப் போல.

16. திருப் பொன் ஊசல்
2-5-குலமஞ்ஞை போன்ற அங்கு அன நடையீர்
3-5 மின் ஏறும் மாடவியல் மாளிகை
7-4-அன்னத்தின் மேல் ஏறி ஆடும். அணி மயில்போல்
7-6-பொன் ஒத்த பூண் முலையீர்.

18. குயில் பத்து
4-4 மான் பழித்து ஆண்ட மென் நோக்கி
5-1 சூழ் சுடர் ஞாயிறு போல.
6-3 பொன் மணிச் சுவடு ஒத்த நல்பரிமேல்வருவான்
10-4 செந்தழல் போல் திருமேனி

20. திருப்பள்ளி எழுச்சி
8-3 செந்தழல் புரை திருமேனி.

21. கோயில் மூத்த திருப்பதிகம்
5-2 இரைதேர் கொக்கு ஒத்து
5-4 பிரை சேர் பாலின் நெய் போல்

22. கோயில் திருப்பதிகம்
5-3 சிறை பெறா நீர் போல் சிந்தைவாய்ப்பாயும்
7-1 உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று

23. செத்திலாப்பத்து
4-1 தழல் உறு மெழுகு ஆம் என்பு
4-3 வன்பராய் முருடு ஒக்கும் என் சிந்தை.

24. அடைடக்கலப் பத்த
1-1 செழுக் கமலத் திரள் அன
5-3 மான் அன்ன நோக்கி தன் பங்க
6-2 வன்மத்து இட உடைந்து தாழியைப் பாவு தயிர்போல்
8-1 மாவடு வகிர் அன்ன கண்ணி
8-3 பா இடை ஆடு குழல் போல்
10-3 தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர்

25. ஆசைப்பத்து
5-2 யாக்கை புளியம்பழம் ஒத்து இருந்தேன்
8-3 அழல் சேர் மெழுகு ஒப்ப
10-1 வெம் சேர் அனைய கண்ணார்
10-3 பஞ்சு ஏர் அடியாள்

26. அதிசயப் பத்து
9-1 நறுமலர் எழுதரு நாற்றம் போல

27. புணர்ச்சிப்பத்து
2-3 ஊற்று மணல் போல்
8-3 செக்கர் போலும் திருமேனி

28. வாழாப்பத்து
5-1 பண்ணின் நேர் மொழியான் பங்க
8-2 செந்தழல் போல்வாய்

29. அருட்பத்து
1-2 பால்கொள் வெண்ணீற்றாய்
5-1 துடி கொள் நேர் இடையாள்
6-1 ஒளி வயிரத்து ஒப்பனே
7-2 கடும் தழல் பிழம்பு அன்ன மேனிச் செய்யனே

32. பிரார்த்தனைப் பத்து
4-3 தூண்டா விளக்கின் சுடர் அனையாய்
7-1 கடலே அனைய ஆனந்தம்.
10-2 தோளாச் சுரை ஒத்தால்
11-2 வற்றல் மரம் போல் நிற்பேனோ.

33. குழைத்த பத்து
2-2 கொடி ஏர் இடையாள்
3-3 குன்றே அனைய குற்றங்கள்
4-1 மான் நேர் நோக்கி மணவாளா.
7-2 குன்றே அனையாய்

34. உயிர் உண்ணிப் பத்து
1-1 அரவு ஏர் அல்குல் உமை
2-1 ஒரு நாயக்குத் தவிசு இட்டு
6-1 கடலின் திரை அதுபோல் வரு கலக்கம்
9-3 செச்சை மலர் புரை மேனியன்.

35. அச்சப்பத்து
4-1 கிளி அனார் கிளவி
10-3 வாள் நிலாம் கண்கள்

36. திருப்பாண்டிப் பதிகம்
2-2 கதிரை மறைத்து அன்ன சோதி

37. பிடித்தபத்து
2-2 மண் ஆய் முழுப் புழுக்குரம்பையில் இடந்து

38. திருஏசறவு
1-1 இரும்பு தரு மனத்தேனை
5-4 பொன் தவிசு நாய்க்கு இடும் ஆறு

6-1 பஞ்சாய ஆடி மடவார்
6-2 நஞ்சாய துயர்
9-3 தடம் கடலில் படிவு ஆம் ஆறு.

39. திருப்புலம்பல்
1-2 கோங்கு அலர் சேர் குவிமுலையாள் கூறா
3-4 கற்றாவின் மனம் போலக் கசிந்துரு

40. குலாப்பத்து
2-1 துடிஏர் இடுகு இடை.
10-1 கொம்மை வரி முலைக் கொம்பு அனையாள்.

41. அற்புதப் பத்து
9-1 புழுந்து அலைநாய் போல.

44. எண்ணப் பதிகம்
1-2 செங்கமல மலர் போல ஆர் உருவாய என் ஆரமுதே
4-3 முத்து அனையானே! மணி அனையானே!

45. யாத்திரைப்பத்து
2-3 நாயே அனைய நமை
7-2 பொற்பால் ஒப்பாம் திருமேணி
8-3 திருமாமணி சேர் மணிக்கதவம்

47. திருவெண்பா
3-3 உறையுள் வேல் மடுத்து என் சிந்தனைக்கே கோத்தான்

49. திருப்படை ஆட்சி
2-2 கன்றை நினைந்து எழு தாய் என
3-3 சேல் அன கண்கள்
6-1 பொன் இயலும் திருமேனி
6-2 மின் இயல் நுண் இடை.
7-3 வில் இயல் நன் நுதலார்

50. ஆனந்த மாலை
1-1 மின்நேர் அனைய பூங்கழல்
1-2 பொன்நேர் அனைய மலர்
1-3 கல்நேர் அனைய மனம்
3-2 தோலின் பாவைக் கூத்தாட்டாய் சூழன்று விழுந்து கிடப்பேனை

51. அச்சோப்பதிகம்
5-1 பஞ்சாய அடி மடவார்
7-2 பாசம் எனும் தாழ்
8-1 சாதல் பிறப்பு என்னும் தடம் சுழி

திருவாசகத்தில் மாணிக்க வாசகப் பெருமான் எடுத்தாண்டுள்ள – உவம உருபு தொக்கிநிற்கும் வகையிலான உவமைகள்.

சிவபுராணம்	பதிகம் -வரி		
சிவராணம்	1-8	-	பூங்கழல்கள்
	1-32	-	பொன்னடிகள்
	1-56	-	விலங்கு மனம்
கீர்த்தித்திரு அகவல்	2-13	-	பால்மொழி
	2-15	-	கிஞ்சுக வாய்
	2-33	-	தழல் மேனி.
	2-76	-	படிமப்பாதம்
	2-92	-	அழல் உரு.
திரு அண்டப் பகுதி	3-64	-	குவளைக்கண்ணி
	3-87	-	இருவினை மாமரம்
	3-103	-	அமைத்தோளி
	3-135	-	வாள்றுதல்
	3-168	-	பால்கடல்
போற்றித்திருஅகவல்	4- 9	-	மலர் அடி
திருச்சதகம்	5-9-1	-	மதிக்கண்ணி
	5-25-3	-	மலர்க்கழல்கள்
	5-31-3	-	பிணநெஞ்சு
	5-32-3	-	பிணநெஞ்சு
	5-36-1	-	பொன்நகர்
	5-37-4	-	இரும்பு கல் மனம்
	5-39-1	-	மலர்த்தாள்
	5-45-3	-	தாமரைத்தாள்
	5-52-1	-	செம்பொன்பாதம்
	5-52-1	-	மலர்ப் பாதம்
	5-53-1	-	பொன்நகர்
	5-65-2	-	பொங்கு அரா அல்குல்
	5-65-2	-	கரிய வாள் கண்.
	5-80-1	-	இருப்பு நெஞ்சம்.
	5-93-2	-	கமலபாதன்
நீத்தல் விண்ணப்பம்	6-2-1	-	கொவ்வைச் செவ்வாய்
	6-11-1	-	மலர்த்தாள்
	6-11-4	-	பொன்மேனி
	6-15-3	-	பூங்கழல்

	6-33-2		மலர்த்தாள்
	6-35-2	-	முயல் கறையின் அரும்பு
	6-37-3	-	பொன்பாதம்.
	6-41-1	-	முதலை செவ்வாய்
	6-44-1	-	வேல் கண்ணியர்
	6-44-2	-	மலர்த்தாள்.
	6-50-2	-	செம்பவள வெற்பு
திருஎம்பாவை	7-1-1	-	வாள் தங்கண்
	7-1-3	-	போது ஆர் அமளி.
	7-2-2	-	நேரிழையாய், நேரிழையீர்.
	7-2-3	-	மலர்ப் பாதம்.
	7-4-1	-	கிளி மொழியார்.
	7-5-2	-	தேன் வாய்ப் படிறீ.
	7-12-4	-	பொன் பாதம்
	7-17-3	-	செங்கமலப் பொற்பாதம்.
	7-20-2	-	பொன்பாதம்
திருஅம்மானை	8-01-1	-	மலர்ப்பாதம்
	8-5-1	-	நாயேன்
	8-8-3	-	பொன்மேனி
	8-14-3	-	பூம் கழல்
திருப்பொன்சுண்ணம்	9-6-3	-	மலர்ப் பாதங்கள்
	9-8-1	-	வாள் தடங்கண்
	9-8-3	-	மலர்ப் பாதம்
	9-10-2	-	கயல் கண்.
	9-12-4	-	பைஅரவு அல்குல்
	9-13-1	-	மின் இடை
	9-14-2	-	செங்கனி வாய்
	9-15-4	-	பானல் தடங்கண்
	9-16-2	-	மலர்ப் பாதங்கள்
திருக்கோத்தும்பி	10-11-2	-	கல்நெஞ்சு
	10-17-4	-	மலர் அடி
	10-18-2	-	பால் வெள்ளைநீறு
திருத்தெள்ளேணம்	11-6-3	-	மாமலர்கண்கள்
	11-9-3	-	செந்துவர் வாய்
திருச்சாழல்	12-18-1	-	வாள் நுதலாள்
திருப்பூவல்லி	13-8-1	-	பொன் அடி.
	13-13-1	-	பொன் தாது

திருப்பொன்னூசல்	16-1-3	-	மலர்த்தாள், நாய் அடியேன்
	16-1-6	-	வேல்கண்
	16-2-2	-	மலர் அடிகள்
	16-2-6	-	அன நடையீர்
	16-8-1	-	கோலவரைக் குடுமி.
குயில்பத்து	18-3-2	-	கொடி மங்கை.
	18-5-4	-	சிந்துரச் சேவடி
	18-9-1	-	பொன் திகழ்மேனி
திருத்தசாங்கம்	19-5-1	-	கிஞ்சுக வாய்
	19-7-1	-	தேன் மொழி
	19-8-1	-	பால் மொழி
	20-1-1	-	பூங் கழல்
திருப்பள்ளிஎழுச்சி	20-2-1	-	மலர்த் திருமுகம்
கோயில்திருப்பதிகம்	22-6-2	-	கமலச் சேவடி
செத்திலாப்பத்து	23-1-1	-	புதுமலர்க் கழல் இணை.
	23-2-2	-	மலர் அடி
	23-4-3	-	மரக் கண்.
	23-9-2	-	பூங்கழல்
	23-9-3	-	மரக்கண்
அடைக்கலப்பத்து	24-6-2	-	தடமலர்த் தாள்
	24-7-1	-	மின் கண்
	24-8-1	-	மலர் அடி
ஆசைப்பத்து	25-4	-	மலர்ப் பாதம்
	25-6-2	-	மலர்ச் சேவடி.
	5-10-3	-	பவளத் திருவாய்
அதிசயப்பத்து	26-1-	-	ஒண்மலர்த் திருப்பாதம்
வாழாப்பத்து	28-4-1	-	வாள் அரக்கர்
அருட்பத்து	29-9-2	-	பொங்குவாள் அரவம்
திருக்கழுக்குன்றப்பதிகம்	30-7-3	-	மலர்க் கழல்
கண்டபத்து	31-3-4	-	நாய் அடியேன்
பிரார்த்தணைப்பத்து	32-5-2	-	கயல் கண்.
	32-8-2	-	திணி ஆர் மூங்கில் சிந்தை.
	32-8-4	-	தளிர்ப்பொன் பாதம்.
உயிர்உண்ணிப்பத்து	34-10-2	-	அடவி மரம் ஆனேன்
அச்சப்பத்து	35-7-3	-	நகை முகை
பிடித்தபத்து	37-7-2	-	பூங்கழல்
திருஏசறவு	38-9-1	-	மலர்ப்பாதம்

திருப்புலம்பல்	39-1-4	-	பூங்கழல்கள்
அற்புதப்பத்து	41-1-3	-	பொன் அடிஇணை
	41-2-3	-	பொன் கழல் இணை
	41-5-3	-	மென் மலர்க் கழல்
	41-7-2	-	பொன் கழல்
	41-7-3	-	மலர் அடி இணை
	41-9-3	-	மலர்க் கழல்
	41-10-2	-	கொண்டை அம்கண்கள்
	41-10-3	-	மலர்க் கழல்
சென்னிப்பத்து	42-1-4	-	மலர்ச் சேவடி
	42-2-4		
	42-2-4		
	42-2-4		
	42-5-2	-	வேய தோள்.
	42-5-4	-	மலர்ச் சேவடி
	42-6-2	-	பொன் கழல்
	42-6-4	-	மலர்ச் சேவடி
	42-8-3	-	மலர்க்கண்கள்
	42-8-4	-	மலர்க் சேவடி
	42-9-4	-	மலர்க் சேவடி
எண்ணப்பதிகம்	44-3-1	-	மலர் அடி
	44-6-1	-	பால் திருநீறு
யாத்திரைப்பத்து	45-2-1	-	பூங் கழல்கள்
	45-3-4	-	பொன் அடி
	45-7-2	-	பொன் அடி
	45-9-2	-	வேல்கண்
பண்டாய நான்மறை	48-3-3	-	கமல பாதம்
திருப்படை ஆட்சி	49-1-2	-	மலர்ப் பாதம்
	49-3-3	-	செந்துவர் வாய்
	49-4-3	-	மலர்ப்பாதம்
	49-5-1	-	மலர்ப்பாதம்
	49-8-3	-	செங்கயல் ஒண்கன்
ஆனந்த மாலை	50-1-1	-	பூங்கழல்கள்
அச்சோப்பதிகம்	51-4-3	-	சுண்ண வெண்ணீறு
	51-6-2	-	கொந்துகுழல் கோல்வளை

மாணிக்க வாசகப் பெருமான் திருவாசகத்தில் குறித்த விலங்குகளின் பட்டியல் பின்வருமாறு

1. சிவபுராணம்

வரி-	26	-	புழு ஆய்
	27	-	பல் விருகம் ஆகி, பறவையாய்ப் பாம்பாகி
	34	-	விடைப் பாகா
	53	-	புழு அழுக்கு மூடி
	56	-	விலங்கு மனத்தால்
	60	-	நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு

2. கீர்த்தித்திரு அகவல்.

வரி-	17	-	கேவேடர் ஆகிக் கெளிறு அது படுத்தும்
	25	-	ஏறு உடை ஈசன்
	27	-	குதிரையைக் கொண்டு குடநாடு அதன்மிசை
	29	-	விட்டேறு அருளி
	36	-	நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்
	38	-	பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
	45	-	குதிரைச் சேவகன்
	68	-	ஓரி ஊரின் உகந்து இனிது அருளி
	84.	-	ஈங்கோய் மலையில்
	89	-	கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும்
	116	-	பரிமாவின் மிசை பயின்ற வண்ணமும்
	127	-	நாயினேனை நலமலி
	141	-	பொலிதரு புலியூர் பொதுவினில்
	144	-	பொலிதரு புலியூர் புக்கு இனிது

3. திருஆண்டப்பகுதி

வரி-	19	-	கீடம் புரையும் கிழவோன் (கீடம்=புழு)
	31	-	ஏனத்தொல் எயிறு (ஏனம்=பன்றி)
	32	-	கானப் புலி உரி
	70	-	வாள் அரவு இரிய
	80	-	நீர் நசை தரவரும் நெடுங்கண் மான் கணம்

	91	-	மாப்புகைக் கரைசேர் வண்டு
	106	-	நச்சு அரவு
	155	-	கடக் களிறு
	158	-	ஏற்றார் மூதூர்
	164	-	தரியேன் நாயேன்
	172	-	குரம்பைதோறும் நாய் உடல் அகத்தே
	178	-	கனிதேர் களிறு
4. போற்றித்திரு அகவல்			
வரி -	6	-	கடுமுரண் ஏனம் ஆகி
	11	-	யானை முதலா எறும்பு ஈறுஆய
	14	-	ஈனம் இல் கிருமிச் செருவினில் பிழைத்தும்
	30	-	கார் மயில்
	37	-	மத்தக்களிறு என்னும் அவாவிடைப் பிழைத்தும்
	48	-	சுற்றம் என்னும் தொல் பசுக் குழாங்கள்
	56	-	உலோகாயதன் என்னும் ஒள்திறல் பாம்பின்
	73	-	கற்றா மனம் என
